Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 16/50

දිනමුරසු වාරමලර් ஜுலை 25-31, 2004

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 572



## எச்சரிக்கையுடன் இருக்க....

பின்வரும் விடயங்களில் ஒருவன் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

★ பண பலமும் மனித பலமும் படைத்த மனிதன் மனம் வைத்தால் விரும்பிய மாத்திரத்தில் உங்களுக்குத் தீங்கிழைக்கலாம். அவனுடன் பேசும்போது நீங்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். ஒருவேளை அவன் சொல்வதையெல்லாம் "ஆமாம்" என்று ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும்.

★ ஒரு நாய் உங்களைத் துரத்தும் போதோ, உங்களைப் பார்த்துக் குரைக்கும்போதோ நீங்கள் அமைதியாக நின்று சாந்தமாகப் பழகி அதனைச் சமாதானப்படுத்த வேண்டும்.

★ முரட்டுக் காளை உங்களை நோக்கிப் பாய்ந்தோடி வரும்போது நீங்கள் அமைதியான குரலெழுப்பி அதைச் சாந்தப்படுத்த வேண்டும்.

★ ஒரு குடிகாரன் உங்களை வீண் வம்புக்கு இழுக்கும்போது நீங்கள் அவன் மீது கோபமுற்று அவனது கோபத்தைக் கிளறி விடுவீர்களேயானால் உங்கள் குடும்பத்தின் பல தலைமுறையினரையும் இழிவாகப் பேசி உங்களையும் வாய்க்கு வந்தபடி திட்டுவான். நீங்கள் அவனிடம் "என்ன மாமா சௌக்கியமாக இருக்கிறீர்களா?" என்று குசலம் விசாரித்தால், அவன் மிக மகிழ்ந்து உங்களைப் போற்றத் தலைப்படுவான்.

- ஸ்ரீ ராமகிருஷ்ணர்

# ஆன்மீகம்



## மாயை மாயை எல்லாம் மாயை

வேத புத்தகம் இவ்வாறு எம்மை எச்சரிக்கிறது. இவ்வுலகத்தின் உல்லாசமான வாழ்க்கை எம்மை தேவனை மறக்கச் செய்கின்றது. அவர் வழிகளில் நடப்பதைத் தடுக்கின்றது. கடமைக்காக தேவனைத் தேடினாலும், உள்ளத்தால் அவரைத் தூரமாக்கியே ஜீவிக்கும் தமது பிள்ளைகளைக் குறித்த மனப்பாரத்தின் வார்த்தைகளை ஏசாயா 1:11-20 வரை வாசிக்கலாம். கடமைக்காகச் செய்யும் தேவ பணிவிடைகளை அகற்றிவிட்டு, முதலாவது எம்மை தேவன் தாமே சுத்திகரிக்க இடமளிப்போமாக! தேவன் தங்கும் ஆலயமாக எமது சரீரங்களை ஒப்புக்கொடுப்போமாக! (1 கொரி - 3:16,17) உலகத்தில் இருந்தாலும் நாம் உலகத்தாரல்ல என்பதைப் புரிந்து, ஜீவித்து உண்மையாகவே மனந்திரும்பி, தேவனுக்குகந்தவர்களாக, இம்மாய உலகில் தேவனுக்கு சாட்சிகளாக ஜீவிப்போமாக!

- போதகர் ஜோ. வேதமுத்து, கொச்சிக்கடை.


## மறுமை நாள்

"நபி (ஸல்) அவர்கள் தோழர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது கிராமப்புறத்தைச் சேர்ந்த தோழர் ஒருவர் அவர்களிடம் வந்து, "மறுமை எப்போது வரும்?" என வினவினார். நபி (ஸல்) அவர்கள் (அவரது வினாவுக்குப் பதில் அளிக்காமல்) தமது உரையாடலைத் தொடர்ந்தார்கள். அப்போது சிலர் 'அண்ணலார் அவர் தொடுத்த வினாவை செவிமடுத்திருப்பார்கள். என்றாலும் அவர் தொடுத்த வினாவை வெறுத்து இருக்கக் கூடும்' என தமக்குள் கூறிக் கொண்டனர். வேறு சிலர் 'நபியவர்கள் அந்த வினாவை செவிமடுக்கவில்லை' எனக் கூறி முடிப்பதற்குள் தனது உரையாடலை நிறைவு செய்த நபியவர்கள், "மறுமை நாள் பற்றி வினாத் தொடுத்தவர் எங்கே?" எனக் கேட்டார்கள். அப்போது அவர் "அல்லாஹ்வின் தூதரே! இதோ! நான் இங்கே இருக்கின்றேன்" என்றார். "அமானிதம் வீணாக்கப்படும்போது மறுமையை (அழிவை) எதிர்பார்ப்பீராக" என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். "அமானிதம் எவ்வாறு வீணாக்கப்படும்?" என அவர் மீண்டும் கேட்டார். அதற்கு நபியவர்கள் "ஆட்சியதிகாரம் தகுதியில்லாதவர்களிடம் ஒப்படைக்கப்படும்போது மறுமையை எதிர்பார்ப்பீராக" என விளக்கமளித்தார்கள்"

(ஆதாரம் : புகாரி)

– எம்.எச்.எம். ஆஸாத், பாலமுனை – 03.

## கவிதைப் போட்டி இல.569



### பரிசுக்குரிய கவிதை

### பிரதிபலன்

கள்ள வாக்கு
போடச் சொன்னவனுக்கு
கிடைத்தது பாராளுமன்ற
கதிரையில் இடம்!
கள்ள வாக்கு
போட்ட எனக்கு
கிடைத்தது குற்றவாளி
கூண்டில் இடம்!

– த. நகுலேஸ்வரன்,
சிவாநந்தா தேசிய பாடசாலை,
மட்டக்களப்பு.

**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### விசாரணை

ஜனநாயகத்திற்குள் வர் விரும்பும்
தீவிரவாதிகளுக்கு உதவியதற்காகவும்
சில நல்லவர்களும் இப்படி
விசாரிக்கப்படலாம்!
ஜனநாயகம் பெயரளவில்
மட்டுமே உள்ள நம் நாட்டில்!

– ஏ. விமல்சன்,
41, டாம் வீதி,
கொழும்பு – 12.

### சொல்லவா....?

"கேள்விகள் ஆயிரமாயிரம்....
பதில் சொல்லாவிட்டால்.....
பேனா தீர்ப்பு – இங்கே
பதில் சொல்லி விட்டால்
துப்பாக்கித் தீர்ப்பு – அங்கே."

– அ. ரவி,
515/76, பூம்புகார் வீதி,
மட்டக்களப்பு.

### நாடக மேடை

உண்மையை
பொய்யாகவும்
பொய்யை
உண்மையாகவும்
நடித்துக் காட்டும்
நாடக மேடை.

– எஸ்.பி.பி.
கணேஷ்,
தாண்டியடி.

## கவிதைப் போட்டி இல.572



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 31.07.2004

கவிதைப் போட்டி இல.572
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### நீதிக்கு முன்

ஊழல் ஊழல் ஊழல் எங்கும் ஊழல்
எதிலும் ஊழல்
கோடி கோடியாய் கொள்ளையடித்தால்– அது
முன்னால் அமைச்சரானாலும் சரி
இன்னால் அமைச்சரானாலும் சரி
கோர்ட்டுக்கு வந்துதான் ஆகவேணும்.

– வ. சந்திரபிரசாத்,
மாமாங்கம்.

### திண்டாட்டம்

உண்மையைச் சொன்னால்
மறு கணமே
மனைவி உயிர் – பறிபோகும்.
பொய் சொன்னால்
பொலிஸ் உதைப்பான்.
எதைச் சொல்வது
என்றா திண்டாட்டம்.

– பீ. சாருஹாந்,
தாண்டியடி.

### காலம் வரும்

அப்பாவிகளை நசுக்கி
சுகம் காணும் நயவஞ்சகர்கள்
குற்றவாளிக் கூண்டில்...
துப்பாக்கி முனையில் நின்று
பதில் சொல்லும் காலம்...
என்றோ ஒரு நாள் வரும்.

– எஸ்.பீ. செல்வன்,
ஈவினை,
யாழ்ப்பாணம்.

### பாதிப் பஞ்சாயம்

கேள்வி மேல் கேள்வி
கேட்டாலும்...
என்ன பயன்?
உண்மை உறங்கிய
உங்கள் பூமியில்
மரண தண்டனை
மலிந்த பூமியில்
கேள்வி மேல் கேள்வி
கேட்டுத்தான்
என்ன பயன்?

– சி. புலேந்திரன்,
பாலமுனை,
மண்டூர்.

### நீதியில்லா தீர்ப்புக்கள்

"வேலியில்லா
பயிர்கள்,
வீதியில்லா
கிராமங்கள்,
நீதியில்லா
தீர்ப்புக்கள்,
கோர்ட்டுக்கு
மட்டுமல்ல;
நாட்டுக்கும்
ஏற்றதல்ல!"

– நா. ஜெயபாலன்,
பிபிலை.

### கௌரவம்

கோர்டு, கச்சேரி ஏறாமல்
வாழ்வது
அந்தக் கால கௌரவம் –
அவ்விடமெல்லாம்
ஏறி வாழ்வது
இந்தக்கால கௌரவம்.

– றெ.பி. மரியடினேசன்,
கங்காணி தீவு,
நானாட்டான்.

### இன்னொரு தண்டனையா?

இவ்வுலகப் பிறப்பே – ஒரு
மரண தண்டனை தானே!
இவர்களுமா உன்னைத் தண்டிக்க
வேண்டும்!

– றிஷீ,
சாய்ந்தமருது – 09.



### செழித்தோங்கும் முரசே!

வியாழன் தோறும் வந்து
பல்லாயிரக்கணக்கான வாசக
நெஞ்சங்களைக் கவர்ந்து
தன்னகத்தே வைத்திருக்கும்
முரசே!
நீ சுமந்து வரும் அனைத்துத்
தகவல்களும் சூப்பரோ சூப்பர்.
வாசக நெஞ்சங்களுக்கேற்ப
தகவல்களைச் சுமந்து
அகிலமெங்கும்
செழித்திடும் என் முரசுக்கு
புதிய வாசகனின்
வாழ்த்துக்கள்.
நன்றி

– கே. மேகசுதன்,
தேவாலய வீதி,
திருக்கோவில் – 02.

## வாசக[ர்] சாலை

பக்கங்களைப் பார்த்தபொழுது தகவல் பெட்டியில் 'கருக்கலைப்புச் செய்வோர் கவனத்திற்கு....' என்ற கட்டுரை மெய்சிலிர்க்க வைக்கிறது! மனித உயிரை கருவிலே அழிக்கும்போது எப்படி வேதனை அடைந்து அவை கரைகின்றன என்ற விதமும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் எவ்வாறு நிகழ்கின்றன என்பதை சித்திரிக்கும் விதமும் இனி எவரையும் அவ்வாறான தவறைச் செய்யத் தூண்டாது. போலிகளைக் கண்டு ஏமாறாது புத்திசாலித்தனமாகச் செயற்பட வேண்டும் என்பதை துல்லியமாகச் சொல்லும் பாப்பா முரசு சிறுவர் கதை மிகவும் நன்றாகவுள்ளது! 'மக்களின் பாதுகாவலன் மகேஸ்வரனுக்கு உயிர் ஆபத்து' கட்டுரையில் அவரின் உள்ளக்குமுறலை வெளிப்படுத்திய வித்தியாவின் விளாசல் பிரமாதம். கொள்ளுப்பிட்டி குண்டுதாரியின் விடயங்களைத் தெளிவாக எந்தவொரு பத்திரிகையும் வெளியிடவில்லை. ஏதோ ஓரிரு வரிகளில் மூடி மறைத்தபோதும், அவரின் புகைப்படத்தோடு பிரசுரித்து அவருடைய ஒவ்வொரு அசைவையும் அப்படியே கூறி அச் சம்பவத்தை நேரில் பார்த்தது போன்ற உணர்வினை எமக்குத் தந்த மதியூகிக்கு ஒரு ஓ போட்டுக்கொண்டு - தொடர்ந்தும் இப்படியான பல சம்பவங்களை எமக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தும் தினமுரசுக்கு வாழ்த்துக் கூறி விடை பெறுகிறேன்.

– இலக்கியா.

### வாசகர்களைச் சிந்திக்க வைக்கிறது தினமுரசு!

பெயருக்கேற்றாற்போல்
குரல் கொடுக்கிறது தினமுரசே!
கதை, கவிதை, கட்டுரை போன்ற
காத்திரமான ஏனைய பற்பல
அம்சங்களோடு தனித்து விளங்குகிறது
முரசே!
மற்றவர்கள் மட்டுமல்லாது
எம்மவர்களின் மறு பக்கத்தையும்
புரட்டிக் காட்டி கூடவே எதையும்
நேருக்கு நேர் துணிந்து கூறி
வாசகர்களை வித்தியாசமான வடிவில்
சிந்திக்க வைக்கும் தினமுரசு!
வாசகர்களாகிய எங்கள் விசேட
பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்
உரித்தாகட்டும்!

– கலைப்பூங்கா
கே. எல். ஹில்மி,
134/A ஹாஜா லேன்,
சாய்ந்தமருது – 13.

### வண்ண முரசே!

பார்த்துப் பார்த்து
கண்கள் பூத்திருப்பேன்
நீ வருவாய் என.
உன்னைக் கண்டவுடன்
இதயம் அது மலர்கிறது.
இனிய பல அம்சங்கள்
எம்மை இரசிக்க
வைக்கிறது.
சிறுவர் முதற் பெரியோர்
வரை
பயனடையும் விடயங்கள்
கவிதை, கட்டுரை முதற்
கொண்டு
இராசி பலன் வரை
வீட்டிலிருந்துகொண்டே
நாட்டின் பல
செய்திகளை
அறிந்திட உதவுவாயே
இன் சுவை ததும்பி வர
இணையிலா முரசே
வாழ்க!

– கிருஷாந்தி,
உடுப்பிட்டி.

# உங்கள் பக்கம்

### சது/ நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயம் மாகாண கல்வி அமைச்சால் புறக்கணிப்பு

சம்மாந்துறை வலயத்திலுள்ள நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயம் கடந்த ஒன்றரை வருடகாலமாக நிரந்தர அதிபர் நியமிக்கப்படாமல் உள்ளது. தற்காலிக (கடமை நிறைவேற்று அதிபர்) அதிபராகக் கடமையாற்றுபவரும், அவரது உறவினர்களான சில ஆசிரியர்களும் இங்கு க.பொ.த உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவிகளை தகாத வார்த்தைகளைப் பிரயோகித்து மாணவிகளின் மனம் பாதிக்கப்படும் வகையில் நடத்துகின்றனர். பாதிக்கப்பட்ட உயர்தர வகுப்பு மாணவிகள் ஒரு வாரம் பாடசாலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு இது தொடர்பாகக் கல்வி அதிகாரிகளுக்கும் அறிவித்தனர். இதை விசாரிப்பதற்காக வருகை தந்த சம்மாந்துறை வலயக் கல்வி அதிகாரிகள் இருவர் பக்கசார்பான முறையில் நடந்து கொண்டதுடன் தற்போதைய அதிபரையும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களையும் காப்பாற்றும் வகையில் நடந்து கொண்டனர்.

மாணவர்களினால் அதிபர் மீதும் ஆசிரியர் மீதும் முன்வைக்கப்பட்ட ஆதாரபூர்வமான பல குற்றச்சாட்டுக்கள், விசாரணை செய்த உதவிக் கல்விப் பணிப்பாளர்களினால் நிராகரிக்கப்பட்டன. இது விடயமாகப் பல முறைப்பாடுகளைக் கொடுத்தும் கல்வி அலுவலகமும் மாகாணக் கல்வி அமைச்சும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதற்கு தற்காலிக அதிபரின் பண பலத்துடன் பல பின்னணிக் காரணங்களும் உண்டென மக்கள் கூறுகின்றனர். 1 AB தரமுடைய இப் பாடசாலையிலிருந்து தற்காலிக அதிபரை இடமாற்றம் செய்துவிட்டு அதிபர் தரமுடைய அதிபரை உடன் நியமிக்குமா? அல்லது மாகாண சபை கல்வி அமைச்சு மீண்டும் புறக்கணிக்குமா?

– நா. மகாலிங்கம்,
நாவிதன்வெளி.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# செப்டெம்பரில் இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம்!

# இறுதித் தயாரிப்பு முயற்சிகளில் இரு தரப்பும் தீவிரம்

இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் அநேகமாக செப்டெம்பர் மாத ஆரம்ப வாரத்தில் கைச்சாத்திடப்படலாமென்று கொழும்பிலுள்ள பாதுகாப்பமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ புதுடில்லிக்கு மேற்கொண்ட மூன்று நாள் விஜயத்தின்போது பொருளாதார விடயங்களுக்கப்பால் பாதுகாப்பு விடயங்கள் குறித்தும் கவனஞ் செலுத்தினாரென்று அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்குடன் கடந்த 19ஆம் திகதி பிரதமர் ராஜபக்ஷ நடத்திய கலந்துரையாடலின்போது இது குறித்து அக்கறை செலுத்தப்பட்டதாகவும் உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்த செயற்பாடுகளை துரிதப்படுத்த இரு தரப்பினரும் இணங்கியதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் கூறின. ஏற்கெனவே இவ்வொப்பந்தம் தொடர்பான விதிமுறைகளை இரு நாட்டு அரசாங்கங்களும் பரிமாறிக்கொண்டமை குறிப்பிடத் தக்கது. இந்தியாவில் பாரதிய ஜனதாக் கட்சி அரசாங்கமும் இலங்கையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும் ஆட்சியிலிருந்தபோது இந்த ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதற்கான ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அப்போது அமைச்சராகவிருந்த மிலிந்த மொறகொட அவர்கள் முன்னாள் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் மிஸ்ராவைப் புதுடில்லியில் சந்தித்து இது தொடர்பான முன்னோடிப் பேச்சுக்களை நடத்தியிருந்தார். பின்னர் கடந்த வருடம் நவம்பர் நான்காம் திகதி ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பைக் கையேற்றதையடுத்து முன்னாள் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல இந்தியா சென்று இது தொடர்பான சில ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டமை குறிப்பிடத் தக்கது. இதற்கு இணங்க பலாலி விமானத் தளத்தை நாற்பது கோடி ரூபா செலவில் புனரமைக்கும் ஆரம்பப் பணிகளில் இந்தியப் பொறியியலாளர்கள் ஏற்கெனவே ஈடுபட்டனர். இந்த உத்தேச பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்த விதிகளின்படி இரு நாடுகளுக்குமிடையில் புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளுதல், இரு நாடுகளுக்குமிடையிலான கடற்பரப்பில் கூட்டு ரோந்து நடவடிக்கை, இந்திய இராணுவப் பயிற்சிக் கல்லூரிகளில் இலங்கைப் படையினருக்குப் பயிற்சிகள் அளித்தல், இலங்கை ஆயுதப்படைகளுக்குப் படைக்கலங்களை வழங்குதல் போன்றவை உட்படப் பல சரத்துகள் உள்ளடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. இரு நாடுகளிலும் சில மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்தும் இந்த உத்தேச ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஒப்பந்தம் குறித்து காங்கிரஸ் அரசாங்கத்தின் புதிய தேசிய பாதுகாப்பு ஆலோசகரான ஜே.என்.தீக்ஷித்தும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் விரிவாக ஆலோசனைகளை நடத்தினரென்று புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன. இந்திய அமைதிப்படை இலங்கையின் வடக்கு - கிழக்கில் தங்கியிருந்த காலத்தில் கொழும்பில் இந்திய உயர் ஸ்தானிகராகக் கடமையாற்றிய தீக்ஷித் கடும் போக்காளரென வர்ணிக்கப்படுவது இங்கு குறிப்பிடத் தக்கது. இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிட வேண்டுமென இலங்கை அரசு, புலிகள், ஹெல உறுமய, ஜே.வி.பி. உட்பட சகல கட்சிகளும் வற்புறுத்தி வருவதும் சுட்டிக்காட்டத் தக்கது. எனினும் இந்த உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தத்தைப் புலிகள் கடுமையாக விமர்சித்து வந்தாலும் சமாதானப் பேச்சுவார்த்தையை துரிதப்படுத்த இது உதவுமென அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## போலி அடையாள அட்டைகள்

கொள்ளுப்பிட்டித் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்திய யுவதிக்கும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட சத்தியலீலா செல்வகுமார் என்ற பெண்மணிக்கும் போலி அடையாள அட்டைகள், தேசிய ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரிகளின் ஒத்துழைப்பொடு வழங்கப்பட்டிருப்பதாக இரகசியப் பொலிஸ் அத்தியட்சகர் டீ.எஸ்.ஐ. சமரதுங்கா கொழும்பு பிரதம மாஜிஸ்ரேட் திருமதி சரோஜினி குசலா வீரவர்த்தன முன்னிலையில் நடைபெற்ற விசாரணையின் போது தெரிவித்தார்.பெருமளவு பணச் செலவில் இந்த அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பாகக் கைது செய்யப்பட்ட நால்வர் (தமிழர்களல்லர்) ஆகஸ்ட் மூன்றாம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் குறிவைத்துத் தாக்க எடுக்கப்பட்ட இந்த முயற்சி தற்கொலைக் குண்டுதாரியின் சந்தேகத்துக்கிடமான நடவடிக்கையையடுத்து தவிர்க்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## மனித உரிமை செயலகம் நம்பிக்கைக்குரியதா?

மட்டக்களப்பில் பிரபா அணிப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான இலுப்படிச் சேனையில் தேசத் துரோகிகளென்ற குற்றச்சாட்டின்பேரில் கடந்த எட்டாம் திகதி கருணா அணியைச் சேர்ந்த இரு உறுப்பினர்களைச் சுட்டுக் கொன்ற புலி உறுப்பினர்கள், மறுநாள் ஒன்பதாம் திகதி கிளிநொச்சி கரடிப்போக்கு என்ற இடத்தில் மனித உரிமைகள் செயலமர்வு நடத்தியிருப்பது குறித்து, இந்த நிகழ்வில் கலந்துகொண்ட மாலதி என்பவரிடம் மனித உரிமை ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இது குறித்து இலுப்படிச்சேனையிலிருந்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு தெரிவித்துக் கடிதமொன்று கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. புலிகளின் இந்த மனித உரிமைகள் செயலகத் திறப்பு விழாவில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களான ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், புலிகளின் மனித உரிமை ஆர்வலரெனக் குறிப்பிடப்பட்ட செல்வி என். மாலதி உட்படப் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர். படுகொலை செய்யப்பட்ட பாலசுந்தரம் ஸ்ரீதரன் (வயது 23), தில்லையம்பலம் சுந்தரராஜன் (வயது 24) ஆகிய இருவரும் சிந்திய பச்சை இரத்தம் காய்வதற்கு முன்னதாகவே கிளிநொச்சியில் மனித உரிமைகள் செயலமர்வை நிறுவியிருப்பது ஏமாற்றம் தருகிறதென அக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு, இப் படுகொலைகள் குறித்து விசாரணை நடத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது. இந்த இருவரையும் அவர்களது வீடுகளுக்குச் சென்று புலிகள் கைதுசெய்தமை எந்தளவுக்கு நியாயமானதென்றும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

## கும்பகோணம் தீயில் பாலகர்களோடு மனிதநேயமும் கருகியதா?

### அனுதாபச் செய்தியில் ஈ.பி.டி.பி.

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் அரச உதவி பெறும் கிருஷ்ணா தொடக்கப் பள்ளியில் தொண்ணூறு குழந்தைகள் கொடு நெருப்பில் கருகி மாண்டமை நெஞ்சை நெக்குருகச் செய்யும் வேதனையான சம்பவமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது. இவ் வளாகத்தில் அமைந்துள்ள முதலாம், இரண்டாம் மாடிகளில் உயர்நிலைப் பள்ளி வகுப்பறைகளும் ஓலைகளால் வேயப்பட்ட மூன்றாம் மாடியில் பாலகர்களுக்கான வகுப்புகளும் நடத்தப்பட்டிருக்கின்றன. குறுகிய படிக்கட்டினூடாகத் தப்பியோட முடியாமல், ஓலைக் கீற்றுக் கொட்டகை குழந்தைகளின் தலைமேல் விழுந்தபோது எழுந்த குழந்தைகளின் அவலக் குரல்களைக் காதில் போட்டுக்கொள்ளாது தமது உயிரைக் காப்பாற்றத் தப்பியோடிய ஆசிரியர்களின் மனிதநேயம் மரணித்துவிட்டதென்பது வேதனைக்குரியது. முழு இந்தியாவையுமே உலுக்கிய இந்த எரிநெருப்புச் சம்பவம் குறித்து சகல மனிதநேய சக்திகளோடு இணைந்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் அதிர்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறது. அந்தக் கொடு நெருப்புக்குள் துணிந்து புகுந்து தனது உயிரைத் துச்சமாக மதித்து ஐந்துக்கு மேற்பட்ட பாலகர்களைக் காப்பாற்றியபின் மரணத்தைத் தழுவிய சாதாரண தொழிலாளியின் முன்னுதாரணம், மனிதநேயம் இன்னும் சாகவில்லையென்பதைச் சுட்டிக் காட்டுகிறது என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

## மீசையும் போரும்

பிரபாகரன் மீசையோடு காட்சி தந்த காலங்களிலெல்லாம் அரசாங்க ஆயுதப்படையினருக்கும் புலிகளுக்குமிடையில் கடும் யுத்தம் நடந்திருக்கிறது என்று கூறுகிறார் மறவன்புலவு சச்சிதானந்தம் என்பவர். போர் நிறுத்தக் காலங்களில் சபாரி உடையில் மீசையில்லாமல் காட்சி தருவாரென்றும் கூறும் இவரது பேட்டி 12ஆம் திகதி 'ஆனந்தவிகடனி'ல் பிரசுரமாகியிருக்கிறது. இலங்கையின் தற்போதைய நிலையைப் பார்த்தால் போர் தொடங்கும் அபாயமிருக்கிறது என்று கூறும் இந்த இலக்கிய எழுத்தாளரை, அரசியல் விமர்சகரெனத் தவறாகக் குறிப்பிட்டிருக்கிறது அந்தத் தமிழக சஞ்சிகை.

## புத்தளத்திலும் புலி இயக்க மோதல்?

புத்தளம், கரம்பைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட தமிழ் இளைஞரின் சடலத்துக்கும் புலி இயக்க மோதலுக்கும் சம்பந்தமுள்ளதாவெனப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இப்பகுதியிலுள்ள இறால் பண்ணையொன்றிலிருந்து 35 வயது மதிக்கத்தக்க நபரொருவருடைய சடலத்தை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர். கடந்த 19ஆம் திகதி காலை புத்தளம் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்ட இந்தச் சடலம், தேத்தாப்பளையைச் சேர்ந்த செபமாலை மரியதாஸ் என்று இனம் காணப்பட்டுள்ளதாகப் புத்தளம் பொலிஸ் நிலைய குற்றப் புலனாய்வுப் பதில் பொறுப்பதிகாரி எஸ். கருணாதிலக தெரிவித்தார்.

இந்த இறால் பண்ணை ஊழியர்கள் வழங்கிய தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டதாகவும், அதன்போது சடலம் நீரினுள் அமிழ்ந்த நிலையில் காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன், சடலத்துக்கு அருகாமையில் மின் கம்பியொன்று அறுந்த நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவித்துள்ள பொலிஸார், இது ஒரு கொலையாக இருக்கலாமென்று தாம் சந்தேகிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

## ஆலயங்களுக்கு நிதியுதவி

களுத்துறை மாவட்டத்திலுள்ள சுமார் பதினைந்து இந்து ஆலயங்களின் புனர்நிர்மாணப் பணிகளுக்கென இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிதியை வழங்கியுள்ளார். பதுரெலிய, புளத்சிங்கள, ஹொரணை, மத்துகம, நேபொட, இங்கிரிய தோட்டப் பகுதிகளிலுள்ள இந்து ஆலய நிர்வாகிகளிடம் இதற்கான காசோலைகள் வழங்கப்பட்டன. மத்துகமவில் கடந்த ஒன்பதாம் திகதி அமைச்சின் ஆலோசகர் மகேஸ்வரி வேலாயுதம் இந்த நிதியை வழங்கினார்.

## தீகவாபி சர்ச்சை தொடர்கிறது

அம்பாறை உஹன பகுதியைச் சேர்ந்த தலயந்தாலவ என்ற இடத்திலுள்ள புத்த விகாரையொன்றின் மீது கடந்த 19ஆம் திகதி இரவு ஏழு மணியளவில் நடத்தப்பட்ட கைக்குண்டு வீச்சுத் தாக்குதலில் சமய வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இரு பெண்கள் உயிரிழந்தனர். வழிபாடு நடத்திக் கொண்டிருந்த தேரர் படுகாயமடைந்தார். சர்ச்சைக்குரிய தீகவாபி விகாரையின் சுற்றுமதிலை இடித்துச் சேதப்படுத்த முனைந்தார்களென்ற குற்றச்சாட்டின் பேரில் சிலர் கைதுசெய்யப்பட்ட சில மணி நேரத்துக்குள் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இப் பகுதியில் பதற்றம் நிலவுவதையடுத்து அம்பாறை மத்திய முகாம் பொலிஸார் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளனர்.

## குரங்குபாஞ்சான் மீண்டும் குமுறுகிறது

குரங்குபாஞ்சானில் முஸ்லிம்கள் மீளக் குடியேறுவதைத் தடுக்க வேண்டா மெனவும் அப் பகுதியிலுள்ள பள்ளிவாசலை இடித்துச் சேதப்படுத்த வேண்டாமெனவும் கிண்ணியா இளைஞர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பாக அந்த ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

குரங்குபாஞ்சான் எனும் முஸ்லிம்களின் பூர்வீகப் பகுதியில் புலிகள் புதிதாகத் தமது முகாமை அமைத்துள்ளதோடு, அங்கிருந்த பள்ளிவாசல் இடிக்கப்பட்டு வருகின்றது. கடந்த 13ஆம் திகதி மாட்டுவண்டிகளோடு காட்டுக்குச் சென்ற ஏழு முஸ்லிம்கள் கடத்திச் செல்லப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளனர். மாட்டுவண்டிகளை விடுவிப்பதற்காக கப்பம் கோரப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் 30ஆம் திகதி விறகு தேடிச் சென்ற முஸ்லிம்கள் பிடிக்கப்பட்டு கட்டாய வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதோடு, தொடர்ந்தும் குறித்த தினத்தில் வந்து ஊழியம் செய்யுமாறு அச்சுறுத்தப்பட்டுள்ளார்கள்.

புலிகள் உண்மையாகவே முஸ்லிம்களோடு சமாதானத்தை விரும்புபவர்களாக இருந்தால் முஸ்லிம்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் வன்முறைகளை நிறுத்த வேண்டும், முஸ்லிம்களின் பூர்வீகப் பகுதியான குரங்குபாஞ்சானில் முஸ்லிம்கள் மீளக் குடியமர்வதைத் தடுக்கக் கூடாது, பள்ளிவாசல் இடிக்கப்படுவதை உடனே நிறுத்த வேண்டும். முஸ்லிம்களிடம் வரி, கப்பம் அறவிடுதல் மற்றும் கடத்தல் என்பனவற்றை நிறுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## நீதிக்கும் ஆயுதபாணியான பொலிஸ் காவல்!

யாழ்ப்பாணத்தில் புதிய நீதிமன்றக் கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கென பிரதம நீதியரசர் சரத் என். சில்வா நாட்டிய அடிக்கல்லை அப்புறப்படுத்தியமை காடைத்தனமான செயலென்று யாழ். வெகுஜன முற்போக்கு அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. யாழ்ப்பாணத்தில் நீதி நிர்வாகம் நிலைநாட்டப்படுவதை விரும்பாத சக்திகளே இந்த அடாவடித்தன நடவடிக்கைகளில் ஈடுபட்டனரென்று கண்டனம் தெரிவித்திருக்கும் அறிக்கை, 'மாணவர் படை' என்ற பெயருக்குள் மறைந்திருக்கும் ஆசாமிகளைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டுமென்றும் கேட்டுள்ளது. பல்வேறு படைகளின் பெயரால் மிரட்டல்களும் அடாவடித்தனங்களும் தமிழ்ப் பகுதிகளில் அதிகரித்து வருவது கண்டிக்கத் தக்கது என்றும் அறிக்கை கூறுகிறது. உலக வங்கியின் 195 மில்லியன் ரூபா செலவில் இந்த நீதிமன்ற வளாகம் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது. இப்போது உத்தேச நீதிமன்ற வளாகப் பகுதியில் ஆயுதபாணிகளான பொலிஸார் காவலுக்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.

## மகேஸ்வரன் வீட்டில் கொள்ளை!

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் வெளிநாடு செல்லப் போவதாகப் பத்திரிகைகளுக்கு அறிவித்த கையோடு அவரது யாழ்ப்பாண வீட்டிலிருந்து பல இலட்சக் கணக்கான ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன. இது தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் கடந்த எட்டாம் திகதி புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏழாம் திகதி இரவு திருட்டு இடம்பெற்றுள்ளதாகப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தன்னைக் கொல்லச் சதி முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக மகேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பதற்கு சில மாதங்கள் முன்னதாகவே யாழ்ப்பாணம் செல்வதை நிறுத்தியிருந்தாரென்பது குறிப்பிடத் தக்கது.

## மட்டு. சிறைச்சாலைப் படுகொலைகள் நன்கு திட்டமிடப்பட்டவை;

## சேனாதியின் சகாவே கொலையாளி- சி.ஐ.டி.யினர் திடுக்கிடும் தகவல்கள்

மட்டக்களப்புச் சிறைச்சாலைக்குள் கருணா அணியைச் சேர்ந்த சச்சி மாஸ்டரையும், அவரது சகாவையும் சுட்டுக் கொன்ற புவிதரன் என்ற இளைஞர் புலிகளின் புலனாய்வுப் பிரிவில் முன்னர் அங்கம் வகித்தவரென்றும் திருட்டுக் குற்றச்சாட்டின் பேரில் இவர் சில மாதங்களுக்கு முன்னர் திட்டமிட்டுச் சிறைச்சாலைக்குள் அனுப்பிவைக்கப்பட்டாரென்றும் இரகசியப் பொலிஸார் நடத்திய விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. கரும்புலி தினத்தன்று (ஜூலை ஐந்தாம் திகதி) மட்டக்களப்பில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான புலிகளின் மட்டக்களப்பு நகர அரசியல் பொறுப்பாளர் சேனாதி கடந்த 13ஆம் திகதி காலமானார். இவர் காலமாகி 48 மணித்தியாலத்துக்குள் மட்டக்களப்புச் சிறைச்சாலைப் படுகொலைகள் நிகழ்ந்துள்ளமை கொலைகள் யாரால் திட்டமிடப்பட்டவை என்பதைத் தெட்டத் தெளிவாகக் காட்டுவதாகவும் இரகசியப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். சேனாதியோடு மிகவும் நெருங்கிய தொடர்புகொண்டிருந்த இந்த இளைஞர், சேனாதி மரணமான செய்தி கிடைத்ததும் கொலைக்குப் பொறுப்பானவர்களைப் பழிவாங்குவேனென்று சிறைக்குள்ளேயே பல கைதிகளிடம் கூறினாரென்றும் சில கைதிகள் விசாரணையாளர்களிடம் தெரிவித்துள்ளனர். சச்சி மாஸ்டரைக் கொன்றால், துறைநீலாவணையிலுள்ள புவிதரனின் பெற்றோருக்கு இருபது இலட்சம் ரூபா வழங்கப்படுமென்று புலிகளின் சிறப்புத் தளபதி ரமேஷ் எழுதிய கடிதத்தை சச்சி மாஸ்டருக்கே காண்பித்து அவரது நம்பிக்கைக்குரியவராகப் புவிதரன் திகழ்ந்தாரென்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சச்சி மாஸ்டரைக் கருணாவின் பேச்சாளரெனப் புலிகள் குற்றஞ்சாட்டியதையடுத்தே கொலை ஆயுதங்கள் சிறைக்குள் கடத்தி வரப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக இரகசியப் பொலிஸார் கூறுகின்றனர்.

சச்சி மாஸ்டரையும் அவரது சகாவையும் கொல்ல வேண்டிய வழிமுறைகள் பற்றியும் அதன் பின்னர் கொலையாளி நடந்துகொள்ள வேண்டிய விதம் குறித்தும் புவிதரனுக்கு ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கொலையை அடுத்து சிறைச்சாலைக் கூரை மீதேறி சுமார் நான்கு மணித்தியாலங்களாகத் தங்கியிருந்து, புவிதரன் விடுத்த கோரிக்கைகள் இதனை நிரூபிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸாரோ படையினரோ நெருங்கினால் தற்கொலைசெய்யப் போவதாக மிரட்டிய இவர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் வந்தால் மட்டுமே இறங்குவேனென்றும் தன்னை மட்டக்களப்புச் சிறைச்சாலையில் வைத்திருக்கக் கூடாதென்றும் அவர் விதித்த நிபந்தனைகள் இதனை நிரூபிப்பதாகவும் இரகசியப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## யாழ்ப்பாணத்தில் நடன, வயலின் இசை வகுப்புகள்

யாழ்ப்பாணத்தில் இசை மற்றும் நடனத் துறையை ஊக்குவிக்கும் நோக்கில் இந்து கலாசார அமைச்சு அப் பகுதியில் நடனம் மற்றும் வயலின் இசைப் பயிற்சி வகுப்புக்களை நடாத்த முன்வந்துள்ளது. மேற்படி பயிற்சி வகுப்புக்களை யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி ஆகிய பகுதிகளிலும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்து சமய அலுவல்கள் அமைச்சின் ஆலோசகர் மகேஸ்வரி வேலாயுதம் தெரிவித்தார்.

# முரசம்

## ஆழப் பதிந்த வடு 83 ஜூலைக் கலவரம்

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

இது ஜூலை மாதம். தமிழர்கள் ஆடித் திருவிழாக் கொண்டாடி மகிழும் ஆனந்தமான மாதம். ஆனால், இப்போதெல்லாம் ஜூலை என்று சொன்னாலே இலங்கைத் தமிழர் எவருக்கும் ஞாபகமும் வருவது 1983இல் நிகழ்ந்த ஜூலைக் கலவரங்களே. இலங்கைத் தமிழரின் வரலாற்றில் நிகழ்ந்த மிகப் பெரும் அனர்த்தம் அது. தமிழ் மக்களின் மனங்களில் நீங்காத வடுவாக ஆழப் பதிந்திருக்கும் நிகழ்வு அது. உலக நாடுகளனைத்தையும் இலங்கையின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்த கொடிய நிகழ்வு. தமிழ் மக்களை உலகெங்கும் சென்று அடைக்கலம் கோர வைத்த சம்பவம் அது. யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலியில் புலிகள் பதுங்கியிருந்து தாக்கிய தாக்குதலொன்றில் 13 இராணுவத்தினர் பலியானதைக் காரணமாகக் காட்டி அன்றைய ஜே.ஆர். அரசாங்கம் தமிழ் மக்கள் மீது பழி தீர்த்துக்கொண்டது. தமிழ் மக்களது கடைகள், வீடுகள் மட்டுமன்றி ஆட்களும் உயிரோடு கொளுத்தப்பட்ட அந்தக் கொடிய வன்செயலை அன்றைய அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகளும் வேடிக்கை பார்த்தபடி எதுவும் செய்யாதிருந்தன. இருக்க வைக்கப்பட்டன. உண்மையில் அது ஒரு அரச வன்செயலாகவே நிகழ்த்தப்பட்டது. இதன்போது சரித்திரத்தில் பதியப்பட்ட மற்றொரு மாபெரும் அநீதியும் நிகழ்ந்தேறியது. வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த 53 தமிழ் அரசியற் கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களைப் படுகொலை செய்யுமுகமாக சிறைக் காவலர்களாலேயே சிறைக் கதவுகள் திறந்து விடப்பட்டன. இது கலவரம் ஆரம்பித்த ஜூலை 23ஆம் திகதி ஒருமுறையும் ஜூலை 25ஆம் திகதி மறுமுறையுமாக இரு தடவைகள் நிகழ்ந்தேறியது. இச் சிறைப் படுகொலைகளின்போது தமிழ்ப் போராளித் தலைவர்களான தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் ஆகியோர் கொல்லப்பட்டனர். தனக்கு மரண தண்டனை வழங்கப்பட்டபோது, தனது கண்களைத் தமிழ் மகன் ஒருவனுக்குத் தானம் கொடுக்கும்படி கூறியதற்காகக் குட்டிமணியின் கண்கள் கூட இங்கே தோண்டி எடுக்கப்பட்டன.

இந்த மாபெரும் கொடுமை நிகழ்ந்துகொண்டிருந்தபோது, தொலைக்காட்சியில் தோன்றிய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தமிழ் மக்களைப் பார்த்து "போரென்றால் போர், சமாதானமென்றால் சமாதானம்" என யுத்தப் பிரகடனம் செய்தார். ஆனால், அன்று தொடங்கிய போர் இன்று வரை இன்னும் முடியவே இல்லை. பொறுப்பற்ற அரசியல் தலைவர்களின் இத்தகைய இறுமாப்புக்களாலும், கொடூரங்களாலும், அடக்குமுறைகளாலும் உண்மையில் சீரழிந்து போயுள்ளது இந்த நாடு. இதற்குப் பலியானவர்கள் பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள். போராடி மடிந்தவர்கள் தமிழ், சிங்கள இளைஞர்கள். ஆனால் எய்தியது எதுவுமில்லை. இந்த ஜூலைக் கலவரத்தின் ஞாபகங்கள் எமக்குப் பழைய பழியுணர்ச்சியைக் கிளறுவதற்காக மீட்கப்படுமாயின், அது வன்முறைகளைத் தத்தெடுத்துக்கொள்ளவே வழிகோலும். நாம் வன்முறைகளுக்கு நிரந்தரமான ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். வன்முறைகளால் அழிவைத் தவிர எதையுமே எய்த முடியாது என்பதற்கான எடுத்துக்காட்டாகவே இந்த ஜூலைக் கலவரங்களின் ஞாபகங்கள் உணரப்படல் வேண்டும். நிரந்தர சமாதானமொன்றுக்கான அவசியத்தை நாம் இவ்வேளையில் முன்னிறுத்துவோமாக!

ஜூலைக் கலவரத்தில் மடிந்தவர்களுக்கும் வெலிக்கடைச் சிறையில் கொலையுண்ட தமிழ்ப் போராளிகளுக்கும் எமது அஞ்சலிகள்!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

**நரன்**

# மீண்டும் யுத்தம் வந்தால் யாருக்கு நட்டம்?

மீண்டும் யுத்தம் வந்துவிடுமோ என்ற கேள்வி எழுகின்ற அளவுக்கு அண்மைக்காலத்து நிலைமைகள் சென்றிருந்தன. ஒருபுறம் புலிகளின் நிலைமை. மறுபுறம் அரசாங்கத்தின் நிலைமை. இதேவேளை நோர்வே மத்தியஸ்தர்களின் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் எவையும் பலனளிக்காமல் திரும்பிச் செல்ல நேர்ந்த நிலைமை. இவற்றுக்கு மத்தியில் நாட்டில் அச்சுறுத்தலை ஏற்படுத்திய புதிய புதிய யுத்த நிறுத்த மீறல்கள். இவற்றின் உச்ச நிலையை வெளிப்படுத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதல்.... இவ்வாறாக மோசமடைந்திருந்த சூழ்நிலையில் மீண்டுமொரு யுத்தம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம்தான் அனைவரையும் பீடித்திருந்தது.

இந்த அச்சத்தைக் கோடிகாட்டு முகமாகவே இத் தரப்பினர்களின் பேச்சுக்களும் இருந்தன. புலிகளின் கிழக்குப் பிராந்திய புதிய தளபதி ரமேஷ், மீண்டும் ஒரு யுத்தம் வந்தால் தாம் போராடத் தயாரெனச் சூளுரைத்திருந்தார். புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், நிலைமை மிக இறுக்கமானதாக ஆகியுள்ளதை, தம்மைத் தேடி வந்து பேசும் நோர்வே மத்தியஸ்தர்களின் அவசரத்திலிருந்தே புரிந்துகொள்ள முடியுமெனக் குறிப்புக் காட்டுகிறார். புதிய இராணுவத் தளபதியோ, மீண்டும் ஒரு யுத்தம் வந்தால் தமது படைகள் தனித்தே போராடத் தயாராக உள்ளதெனக் கூறுகிறார். இவர்களின் பேச்சுக்களெல்லாம் சமாதானத்தைப் பற்றிய நம்பிக்கைகளையன்றி, யுத்தத்தைப் பற்றிய எச்சரிக்கைகளையே வெளிப்படுத்துவனவாக இருந்தன.

இதேவேளை சமாதானப் பேச்சுவார்த்தைகள் பேச்சு மூச்சற்ற நிலையில் விறைத்துக் கிடக்கின்றன. பேச்சுவார்த்தைகள் பற்றிய பேச்சு எடுக்கப்பட்டவுடன் நிபந்தனைகள் குவியத் தொடங்கி அசைவற்றுப் போயுள்ளன. புலிகள் முன்வைத்துள்ள நிபந்தனைகளுக்கு அரசாங்கம் பணிந்து வர வேண்டியதாக இருந்தது. இருந்தாலும் அரசாங்கம் இறங்கி வந்திருக்கும் அளவுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க புலிகள் முன்வருவதாக இல்லை. இதேவேளை அரசாங்கத் தரப்புக்கும் நெருக்கடிகள் ஏற்பட்டிருந்தன. இவ் அரசாங்கம் தனிக் கட்சி அரசாங்கமாக இல்லாது கூட்டரசாங்கமாக உள்ளதால் தனித்து முடிவுசெய்ய இயலாத நிலை. அதேவேளை இக் கூட்டு அரசாங்கத்திற்குக் கூட பாராளுமன்றத்தில் தனித்த பெரும்பான்மை இல்லாத நிலைமை.

புலிகள் ஏகப் பிரதிநிதித்துவம், நோர்வே மத்தியஸ்தம், வெளிநாட்டில் பேச்சுவார்த்தை, இடைக்கால நிர்வாகம் என்பவற்றை நிபந்தனைகளாக முன்வைத்திருந்தார்கள்.

அரசாங்கம், புலிகளைப் பிரதான தரப்பினராகக் கொண்டு அவர்களுடன் மட்டும் பேசுவதாகவும், நோர்வேயின் மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொள்வதாகவும், வெளிநாட்டில் பேச்சுவார்த்தைகளை நடத்த உடன்படுவதாகவும் புலிகளின் நிபந்தனைகளுக்கு உடன்பட்ட அதேவேளை, இடைக்கால நிர்வாக சபை தொடர்பான பேச்சுக்களுடன், இறுதித் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளைச் சமாந்தரமாக நடத்த வேண்டுமெனக் கூறியுள்ளது. ஆனால் புலிகளோ, இறுதித் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட்ட பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டை வலியுறுத்துகிறார்கள். இதுவே பேச்சுவார்த்தையில் தற்போது தோன்றியுள்ள முட்டுக்கட்டை நிலையாக உள்ளது.

இதேவேளை இடைக்கால நிர்வாகத்தை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கத்தின் அங்கமாகவுள்ள ஜே.வி.பி.யினர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். மறுபுறம் கூட்டு எதிர்க்கட்சிகளில் அங்கம் வகிக்கும் ஹெல உறுமய கட்சியும் எதிர்ப்புத் தெரிவிக்கிறது. இது வெறும் எதிர்ப்புடன் நின்றுவிடாமல் இடைக்கால நிர்வாகம் குறித்து பாராளுமன்ற விவாதம் ஒன்றுக்கும் ஹெல உறுமய கோரியிருந்தது. இதே கூட்டு எதிர்க்கட்சிகளில் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சி இவ் விவகாரத்தைத் தற்போது எடுப்பதற்கு எதிர்ப்புக் காட்டியதன் காரணமாக, அவ் விவாதம் நிகழும் பாராளுமன்ற அமர்வுகளின்போது முன்னெடுக்கப்படாமல் ஆகஸ்ட் மாதத்துக்குத் தள்ளிப்போடப்பட்டுள்ளது. இவ் விவாதம் நிகழ்ந்திருந்தால் பேச்சுவார்த்தைகள் பற்றிய புலிகளின் நிபந்தனை சாத்தியமற்றதென்ற தோற்றப்பாடு உருவாகி, அடுத்தது என்ன என்ற கேள்விக்கு இட்டுச் சென்றிருக்கும். தற்போதைய எதிர்க்கட்சிகளின் கூட்டில் இருக்கும் ஒவ்வாமை வெளிப்பட்டிருக்கும்.

இவ் வகையில் பேச்சுவார்த்தைகளின் நகர்வுகள் தடைப்பட்டுப் போயிருக்கும் நிலையில் புலிகள் மற்றுமொரு பிரச்சினையை முதன்மைப்படுத்தத் தலைப்பட்டுள்ளனர். அதுதான் புலிகளிலிருந்து பிரிந்து சென்றுள்ள கிழக்கு மாகாணத் தளபதியான கருணா பற்றிய பிரச்சினை.

புலிகள் மத்தியில் கருணா தரப்பின் பிளவு ஏற்பட்டபோது அதுவே புலிகளைப் பொறுத்தவரை தலையாய பிரச்சினையாக உணரப்பட்டது. புலிகள் எப்போதுமே வெளி விடயங்களை விட உள் விடயங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து வருபவர்கள். அதனால் இதற்கு ஒரு தீர்வு காண்பதிலேயே அவர்கள் அதிகம் கவனம் செலுத்தினர்.

கருணாவின் பிளவால் புலிகளுக்கு ஏற்பட்டிருந்த பிரச்சினையானது பாரதூரமானதாகும். ஒருபுறம் கிழக்கு மாகாணத்தில் புலிகளின் கட்டுப்பாடு இல்லாது போனது. அத்துடன் புலிகளின் வன்னித் தலைமைக்கு எதிரான நிலைப்பாடு உருவாகத் தொடங்கியது. மறுபுறம் தேர்தலில் புலிகளின் பிரதிநிதிகளாகச் செயற்படுகின்ற தமிழரசுக் கட்சியானது பாராளுமன்றத்தில் இக்கட்டொன்றை எதிர்நோக்கும் நிலை இருந்தது. அதாவது கிழக்கு மாகாணப் பிரதிநிதிகள் கருணாவின் பிரதிநிதிகளாக தமிழரசுக் கட்சிக்குள்ளேயே செயற்படக் கூடிய சங்கடமான நிலைமை ஏற்பட இருந்தது.

எனவே, அதனை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதே புலிகளின் அவசரத் தேவையாக அப்போதிருந்தது. அதற்கு, கிழக்கு மாகாணத்தை வன்னித் தலைமையின் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது அவர்களுக்கு முக்கிய இன்றியமையாத தேவையாக இருந்தது. இதனைச் செய்வதற்கு இரு பிரதான சிக்கல்கள் இருந்தன. ஒன்று, யுத்த நிறுத்த உடன்பாட்டை மீறி, தமது எதிரணிக்கு எதிரான ஒரு ஆயுத மோதலை நடத்த வேண்டியிருந்தது. அடுத்தது, அம் மோதலை நடத்துவதற்கு அரச படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளைத் தரை மார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் கடந்து செல்ல வேண்டியிருந்தது. இதற்கு அரசாங்கத்தினதும் இராணுவம், கடற்படை ஆகியவற்றினதும் ஒத்துழைப்பைப் பெற வேண்டியிருந்தது. அத்துடன் கண்காணிப்புக் குழுவையும் இவ் விடயத்தில் மௌனத்தைக் கடைப்பிடிக்கச் செய்ய வேண்டியிருந்தது.

ஆனால், இவை அனைத்தும் புலிகளின் எதிர்பார்ப்பையும் மிஞ்சிய அளவில் அவர்களுக்குச் சாத்தியமாகின. கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்றுவதற்கான புலிகளின் சகல நடவடிக்கைகளுக்கும் அரசாங்கமும் படைகளும் கண்காணிப்புக் குழுவும் விட்டுக்கொடுத்தன. கருணா பின்வாங்க நேர்ந்தது. இவ்வாறு புலிகளின் விருப்பத்துக்கு இசைவாக நடந்துகொண்டதால் புலிகள் அரசாங்கத்துடன் ஒத்துழைத்துப் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தை ஆதரிப்பார்களென்றும், அதில் சேராவிட்டாலும் அதன் பெரும்பான்மையைக் காப்பாற்ற உதவி செய்வார்களென்றும், பேச்சுவார்த்தைகளை நடத்த முன்வருவார்களென்றும் அரசாங்கம் எதிர்பார்த்தது. ஆனால், அதற்குப் பெருத்த ஏமாற்றமே கிடைத்தது.

அரசாங்கம் எதிர்பார்த்தற்கு மாறாக, புலிகளின் பிரதிநிதிகளாகச் செயற்பட்ட தமிழரசுக் கட்சியினர் பாராளுமன்றத்தின் முதலாவது அமர்விலேயே அரசாங்கத்துக்கு எதிராக வாக்களித்து எதிர்க் கட்சியையே வெற்றிபெற வைத்தார்கள். இதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரான லொக்குபண்டார சபாநாயகராக்கப் பட்டார். அத்துடன் நில்லாமல் தமிழரசுக் கட்சியினர் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிக் கூட்டமைப்பிலேயே சேர்ந்து இயங்கி வருகின்றனர்.

இதேவேளை புலிகள், கருணா விடயத்தில் தமது பிரதான பிரச்சினையைத் தீர்த்துக்கொண்டதற்கு அரசாங்கம்

**முழு அளவிலான யுத்தமோ அல்லது எச்சரிக்கைத் தாக்குதல்களோ எவையாயினும் பாதிக்கப்படுவது இவ்விரு தரப்பினர்களையும் விட மக்களே அதிகம். எனவே, மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள் இந் நிலைமையை மாற்றியமைக்கும் வழிவகைகள் பற்றிச் சிரத்தையுடன் சிந்திக்க வேண்டும்.**

வழங்கிய ஒத்துழைப்புடன் திருப்திப்படவில்லை. மாறாக கருணா தப்பிச் சென்று தொடர்ந்து செயற்படுவதற்கு அரசாங்கத் தரப்பில் ஒத்துழைப்பு வழங்கப்படுவதாக புதிய குற்றச்சாட்டுகளை முன்னிறுத்தி, அதனை பேச்சுவார்த்தைக்கான ஒரு பிரதான தடையாகக் காண்பித்து வருகிறார்கள்.

இந் நிலைமை பேச்சுவார்த்தைகளைக் கேள்விக்குறியாக்கி வைத்துள்ளது மட்டுமல்ல, சமாதானத்தையே அச்சுறுத்தி வரும் ஒன்றாக ஆகியுள்ளது. புலிகளுக்கு இடையிலான முரண்பாடுகளால் தற்போது பல சம்பவங்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்து வருகின்றன. இத்தகைய சம்பவங்களில் இரு தரப்பினரும் பாரதூரமான இழப்புகளைச் சந்தித்து வருகின்றனர். அண்மையில் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் கருணா அணியின் முக்கியஸ்தரான சச்சி மாஸ்டர் என்பவருட்பட இரு கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதற்கு முன்னர் புலிகளின் கரும்புலிகள் தினத்தில் மட்டக்களப்பில் வன்னித் தலைமைக்குச் சார்பான புலி முக்கியஸ்தர்கள் சுடப்பட்டுள்ளனர். இப்படியான சம்பவங்களில் பாரதூரமான இழப்புகள் ஏற்படும்போது புலிகள் அரசாங்கத்தை எச்சரிக்கின்றனர். இவ்வாறான நிலைமை ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தின் மீது புலிகள் எச்சரிக்கும் தாக்குதல்களை அல்லது பழி தீர்க்கும் தாக்குதல்களை மேற்கொள்ளும் ஆபத்துக்கு வழிகோலிவிடலாம். அவை யுத்த நிறுத்தத்தில் பாரிய குழப்பத்தையும் ஏற்படுத்தலாம்.

எனினும் முழு அளவிலான யுத்தமொன்றுக்குப் புலிகள் செல்வார்களென எதிர்பார்ப்பதற்கு இல்லை. ஏனெனில், அத்தகைய யுத்தமொன்றை முன்னெடுக்கக் கூடிய உடனடி நிலைமை அவர்கள் பக்கத்தில் இல்லை. அவ்வாறான யுத்தமொன்று ஏற்பட்டால் புலிகளின் தாக்குதல் திட்டங்களுக்கான ஆளணிப் பற்றாக்குறையொன்று எதிர்பார்க்கக் கூடியது. யுத்தம் மூளும் பட்சத்தில் புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் படையெடுப்பை மேற்கொள்வரென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இத்தகைய படையெடுப்புகளில் உறுதுணையாக அமைந்திருந்தது கருணாவின் கிழக்கு மாகாணப் படையணிகளே. தற்போது கருணாவின் பிரிவையடுத்து ஒரு பகுதியினர் கருணாவுடன் பிரிந்து செல்ல, இன்னொரு பகுதியினர் வன்னித் தலைமையின் தற்போதைய கிழக்கு மாகாணத் தளபதி ரமேஷின் கீழ் செயற்பட, பெருமளவானோர் வீடுகளுக்குத் திரும்பிவிட்ட நிலையே இங்கு காணப்படுகிறது. தற்போதைய நிலைமையில் கிழக்கிலிருந்து உடனடியாக பெரியதொரு ஆள் திரட்டலை மேற்கொள்வது சாத்தியமில்லை. அதனால் இத்தகைய யாழ்ப்பாணத்தின் மீதான படையெடுப்புத் திட்டங்களைச் செயற்படுத்துவது சாத்தியமில்லை.

இதேவேளை கிழக்கு மாகாணம் உடனடியாகப் படைகளின் வசம் சென்றுவிடக்கூடிய அபாயம் புலிகளுக்கு உள்ளது. அப்படிச் செல்லுமாயின் கருணாவுக்கு அவ்விடத்தில் தளம் அமைத்துக்கொள்ள இடம் கொடுத்ததாகிவிடும். கிழக்கை இழந்த நிலையில் புலிகளின் ஏகப்பிரதிநிதித்துவம், ஆளுமை, பலம் என்பன கேள்விக்குரியதாக ஆக்கப்பட்டுவிடும் பின்னடைவும் இதில் உண்டு.

ஆயினும், புலிகளிடம் நவீன ஆயுத பலம் உள்ளது. அத்துடன் சமாதான காலத்தில் தலைநகர் கொழும்பு உட்பட பிரதானமான கேந்திர இடங்களில் ஊடுருவியுள்ள நிலையில் இங்கு திகிலூட்டும் தாக்குதல்களை மேற்கொள்ள முடியும். ஆனாலும் முழு அளவிலான யுத்தமொன்று வரும்போது இச் சாதகங்களை விட தற்போதைய கிழக்கு நிலைமையால் எழக்கூடிய பாதகங்களே அவர்களுக்கு அக்கறைக்குரியவை.

இராணுவ ரீதியில் மட்டுமன்றி, அரசியல் மற்றும் இராஜதந்திர ரீதியிலும் இவ்வாறான யுத்தம் அவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம். அண்மையில் நிகழ்ந்த தற்கொலைக் குண்டு வெடிப்புத் தொடர்பாக அமெரிக்கா புலிகளைக் கண்டித்திருந்தது. புலிகள் வன்முறையைச் செயலளவில் கைவிட்டாலே அவர்கள் மீதான தனது தடையை நீக்குவது பற்றிப் பரிசீலிக்க முடியுமெனக் கூறியுள்ளது. இந் நிலையில் யுத்தமொன்றுக்குச் சென்றால் அமெரிக்காவும் அதன் நாடுகளும் புலிகளுக்கெதிரான கடுமையான நிலைப்பாட்டுக்குச் செல்லலாம். ஏற்கெனவே அமெரிக்கா இலங்கைக்கு வலிமை மிக்க யுத்தக் கப்பலொன்றைக் கையளித்துள்ளது. அத்துடன் இலங்கையுடன் இராணுவம் சார்ந்த சில ஒப்பந்தங்களையும் மேற்கொண்டுள்ளது.

இந்தியாவும் இலங்கையும் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளவுள்ளன. இலங்கையின் சமாதான முயற்சிகள் பற்றிய தனது அக்கறையை அது தெரிவித்திருக்கிறது. எனவே, இத்தகைய யுத்தமொன்று மூண்டால் இந்தியாவின் ஈடுபாடு இலங்கை விடயத்தில் அதிகரிக்கும். அது புலிகளைப் பாதிக்கக்கூடியவாறு அமையும் சாத்தியம் உள்ளது.

இதேவேளை இலங்கை அரசாங்கத்துக்கும் யுத்தமொன்றுக்குச் செல்லக்கூடிய எண்ணமும் தயார் நிலையும் இல்லை. தற்போதைய அரசாங்கம் கூட ஒரு சிறுபாண்மை அரசாங்கமாகத் திகழும் நிலையில் யுத்தத்தை நடத்துவது சிரமம். மேலும் நாட்டின் பொருளாதார நிலைமை தற்போது ஆபத்தானதாக உள்ளது. அதனைச் சீரமைத்துக்கொள்ளுமுன் யுத்தத்துக்கு முகங்கொடுப்பது மிகவும் கடினம்.

இரு தரப்புக்கும் பாதகமான நிலைமைகளே உள்ள நிலையில் முழு அளவிலான யுத்தமொன்றை இரு தரப்பினருமே உடனடியாக விரும்பமாட்டார்கள். எனினும், இப்போது ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலை அச்சத்தைத் தோற்றுவிப்பதாக உள்ளது. முழு அளவிலான யுத்தம் மூளாவிட்டாலும், எச்சரிக்கை செய்யும் அல்லது ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ளும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாமென அஞ்ச இடமுள்ளது.

அவை பாரிய பீதியை ஏற்படுத்தக் கூடும். சகஜ நிலையைக் கெடுத்துவிடக் கூடும்.

முழு அளவிலான யுத்தமோ அல்லது எச்சரிக்கைத் தாக்குதல்களோ எவையாயினும் பாதிக்கப்படுவது இவ்விரு தரப்பினர்களையும் விட மக்களே அதிகம். எனவே, மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள் இந் நிலைமையை மாற்றியமைக்கும் வழிவகைகள் பற்றிச் சிரத்தையுடன் சிந்திக்க வேண்டும்.



# குண்டுதாரியின் கடைசி வார்த்தை

சென்ற வாரத் தொடர்ச்சி...

ஆட்டோவில் சென்றுகொண்டிருக்கும்போதே குண்டுதாரி கலவரமடையத் தொடங்கிவிட்டார். இன்றைக்கு வெடிக்க வேண்டிய இலக்குத் தவறியதோடு தான் தப்பிவிட்டதாக நினைத்து வீதியில் நடந்த குண்டுதாரியை மீண்டும் பொலிஸார் அணுகுவார்கள் என்று அவர் நினைத்திருக்கவில்லை. இருந்தாலும் அவர் தொடர்புகொள்ள விரும்பிய பெண்ணின் இலக்கத்தைப் பொலிஸார் பெற்றுக்கொண்டனர்.

ஆட்டோ கொள்ளுப்பிட்டிப் பொலிஸ் நிலையத்துக்குள் நுழைந்தது. அலுவலகத்திலிருந்த பொலிஸார் இவர்களைப் பொருட்படுத்தவில்லை. குண்டுதாரியை உள்ளுக்குள் கூட்டிச்சென்ற பொலிஸ் அதிகாரி அங்கிருந்த அலுவலகத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரியிடம் விடயத்தைக் கூறினார். அவரும் அவ்வளவாகக் கணக்கிலெடுக்காதபோதும் அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவினர் கொண்டுவந்த விடயம் என்பதால், வழமையான நடவடிக்கையாக குண்டுதாரியைப் பார்த்து சிங்களத்திலேயே கேட்டார்.

"பெயர் என்ன?"

"ஜெயராணி"

"ஊர் எது?"

"யாழ்ப்பாணம்"

"ஏன் பரிசோதனைக்கு ஒத்துழைக்க மறுக்கிறீர்கள்"

"எனக்கு சுகமில்லை"

"பெண் பொலிஸ்தானே பரிசோதிக்கிறாங்க" மௌனம்.

"சரி இப்பொழுது இங்கே செக் பண்ண வேணும் போங்கோ" என்று அவரைப் பேகச் சொல்ல,

"என்னைத் தொந்தரவு செய்யாதீங்கோ" என்று கூறியுள்ளார். இத்தனை கேள்விக்கும் அரைகுறைச் சிங்களத்திலேயே பதிலளித்தார் என்பது குறிப்பிடத் தக்கது. தொடர்ந்தும் பரிசோதனைக்கு மறுப்புத் தெரிவித்ததால், "சரி நாங்கள் குண்டு பரிசோதனை அதிகாரிகளுக்கு அறிவித்திருக்கிறோம். நீங்கள் தடுப்பு அறைக்குள் போய் இருங்கள்" என்று பொலிஸ் அதிகாரிகள் கூறியபோது,

"என்னை விடுங்கோ. நான் போறன்" என்று குண்டுதாரி அடம்பிடித்தபோதுதான் அக்கம் பக்கம் நின்ற பொலிஸ் அதிகாரிகள் கூடினர். இந்தப் பெண் இவ்வளவு அடம் பிடிக்கிறதே எண்டு நினைத்து அண்மித்தபோதுதான் குண்டுதாரி தனது தொடைப் பக்கம் கையைத் தாழ்த்திப் பிடித்துக்கொண்டு "இலக்கு தவறிட்டுது" என்று கத்தினார்.



குண்டு வெடித்த கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தின் கோரக் காட்சி.



குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. குண்டுதாரிக்கு மிக அருகில் நின்ற நான்கு பொலிஸாரும் அந்த இடத்திலேயே உடல்கள் சிதறி இறந்தனர். குண்டுதாரிக்குப் பின் பக்கமாக இருந்த அலுவலகத்தின் முன் அறைக்குள் நின்றுகொண்டிருந்த ஏனையவர்கள் காயங்களுக்குள்ளானார்கள். இவர்களில் குண்டுதாரியைக் கூட்டிச் சென்ற பாதுகாப்பு அதிகாரியும் பெண் பொலிஸ் அதிகாரியும் காயமடைந்தனர்.

பொலிஸ் நிலையம் புகைமண்டலமாகக் காட்சி தந்தது. முன் பக்கமாக இருந்த கண்ணாடிகள் நொறுங்கிச் சிதறின. மனித இறைச்சியும் உடல் துண்டங்களுமாக இரத்த வெள்ளத்தில் கொள்ளுப்பிட்டிப் பொலிஸ் நிலையம் காட்சி தந்தது.

குண்டுதாரி நின்ற இடத்தில் குடல் சரிந்து கிடக்க இடுப்புக்குக் கீழ்ப் பகுதி கால்கள் வீசி எறியப்பட்ட நிலையில் உடல் பகுதி இரு தடுப்பு அறைகள் வரை இழுபட்டுக் கிடந்தது. நெஞ்சுப் பகுதி சதை சதையாகச் சிதறிக் கிடக்க, தலை கோரமாக ஐந்து அடி தூரத்தில் கிடந்தது. எவ்வளவு விரைவில் காயப்பட்ட பொலிஸாரையும் பலியான பொலிஸாரையும் மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முடியுமோ அவ்வளவு விரைவாக அவர்கள் கொண்டு செல்லப்பட்டார்கள். குண்டுதாரியின் உடல் மற்றும் பாகங்கள் அவ்வாறே கிடந்தன. அவை பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக கொண்டு செல்லப்படவில்லை.

இந்தப் பயங்கரச் சம்பவத்துக்குப் பிறகு காலி வீதி வாகன நெரிசலால் திணறியது. யுத்தம் ஆரம்பித்துவிட்டதாகவும் தொடர் குண்டுகள் வெடிக்க வாய்ப்பு உள்ளது என்றும் மக்கள் பேசிக்கொள்வதைக் கேட்க முடிந்தது. இனி, இச் சம்பவம் குறித்து நடந்தவற்றைப் பார்ப்போம்.

வன்னிப் புலிகளுக்கு நெருக்கமான வட்டாரங் களிலிருந்து இலக்குத் தவறிக் குண்டு வெடித்து விட்டதாகக் கொழும்பிலிருந்து வன்னித் தலைமைக்குத் தகவல் பறந்தது. பெரும் எதிர்பார்ப்போடு இருந்தவேளை இச் செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்தியது. புலிகளின் தலைவர் தன்னை மறந்து சத்தமிட்டார். அவருக்கு இரண்டு வகையான இழப்பு. ஒன்று இலக்குத் தவறி தனது திட்டம் நிறைவேறாமை. இரண்டாவது குண்டு வெடித்த இடம் அமெரிக்கா, பிரிட்டிஷ், இந்தியத் தூதரகங்கள், பிரதமரின் அலரிமாளிகை என மிக முக்கிய இடங்களுக்குப் பக்கத்தில் என்பதால் சர்வதேச சமூகம் கண்டிக்கும் என்பதாகும். அவரின் துரதிர்ஷ்டம் இவை இரண்டும் நடந்தது.

இப்போது அமைச்சரின் பாதுகாப்பு அதிகாரியால் வழங்கப்பட்ட தகவலின் பேரில் குண்டுதாரி தொடர்புகொள்ள விரும்பிய பெண் யார் என்பதை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் விசாரிக்கத் தொடங்கினர். அமைச்சரைப் பார்வையிட வந்தவர்களில் ஒருவரான சத்தியலீலா எனும் பெண் மீது பார்வை திரும்பியது. இதற்குக் காரணமும் இருந்தது. இவர் அமைச்சுக்கு வரும்போது இலேசான மழைத் தூறல் இருந்ததால் குண்டுதாரிப் பெண்ணுக்குக் குடை பிடித்துக்கொண்டு வந்ததாகப் பாதுகாப்பு அதிகாரிகளின் ஞாபகத்துக்கு வந்தது.

எது எப்படி இருப்பினும் கைதுசெய்து விசாரிப்பதாக முடிவு எடுக்கப்பட்டு சத்திய லீலா கைதானார். விசாரணைகள் தொடர்ந்தன. ஆரம்பத்தில் எவ்விதத் தகவலையும் வெளியிட மறுத்த இப் பெண், இரவு ஒன்றரை மணிக்குப் பிறகு ஒரு விசயத்தைச் சொன்னார். குண்டுதாரியைத் தானே கூட்டிவந்ததாகவும், அவர் குண்டுடன் வந்திருப்பது தனக்குத் தெரியாதென்றும் கூறினார்.

எனினும் விசாரணைகளின் தொடர்ச்சியில் பல விடயங்கள் வெளியாகின. சில வருடங்களுக்கு முன் புலிகள் இயக்கத்திலிருந்து விலகி சமூக வாழ்கைக்கு திரும்பியதாகவும், நெடுந்தீவைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்ததாகவும், இப்போது தனக்கு இரு குழந்தைகள் இருப்பதாகவும் கூறினார். மேலும் கேட்டபோது, வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா இருந்த காலத்தில் வேலை வாய்ப்பு சம்பந்தமாக ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்கு சென்றதாகவும், இதற்குப் பிறகு ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுடன் ஏற்பட்ட உறவைப் பயன்படுத்திக் கட்சி வேலைகளில் அக்கறை காட்டிச் செயற்பட்டதாகவும் கூறினார்.

இதற்குப் பிற்பாடு தற்போது டக்ளஸ் தேவானந்தா மீண்டும் அமைச்சரானதால் தன்னுடன் தொடர்புகொண்டு தகவல்களை வழங்குமாறு கூறியதாகவும் கூறினார். இதற்கமைய புலிகளுக்கு ஈ.பி.டி.பி. குறித்த தகவல்களையும், ஈ.பி.டி.பியினர் சந்தேகம் கொள்ளக் கூடாது என்பதற்காகப் புலிகள் குறித்து அவ்வப்போது தகவல்களையும் வழங்கி வந்ததாகவும் இவர் கூறினார். இதன் ஒரு கட்டமாகவே குண்டுதாரியான பெண்ணைத் தனக்கு அறிமுகப்படுத்தி அமைச்சரைச் சந்திக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு புலிகள் வலியுறுத்தினர். இதற்குச் சம்மதிக்காவிட்டால் இரு பிள்ளைகளையும் கொலை செய்யப் போவதாகப் புலிகள் மிரட்டியதாகவும் அவர் சொன்னார்.

இது குறித்து விசாரணைகள் தொடர்கின்றன. சட்டத்துக்குப் புறம்பாக அடையாள அட்டையைப் பெற்றுக்கொண்டது, அரச அதிகாரிகள் எப்படிப் பணத்துக்குச் சோரம் போனார்கள் என்பன போன்ற விசாரணைகள் தொடர்கின்றன.

ஊடகங்களின் நடைமுறை

## அலசுவது - மதியுகி -

கொழும்பில் தற்கொலை குண்டு வெடிப்பு என்ற செய்தி தீயாக நாடெங்கும் - உலகெங்கும் பரவியது. கொள்ளுப்பிட்டிப் பொலிஸ் நிலையத்தில் தற்கொலைக் குண்டு வெடிப்பு - நான்கு பொலிஸார் படுகொலை. பத்துப் பொலிஸ் அதிகாரிகள் காயம். குண்டு வெடிப்பைச் செய்தது யார் என்று தெரியவில்லை.

மேற்படி செய்தியில் மக்கள் எதையோ தேடினார்கள். கேள்விக்குள்ளான செய்திகளில் ஏதோ ஒன்று குறைவாகவுள்ளதை உணர்ந்தார்கள். இரவு 9.45க்கு ஒலிபரப்பாகும் பி.பி.சி. தமிழோசையைக் கேட்டால் சரி. ஏதாவது தெளிவு கிடைக்கும் என்ற ஆவல். அதிலும் இலங்கைச் செய்தியாளர்கள் அந்த ஏதோ ஒன்றை மூடி மறைத்து செய்தி சொன்ன விதமிருக்கிறதே நினைத்தால் புல்லரிக்கும். அச் செய்தியறிக்கையின் இறுதியில் பி.பி.சி.யின் இலங்கைக்கான செய்தியாளர் பிரான்சிஸ் ஹரிசன் தனது செய்தியில் தெரிவித்தார். "குண்டு வெடிப்பு நடைபெற்ற விதமும் தடயங்களும் குண்டு வெடிப்பு நடைபெற்று சுமார் ஒன்பது மணி நேரமாகியும் புலிகள் இறுக்கமாகக் காட்டும் மௌனமும், புலிகள்தான் இக் குண்டு வெடிப்புக்குப் பொறுப்பானவர்கள்" என்றும் "ஆனால் இத் தாக்குதல் யுத்தமொன்றை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கை இல்லை" என்றும் அப்படிப் புலிகள் யுத்தத்தை ஆரம்பிக்க நினைத்தால் ஒரு குண்டு வெடிப்பல்ல; தொடர் குண்டு வெடிப்புகள் இடம்பெறுமெனத் தான் நினைப்பதாகவும் தெரிவித்தபோதுதான் அந்த ஏதோ ஒன்றுக்குத் தெளிவு கிடைத்தது. மக்கள் ஆத்திரம் தாங்காமல் திட்டினார்கள் பிரான்சிஸ் ஹரிசனுக்கு மட்டும்தான் முதுகில் எலும்பிருக்கிறது; மற்றவர்களுக்கு என்னதான் இருக்கிறது?

**இலங்கைச் செய்தியாளர்கள் அந்த ஏதோ ஒன்றை மூடி மறைத்து சொன்ன விதமிருக்கிறதே நினைத்தால் புல்லரிக்கும்.**

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# அதிரடி அய்யாத்துரை



***குற்றம்*** செய்தவையளைக் குற்றம் செய்யாமலிருக்க வைச்சிருக்கிற இடந்தான் சிறைச்சாலை. அந்தச் சிறைச் சாலையுக்குள்ளயே துப்பாக்கி நுழைஞ்சு சுட்டுத் தள்ளியிருக்குதெண்டால் சட்டமெதுக்கு? நீதிமன்றம் எதுக்கு? தீர்ப்புகள்தான் எதுக்கு? மட்டக்களப்புச் சிறைச்சாலையில கைதிகளிரண்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டதைக் கேட்டியளெல்லே? 83இல வெலிக்கடைச் சிறையுக்கை படுகொலைகள் நடந்த நேரத்தில உதெப்படிச் சிறைச்சாலைக் காவலர்களுக்குத் தெரியாமல் சிறைக் கதவுகள் திறந்து கொலைகள் நடக்க ஏலுமெண்டு கேள்வியெழுப்பினனாங்கள். ஆனால், இப்ப சிறைச்சாலைக்குள்ள துப்பாக்கி புகுந்து சுட்டுத் தள்ளினதுக்கு என்ன சொல்லப் போறம்? ஏதோ யுத்த நிறுத்தம், கண்காணிப்புக் குழு, சமாதானம் எண்டெல்லாஞ் சொல்லுறாங்களே, இந்த எடுப்புக்கும் நடப்புக்கும் சம்பந்தமே இல்லாமலிருக்கே! ம்..... எங்க போய் முடியப் போகுதோ?

***யாழ்ப்பாணத்து*** நீதிமன்றத்துக்குப் போட்ட அடிக்கல்லையே அடியோட பெயர்த்தெறிஞ்சிருக்கினம் எங்கட வீரவான்கள். தங்களை மாணவர் படையெண்டு கிளைம்ப் பண்ணியிருக்கினம். நீதிமன்றத்துக்கும் மாணவருக்கும் என்ன சம்பந்தமோ தெரியாது. மாணவரைத் தேடிப் பிடிச்சு ஏன்தான் சட்ட விரோதங்களில சம்பந்தப்படுத்தினமோ தெரியாது. இப்ப கொஞ்சக் காலமாத்தான் கள்ள வாக்களிக்கப் பயன்படுத்தினவை. இனியினி எல்லாத் தப்புத்தண்டாவுக்கும் பக்கவாத்தியமாக்கப் பாக்கினம் போல. அது சரி, நீதிமன்றத்தைக் கட்டினால் என்ன தப்பாம்? தப்பித் தவறி நீதி ஒருவேளை திரும்பி வந்தாலும் வந்திடுமெண்டு அஞ்சினமோ? உலக வங்கி தந்த பணத்தில உருப்படியாய் ஒரு கட்டிடத்தைத் தன்னும் கட்டவிடாமல் திருப்பி அனுப்பிறதில யாருக்கு நட்டம்? நடக்க வெளிக்கிடுகிற அபிவிருத்திகளையும் சிதைச்சுக்கொண்டு இங்க அபிவிருத்தியே நடக்கேல்லையெண்டு உலக நாடுகளிட்ட ஒப்பாரி வைச்சால் யார் நம்பப் போகினம் இனி? ம்.... எல்லாம் எம்பலிப் படியேறுற எம்.பி.மாருக்குத்தான் இனிச் சங்கடம்.

***யாழ்ப்பாணத்தில*** இப்ப ஆட்சேர்ப்புக்கள் மெல்ல ஆரம்பிக்குது போல. பள்ளிக்கூடத்தால வெளிக்கிடுறவை வழியில மடக்கப்பட்டதா ரெண்டொரு சம்பவங்கள் கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடாய்ப் போயிருக்கு. ஊர்காவற்றுறைப் பள்ளிக்கூடமொண்டில காணாமல் போன மாணவன், தந்தையாற்ர துரித நடவடிக்கையால தெய்வாதீனமாகத் திரும்பக் கிடைச்சிருக்கிறான். விஷயம் பரவலாத் தொடங்க முந்தி விழிப்படைஞ்சு விட்டாச் சரி! இப்ப கொஞ்சக் காலமாத்தான் பிள்ளைகள் ஒழுங்காப் படிப்பில கவனம் செலுத்தக் கூடியதாய் இருந்திச்சுது. அதுக்கும் மண்ணையள்ளிப் போட்டிடக் கூடாதெண்டதுதான் இப்ப மக்களின்ர ஆதங்கம்.

***பக்கத்து*** நாட்டில நடந்த பரிதாபச் சம்பவத்துக்கு பச்சாதாபப்படாத மனமும் ஒரு மனமோ? சே.... என்ன பரிதாபமுங்கோ. பச்சிளம் குழந்தைகள் கொட்டகைக் கட்டிடத்துக்குள்ள தீப்பிடிச்ச நேரம் என்னமாய்த் துடிதுடிச்சுச் செத்திருக்குங்கள்! தப்பியோட இடமில்லாமல் குறுகின வாசல் வைச்சு நடத்தியிருக்கினமே ஒரு பாலர் வகுப்பை! அதுவும் மேல் மாடியில! பாலர்களுக்குக் கீழ இடங்கொடாமல் மேல வகுப்புக் குடுத்திருக்கினம் அந்த மதி கெட்ட நிர்வாகிகள். இதுக்கெல்லாம் பலியாகிறது இந்தக் கொஞ்சும் மழலை பேசிற பிஞ்சுக் குழந்தைகள்தானா? பி.பி.ஸிக்காறர் அதிகாரிகளைத் தேடிப் பிடிச்சுக் காரணம் கேக்கேக்க, ஆளாளுக்குச் சொன்ன பதில்களைக் கேக்கத்தான் ஆத்திரமாக் கிடக்கு. "அது டெம்பர்றியா எடுத்த பில்டிங் பெமிசனை காலங்காலமா கொண்டுகிட்டே போயிருக்காங்க. ஜாஸ்தி பள்ளிக்கூடங்களில நடக்கிறதுதாங்க இது" இப்படி எவ்வளவு சாவகாசமாக் காரணம் சொல்ல முடியுது இந்த அதிகாரிகளுக்கு? நடந்தது ஏதோ துக்க காரியந்தான். ஆனால், யாருமே இதுக்குப் பொறுப்பில்லை எண்டு விஷயத்தை முடிக்க நினைக்கிறாங்களே! முதலமைச்சர், ராகுல் காந்தி, சோனியா காந்தி எல்லாருமே கும்பகோணத்துக்குப் போய் அனர்த்தத்தைப் பாத்தது, ஒரு விதத்தில அந்தப் பிஞ்சு உயிர்களுக்கும் முக்கியத்துவம் இருக்கெண்டு கொஞ்சமாவது எடுத்துக் காட்டுது. ஆனால் என்ன? போன உயிர்கள் வரவா போகுது? ஓ! அருமைக் குழந்தைகளே! உங்களைக் கருகவைத்த பாவத்தை மானுடம் என்றுதான் கழுவப்போகிறதோ!

***சிஹல*** உறுமயப் பொதுச் செயலாளரின்ர நிலைமைதான் இப்ப பெருங் கவலை! நாத்து நட்டவன் எவனோ, அறுவடை செய்தவன் எவனோ எண்ட கதைதான். தங்களுக்கெண்டொரு சிங்கள உணர்வைக் காட்ட தங்களுக்கெண்டொரு கட்சி துடங்கி, தேர்தலில ஓடவிட்டுப் பாத்தார். சிங்களம் எண்டவுடன சீறிப் பாஞ்சு ஓடும் குதிரையெண்டு கனாக் கண்டார். நடக்கேல்லையெண்டவுடன, புத்தியப் போட்டுக் கசக்கி புதிசா ஒரு டெக்னிக்கை வகுத்தார். ஹெல உறுமய எண்ட பெயரில பிக்குகளை இறக்கிவிட்டால், மக்கள் மயங்கி வாக்களிப்பினமெண்டு திட்டம் போட்டார். கொஞ்சம் பெறுபேறும் கிடைச்சு ஒன்பது பிக்குகள் பார்லிமெண்டுக்குப் போச்சினம். இப்ப, அவையில சில பேரை றிசைன் பண்ணி, தங்களை விடச் சொல்லிக் கேக்கப் போனார். சுவை கண்ட பூனை பாலை விட்டுக் குடுக்குமோ? பிக்குகள் ஒரேயடியா மறுத்ததோட, பிக்குகள் மட்டுந்தான் இந்தக் கட்சியில பாராளுமன்றம் போகலாம்; மற்றவை வெறும் ஆதரவு மட்டுந்தான் தரலாமெண்டு ஒரே போடாப் போட்டிட்டினம். பிச்சை வேண்டாம் நாயைப் பிடியெண்ட கணக்கா, இப்ப தன்ர பொதுச் செயலாளர் பதவியையும் தூக்கியெறிஞ்சு போட்டு நிக்கிறார் இவர்! ஓ........ பரிதாபம்!

"***முன்னரிட்ட*** தீ.... முப்புரத்திலே. பின்னரிட்ட தீ இலங்கை மண்ணிலே...." எண்டொரு பாட்டு வரி கேட்டிருப்பியள். இந்தத் தீக்கும் இலங்கைக்கும் அனுமான் காலத்திலயிருந்து தொடுசலாத்தான் கிடக்கு. அண்டைக்கு அனுமான் இலங்கைக்குத் தீ வைச்சான். 81இல யாழ். லைப்ரரிக்குத் தீ வைச்சாங்கள். 83இல தமிழற்ர சொத்துகளுக்குத் தீ வைச்சாங்கள். இப்பத்தய எங்கட அனுமான்கள் போன கிழமை யாழ்ப்பாணத்தில கொஞ்சத் தினமுரசுக்குத் தீ வைச்சுப் பாத்திருக்கினம். "சிறு தீ காட்டுத் தீயாய் பரவும்", "கருத்து மக்களைப் பற்றிக்கொண்டால் சக்தியாக உருவெடுக்கும்" எண்டெல்லாம் சொல்லுவினமே. அதுதான் தினமுரசு விற்பனையை இன்னும் அதிகரிக்க வேணுமெண்ட ஆர்வக் கோளாறு போல. தீ வைச்சு விற்பனையை உசுப்பிவிட்டதுக்கு நன்றி சொல்ல வேணும். தாங்ஸ்! வாராவாரம் தீ வைக்கவெண்டு ஒரு பண்டில் பேப்பரும், நெருப்புப் பெட்டியொண்டும் அனுப்பி வைக்கிறம். பிளீஸ் கோ ஒன்...!

***தமிழர்*** விடுதலைக் கூட்டணிச் செயலாளர் சம்பந்தனார் கனடாவுக்கு போன இடத்தில ஒரு பெரிய தருமசங்கடத்தில மாட்டுப்பட்டிட்டார். அதாவது அங்க அமிரண்ணையின்ர ஞாபகார்த்தக் கூட்டமொண்டுக்கு அழைப்பு விட்டிருக்கினம். அமிரண்ணை தமிழர் விடுதலைக் கூட்டணியின்ர முன்னாள் தலைவர். சம்பந்தனாரை அரசியலுக்குக் கொண்டு வந்தவரும் அவர்தான். இப்ப அவருக்கு ரெண்டும் கெட்டான் நிலை. கட்சித் தலைவருக்கு விசுவாசம் காட்டப் போனால் வன்னித் தலைமைக்குப் பிடிக்காது. வன்னித் தலைமைக்கு விசுவாசம் காட்டினால் சொந்தத் தலைமைய உதாசீனம் செய்த செய்நன்றி மறந்தவராப் போயிடுவார். சம்பந்தர் ரெண்டில எதைச் செய்வாரெண்டு நினைக்கிறியள். அதேதான். சின்னக் குழந்தைக்கும் பதில் தெரியும். செய்நன்றியாவது மண்ணாவது! வன்னித் தலைமைக்கு உள்ளம் குளிர்ந்தால் போதுமெண்டிட்டு அமிர் அண்ணரின்ர ஞாபகார்த்தக் கூட்டத்தைப் பகிஷ்கரிச்சுப் போட்டார்! பிழைக்கத் தெரிஞ்சவைக்குச் சரியான வழிகாட்டி

# மனம் திறந்த மடல்.....

எமது பெருமதிப்பிற்கும் அன்பிற்கும் பாத்திரமான தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களே! எமது மட்டு-அம்பாறை வாழ் தமிழ் மக்களின் சார்பாக அவர்களின் உணர்வுகளை உங்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக இந்த மடலை உங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

உங்கள் தலைமையின் கீழ் பல வெற்றிகளைத் தேடித் தந்த, மிகவும் போராட்டத் திறமை வாய்ந்த கேணல் கருணா அவர்கள் தொடர்ந்தும் உங்கள் தலைமையின் கீழ் மட்டு - அம்பாறை மாவட்டத்தில் வன்னித் தலைமையின் நிர்ப்பந்தம் எதுவுமின்றிச் சுதந்திரமாகப் போராட முடிவெடுத்து, உங்களுக்குக் கடித மூலம் அறிவித்து உங்களின் அனுமதியை எதிர்பார்த்திருந்தார். ஆனால், அதற்கு உங்காளாலோ அல்லது உங்களின் கீழ் செயற்படும் வன்னித் தலைமையாலோ எவ்வித பதிலும் கொடுக்கப்படவில்லை. மாறாக, நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் இது ஒரு தனிமனிதப் பிரச்சினை. கருணா அவர்கள் பிரதேச வாதம் பேசுகிறார். "இது ஒரு துரோகச் செயல். இவரை நாங்கள் உடனடியாக எமது இயக்கத்திலிருந்து விலக்கியுள்ளோம்" என திரு.சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் கூறியிருந்தார். உங்கள் வன்னித் தலைமையின் இந்த எதிர்பாராத முடிவானது மட்டு-அம்பாறை வாழ் மக்களாகிய எங்களை மிகவும் வேதனைப்படுத்தியுள்ளது. இங்கிருந்து தப்பி வந்த கௌசல்யன், ராபட், ராம் போன்றோரின் திரிபுக் கதைகளைக் கேட்டுவிட்டு இவ்வாறான முடிவினை உங்கள் தலைமை எடுத்தது வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சியுள்ளது.

எமது மக்களும் போராளிகளும் தமிழீழப் போராட்டத்தில் மிகவும் அக்கறையும் வேகமும் கொண்டவர்கள் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்தத் தேவையில்லை. கடந்த வருடம் அரசாங்கம் பேச்சுவார்த்தையினைத் திசைதிருப்பிப் போராட்டத்தை மழுங்கடிப்பது போல சில நடவடிக்கைகளை மேற்கொண்டபோது, 'போராட்டத்தை ஆரம்பியுங்கள்; உங்கள் பின்னால் நாங்கள் அணிதிரள்கிறோம்' என உங்களுக்கு முதன்முதலில் வேண்டுகோள் விடுத்ததும் இந்த மட்டு-அம்பாறை வாழ் தமிழ் மக்கள்தான் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் அல்ல என திரு.ஆனந்தசங்கரி அவர்கள் பிரசாரம் செய்தபோது அவரை கூட்டணியிலிருந்து உடனடியாக நீக்க வேண்டும் என முதன்முதலில் தீர்மானம் எடுத்தது மட்டக்களப்பு, அம்பாறை தமிழர் விடுதலைக் கூட்டணி கிளையினர்தான் என்பதும் உங்களுக்குப் புரியும். எனவே, இங்குள்ள மக்கள் உங்கள்மீதும் போராட்டத்தின் மீதும் எவ்வளவு ஆர்வமும் துடிப்பும் கொண்டவர்கள் என்பது உங்களுக்குத் தெரிந்த விடயமே.

நீங்கள் ஒரு தீர்க்கதரிசனமானவர், ஒரு நேர்மையானவர், சிறந்த தலைவர் என்றெல்லாம் நாமும் சர்வதேச சமூகமும் புகழ்ந்து பெருமைப்பட்டுக்கொண்டிருக்கும் இக் காலகட்டத்தில், தங்களின் இந்தத் தீர்மானம் மேற்சொல்லப்பட்ட உங்களின் இந்தப் புகழைச் சிதறடிக்க முனைகிறது.

இந்திய அமைதி காக்கும் படைக்கும் எமது இயக்கத்திற்கும் இடையில் மோதல் ஏற்பட்டு, பல உயிர் அழிவுகளும் பல சொத்தழிவுகளும் ஏற்படக் காரணமாயிருந்த அந்த துரதிர்ஷ்டவசமான நிகழ்வுக்குக் காரணம், எமது இயக்கத்தின் போர்த்திறனும் கட்டுப்பாடும் பற்றி இந்திய புலனாய்வுப் பிரிவினர் தவறான கணிப்பீடு செய்து அதனை அப்போது இந்தியப் பிரதமராக இருந்த அமரர் திரு.ராஜிவ் காந்தி அவர்களுக்கு வழங்கியிருந்தமையே என்பது நீங்களும் நாங்களும் அறிந்த விடயம் மட்டுமல்ல, திரு.திக்ஷித் அவர்களும் கூட இதனைத் தெரிவித்திருந்தார். 'றோ' வின் பிழையான கணிப்பீட்டைக் கேட்டு தவறான முடிவை திரு.ராஜிவ் காந்தி அவர்கள் எடுத்ததனாலேயே இந்த வரலாற்றுத் தவறு இன்றும் எம்மை வேதனையடையச் செய்கிறது.

அன்று அவர் செய்த அதே வரலாற்றுத் தவறைத்தான் எல்லோராலும் மிகவும் தீர்க்கதரிசனமுள்ள தலைவர் எனக் கூறப்படும் நீங்களும் செய்திருக்கிறீர்கள். அமரர் ராஜிவ் காந்தி அவர்களுக்கு, அவர் விட்ட அந்தத் தவறை உணர இரண்டு வருடங்கள் சென்றன. ஆனால், நீங்கள் விட்ட இந்தத் தவறை உணர இரண்டே நாட்கள் எடுத்தன. உங்கள் வன்னித் தலைமை இந்த முடிவை அறிவித்ததும் இங்குள்ள மக்கள் நடாத்திய ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் உங்களுக்கு இதனைத் தெரிவித்திருக்குமென நம்புகிறேன்.

பெருமதிப்பிற்குரிய தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களே! எங்கள் மனதில் தோன்றும் சில ஐயப்பாடுகளை, சந்தேகங்களை கேள்விக் கணைகளாக உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம். எங்கள் தேசியத் தலைவர் என்ற அடிப்படையில் இதற்குரிய பதிலைக கூற நீங்கள் கடைமைப்பட்டிருக்கிறீர்கள். எனவே, தயவு செய்து இதற்குரிய பதிலைத் தருவீர்களா?

கேணல் கருணா அவர்களினால் முன்வைக்கப்பட்ட இந்தக் கருத்து உங்கள் தலைமை கூறுவது போல ஒரு தனிமனிதப் பிரச்சினை அல்ல என்பதனைத் தற்போது ஏற்றுக்கொள்ளுகிறீர்களா? அதுமட்டுமல்ல, ஆயிரக்கணக்கான போராளிகளும் 80 வீதமான மட்டு-அம்பாறை வாழ் மக்களும் உங்களின் வழிநடத்திலின் கீழ் கேணல் கருணா அவர்களின் தலைமையை ஆதரிக்கிறார்கள் என்பதனை ஏற்றுக் கொள்ளுகிறீர்களா?

கருணா அவர்கள் பிரதேசவாதம் கூறுகிறார் என உங்கள் வன்னித்தலைமை கூறுகிறது. இந்தப் பிரதேசவாதத்தின் நதிமூலம் எங்கே இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? அது எங்கிருந்து தோன்றியது என்பதும் உங்களுக்குத் தெரியுமா? மதிப்பிற்குரிய தேசியத் தலைவர் அவர்களே! அந்தப் பிரதேசவாதம் உங்கள் வன்னித் தலைமையிடமும் வடக்குத் தமிழ் மக்கள் சிலரிடமும் இல்லை என நீங்கள் ஆணித்தரமாகக் கூறுவீர்களா?

எங்கள் தேசியத் தலைவர் அவர்களே! ஏ9 பாதையில் உங்களுக்கு வரியாக ஒரு நாளைக்குக் கிடைக்கும் வரிப் பணம் எத்தனை இலட்சம் ரூபா எனக் கூறுவீர்களா? போக்குவரத்துக்காக ஏ9 பாதை திறந்து இவ்வளவு காலப்பகுதியில் உங்களுக்குக் கிடைத்துள்ள மொத்தப் பணம் எவ்வளவு எனக் கூறுவீர்களா? இந்தப் பணத்தில் எத்தனை சதவீதம் கிழக்கு மாகாணத்திற்காகச் செலவிட்டுள்ளீர்கள் எனக் கூற முடியுமா? இப் புறக்கணிப்பு பிரதேசவாதமாகாதா?

உங்கள் வன்னிப் பிரதேசத்திலுள்ள மாவீரர் குடும்பம் ஒன்றிற்கு ஒரு காணித் துண்டும் பதினைந்து இலட்சம் ரூபா பணமும் கொடுத்துள்ளீர்கள். இதனை ஏற்றுக் கொள்கிறீர்களா? இவ்வாறு எத்தனை மாவீரர் குடும்பத்திற்குக் கொடுத்துள்ளீர்கள் என உங்களால் வெளிப்படையாகக் கூற முடியுமா? இதேபோல் மட்டு-அம்பாறையில் உள்ள மாவீரர் குடும்பங்களில் எத்தனை குடும்பங்களுக்கு இவ்வுதவி உங்களால் வழங்கப்பட்டுள்ளது என உங்களால் கூற முடியுமா? இப் புறக்கணிப்பு பிரதேசவாதமில்லையா?

பெருமதிப்பிற்குரிய தேசியத் தலைவர் அவர்களே! உங்களுக்குப் பெரும் புகழையும் மதிப்பையும் சம்பாதித்துக் கொடுத்த பல வெற்றித் தாக்குதலுக்குக் காரணகர்த்தாக்களாக இருந்த பல மாவீரர் குடும்பங்கள் இன்று ஓலைக் குடிசையில் ஒரு வேளை கஞ்சிக்குக் கூட வழியில்லாமல் மிகவும் வேதனைப்படுகிறார்கள் என்பதனை மிகவும் பணிவுடன் தங்களுக்குக் கூறிவைக்க விரும்புகிறேன்.

சென்ற வருடம் வட-கிழக்கு அபிவிருத்திக்காகப் பல நாடுகள் உதவ முன்வந்தது உங்களுக்கு ஞாபகமிருக்குமென நம்புகிறேன். இவற்றிலிருந்து கிடைக்கும் நிதி மூலம் வட-கிழக்கை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கத்துடன் இணைந்து சிரான் எனும் அமைப்பை நீங்கள் ஆரம்பித்தது உங்களுக்குத் தெரியுமல்லவா? அப்போது வட-கிழக்கிலுள்ள சகல திணைக்களங்களும் தங்களது பிரதேசங்களுக்குச் செய்ய வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான முன்வரைபை கிளிநொச்சியில் திரு.சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் கூட்டத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என உங்கள் வன்னித் தலைமையால் கேட்கப்பட்டது. எமது மட்டு-அம்பாறை திணைக்களத் தலைவர்களும் எமது பகுதியை அபிவிருத்தி செய்வோம் என்ற ஆதங்கத்தில் தங்கள் தங்களது திணைக்களங்கள் சார்பான அபிவிருத்திக்கான முன்வரைபுகளைச் சமர்ப்பித்திருந்தார்கள். இதில் மட்டு-அம்பாறை திணைக்களத் தலைவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு திட்ட வரைபைக் கூட உங்கள் வன்னித்தலைமை தேர்ந்தெடுக்கவில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? இது கூட ஒரு பிரதேசவாதம் ஆகாதா?

இந்தக் கூட்டம் நடைபெற்ற அடுத்த மாதம் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு.மோனகுருசாமி அவர்கள் தலைமையில் வழமையாக ஒவ்வொரு மாதமும் நடைபெறும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதில் சகல திணைக்களத் தலைவர்களும் வன்னித் தலைமையின் இந்தப் புறக்கணிப்பைச் சுட்டிக்காட்டிக் குமுறியதை நீங்கள் அறிவீர்களா? வடபகுதி தனியே இராணுவ சண்டைகளால் மட்டும் பாதிக்கப்பட்டது. ஆனால், எமது பகுதி இராணுவ சண்டைகளால் மட்டுமல்ல, தமிழ்-முஸ்லிம் இனக் கலவரங்களாலும் பாதிக்கப்பட்ட பிரதேசம். எனவே, இங்குதான் கூடுதல் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஆனால், நாங்கள் கொண்டு சென்ற எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்தையும் அவர்கள் கவனத்திலெடுக்காது, வடபகுதிக்கான அபிவிருத்தித் திட்டங்களை மட்டுமே ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இதனைச் சுட்டிக்காட்டி எமது பகுதியின் அபிவிருத்திக்கும் சிரான் அமைப்பின் மூலம் நிதி உதவி பெற்றுத் தர வேண்டும் என எல்லோரும் ஒட்டுமொத்தமாக இந்த அபிவிருத்திக் கூட்டத்தில் அரசாங்க அதிபரிடம் கேட்டுக்கொண்டது உங்களுக்குத் தெரியுமா? இதனைப் பிரதேசவாதம் எனக் கூற முடியாதா?

(இதன் உண்மைத் தன்மையை இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைத்துத் திணைக்களத் தலைவர்களிடமும் கேட்டு அறிந்துகொள்ளலாம்)

அடுத்ததாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரான திரு.சுந்தரம்பிள்ளை அவர்களை உங்களது பொட்டு அம்மான் குழு சுட்டுக் கொன்றதை ஏற்றுக்கொள்ளுகிறீர்களா? அல்லது இதற்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை என்ற உங்களது வழமையான தாரக மந்திரத்தையே கூற முனைகின்றீர்களா? ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடும் தமிழர்களைத் துரோகிகள் என உங்கள் வன்னித் தலைமையால் தீர்மானிக்கப்பட்டிருந்தால், இவ்வாறு ஏனைய மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்ட எவரையும் நீங்கள் தீர்த்துக்கட்ட முனையாது, எமது பிரதேசத்தில் மட்டும் உங்கள் கைவரிசையைக் காட்டி, இங்கு மட்டும் குழப்பம் விளைவிக்க உங்கள் வன்னித் தலைமை நினைத்ததன் நோக்கம் என்ன எனக் கூறுவீர்களா? அவ்வாறு இவர் ஒரு துரோகி என உங்களால் தீர்மானிக்கப்பட்டால், தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதி விடுதலைப் புலிகளல்ல என உரக்கக் குரல் கொடுத்த மோசமான துரோகி திருவாளர் ஆனந்தசங்கரி அவர்களை மட்டும் உங்கள் பகுதியில் விட்டு வைத்திருக்கிறீர்களே? இதுவும் பிரதேசவாதமாகாதா?

உங்களின் நேரடி வழிகாட்டலின் கீழ் கருணா அம்மான் தலைமையில் மட்டு-அம்பாறை பிரதேசத்தில் போராட்டத்தைத் தொடருங்கள் என, கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு.திருச்செல்வம், அரச அதிபர் திரு.மோனகுருசாமி, பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட திரு.இராஜன் சத்தியமூர்த்தி ஆகிய மூவரும திரு.கருணா அம்மானுக்கு ஆலோசனை வழங்கினார்கள் என, இங்கிருந்து தப்பி வந்த திரு.கௌசல்யன், திரு.ராம், திரு.ரமேஷ் போன்றோரின் கதையைக் கேட்டு,அம் மூவரையும் தீர்த்துக்கட்டுமாறு உங்கள் வன்னித் தலைமை மூன்று குழுக்களை இங்கு அனுப்பி வைத்தது உங்களுக்குத் தெரியுமா?

இதன் முதல் கட்டமாக மட்டக்களப்பு பிரதேச அபிவிருத்தி ஆர்வலர் திரு.திருச்செல்வம் அவர்களை உங்கள் வன்னிக் குழு சுட்டது நியாயமானது என நீங்கள் நினைக்கிறீர்களா?

அடுத்ததாக அரசாங்க அதிபர் அவர்கைளத் தீர்த்துக்கட்டுவதற்காக உங்கள் வன்னித் தலைமையால் அனுப்பிவைக்கப்பட்ட குழுக்களில் ஒன்று 26.04.2004 அன்று பகல் 12.30 மணியளவில் மட்டு-இந்து கல்லூரிக்கு வந்தது உங்களுக்குத் தெரியுமா? அங்கு வாக்கெண்ணும் மண்டப ஒழுங்கமைப்பைப் பார்வையிட வரும் அரச அதிபர் அவர்களைத் தீர்த்துக்கட்ட அக் குழு அங்கு வந்து காத்திருந்தது. அவர் அந்த வேளை வராததால் வாக்கெண்ணும் தினத்தன்று அவருக்காக ஒதுக்கப்பட்ட அறை, அதன் அமைவிடம் போன்றவற்றை அக் குழு பார்வையிட்டுச் சென்றது உங்களுக்குத் தெரியுமா? இதே தினம் மற்றைய குழுவினரால் அவர் பிள்ளையாரடி எனும் இடத்தில் வைத்து சுடப்பட்டது அநியாயமானதாக உங்களுக்குத் தெரியவில்லையா?

திரு.ஜோசப் பரராஜசிங்கம் அவர்களை எப்படியாவது எம்.பி. ஆக்குங்கள். திரு.இராஜன் சத்தியமூர்த்தியைத் தீர்த்துக்கட்டுங்கள் என இங்குள்ள உங்கள் குழுக்களுக்கு உங்கள் வன்னித் தலைமையால் கட்டளை அனுப்பிவைக்கப்பட்டது உங்களுக்குத் தெரியுமா? தெரியுமென்றால் உங்கள் அனுமதியுடன்தானா இது அனுப்பி வைக்கப்பட்டது? உங்கள் கட்டளையை ஏற்றுக்கொண்டு, எம் மண்ணின் அபிவிருத்திக்காகப் பாடுபட்ட திரு.இராஜன் சத்தியமூர்த்தி அவர்கள் உங்கள் புலனாய்வுக் குழுவால் வீட்டில் தெய்வ வழிபாட்டின்போது ஈவிரக்கமில்லாமல் சுடப்பட்டது மனிதாபிமானம் என நினைக்கிறீர்களா?

இவ்வாறு எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்காகப் பணிபுரியும் எமது பகுதிப் புத்தி ஜீவிகளைக் கொன்றழிப்பது உங்களின் கேவலமான, கீழ்த்தரமான பிரதேசவாதமில்லையா?

உங்களின் வன்னித் தலைமை எப்பாடுபட்டாவது திரு.ஜோசப் பரராஜசிங்கத்தை எம்.பி. ஆக்குங்கள் என்ற கட்டளையை அநீதியான முறையிலாவது நிறைவேற்றும் பொருட்டு, இக் குழுக்களிலொன்று 29.03.2004 அன்று பகல் 12.00 மணிக்கு மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல்கள் ஆணையாளர் திரு.கிருஷ்ணானந்தலிங்கம் அவர்களை அணுகி பிரதம வாக்கெண்ணும் அலுவலர்களின் பெயர்ப் பட்டியலின் பிரதி ஒன்றைப் பெற்றுக்கொண்டு சென்றது உங்களுக்குத் தெரியுமா? இதன் பின்னர் சில பிரதம வாக்கெண்ணும் அலுவலர்களை இக் குழு இரகசியமாக அணுகி உதவும்படி கோரிக்கை விட்டது உங்களுக்குத் தெரியுமா?

தேர்தல் முடிவுகளின்படி, உங்கள் வன்னித் தலைமைக்கு ஆதரவாகச் செயற்பட்ட திரு.ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் இங்குள்ள பகுதி மக்களால் ஒதுக்கப்பட்டு, கருணா அம்மான் அவர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்ட மற்றைய 4 வேட்பாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து இங்குள்ள மக்கள் உங்கள் வழிகாட்டலின் கீழ் கருணா அம்மான் தலைமையைத்தான் ஏற்றுக்கொள்ளுகிறார்கள், ஆதரிக்கிறார்கள் என்பதனை ஏற்றுக்கொள்ளுகிறீர்களா?

அதுமட்டுமல்ல, திரு.ஜோசப் பரராஜசிங்கம் 3 தடவைகள் பாராளுமன்றக் கதிரையை அலங்கரித்த ஒருவராக இருந்தபோதும், தேர்தலில் வெற்றிபெற்ற நால்வரும் தேர்தலுக்குப் புத்தம் புது முகங்கள். அப்படியிருந்தும், திரு.ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் ஓரங்கப்பட்டதிலிருந்து இங்குள்ள மக்களின் உணர்வலைகள் உங்களுக்குப் புரிகிறதல்லவா?

தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களே! மேலும் ஒரு சுவாரசியமான விடயம் என்னவென்றால், உங்கள் வன்னித் தலைமையினால் திரு.இராஜன் சத்தியமூர்த்தி அவர்கள் ஈவிரக்கமின்றித் தீர்த்துக்கட்டப்பட்டபின், தேர்தல் தினத்தன்று அவர் உயிரோடு இல்லாத நிலையிலும் அவர், உங்கள் வன்னித் தலைமையின் செல்லப்பிள்ளையான திரு.ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் பெற்ற வாக்குகளைவிட 241 வாக்குகளே குறைவாகப் பெற்றுள்ளார். இம் முடிவு தரும் செய்தி உங்கள் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பவில்லையா?

எனவே, தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களே! எம் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, தங்கள் முடிவினை மீள் பரிசீலனை செய்து, பல வெற்றிகளை உங்கள் காலடியில் குவித்த திரு.கருணா அம்மான் அவர்களையும் அரவணைத்துக் கொண்டு செல்லுமாறு மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகின்றோம். தீர்க்க தரிசனமும் நேர்மையும் உள்ள நீங்கள் நிச்சயம் இதற்கு ஒரு நல்ல முடிவு எடுப்பீர்கள் என நாங்கள் இன்னும் திடமாக நம்புகிறோம்.

அவ்வாறு நீங்கள் செய்யத் தவறும் பட்சத்தில் எமது போராட்டத்தின் நோக்கம் சிதறடிக்கப்பட்டு, மீண்டும் நாம் அநாதைகளாக ஏங்கி வாழ வேண்டி ஏற்படும் என நினைக்கிறோம். அதுமட்டுமல்ல, இவ்வளவு காலமும் எமது மாவீரர்கள் செய்த அளப்பரிய தியாகம், மக்களின் உயிரிழப்பு, சொத்தழிவுகள் எல்லாம் வீணானவையாகிவிடும். இதனை நீங்கள் மீள் பரிசீலனை செய்யாது, எதேச்சாதிரமாகச் செயற்படுவீர்களானால் பின்னால் நாம் அனைவரும் வருந்த வேண்டி வரும் என்பதனை மிகவும் வேதனையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சிலவேளைகளில் நமது போராட்டம் ஆரம்ப நிலைக்கு மீண்டும் இறங்கும் நிலை கூட வரலாம்.

*-அன்புடன் ரம்போ பிரசாத், கொக்கட்டிச்சோலை.*


**தெய்வீக மருத்துவம்**

சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை

Goverment Approved Charity Regd No - HA/4/BT/219

டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P.J.P.(SL)

கிரக தோஷம் காலப்பகையால் பிரிந்த காதலர்கள், கணவன் – மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீய பழக்கம், மனிதத் தீமை, மருந்தீடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ, பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைச்சக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது.

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி, ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்.)

Theiveegam Srilanka
Head Office
Batticaloa


தெய்வீக ஸ்ரீலங்கா
தலைமையகம்
மட்டக்களப்பு

2224829, 0094077032844 Sothidar @ hotmail.com.


"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE"



**நான் நிரூபித்துக் கொண்டிருக்கும் மலையாள மாந்திரீகம்**







எனக்கு இறைவன் தந்த நன்கொடை

இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை

முடியாத வேலைகளை முடியும் என்று பாரம் எடுப்பதில்லை

அத்தோடு நிறைவேறும் திகதியையும், வாங்கும் பணத்திற்கும் ரசீது கொடுப்பது

**ஓம் சாந்தி ஆதிபராசக்தி**

**அ.ஜெயபாரதி - செங்கலடி**

அருள்மிகு துர்க்கா தேவியின் பரிபூரண அன்பையும் ஆசீர்வாதத்தையும் பெற்ற ஐயா அவர்களே, தாங்கள் எனக்கு வங்கியில் வேலை கிடைப்பதற்காக மிகுந்த சிரமம் எடுத்து துர்க்கா தேவியிடம் வேண்டி நான் எனது இலட்சியத்தில் வெற்றியடைய பெரும் முயற்சி எடுத்தீர்கள். உங்களின் ஆத்ம பலமே எனக்கு விரைவில் இந்த வெற்றியைப் பெற்றுத்தந்தது. ஐயா அவர்களே! உங்கள் பணி மென்மேலும் என்போன்றவர்களுக்குக் கிடைக்க வேண்டும். அதற்கு அம்பிகை உங்களுக்கு அருள்புரிய வேண்டும். ஐயாவின் பணி தொடர்க...

எனது சொந்த ஊரிலேயே எனக்கு வேலை கிடைத்ததுடன் ஐயா அவர்கள் குறிப்பிட்டுக் கூறிய திகதிக்கு முன்பாகவே நான் வங்கியில் நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டேன் என்பதை நான் பெரும் மகிழ்ச்சியுடன் மீண்டும் கூறுகின்றேன். ஐயா, உங்கள் ஆசீர்வாதத்தையே மீண்டும் மீண்டும் அள்ளித்தாருங்கள்.

**(வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகை உண்டு. உங்கள் இரகசியங்கள் பாதுகாக்கப்படும்)**

பேராசிரியர் டாக்டர் பி.கே.சாமி (J.D.G.A.N)J.P.

ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம், மாந்திரீக உச்சாடன பீடம், இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு -13.

Tel : 2342463, 2342464, 24706015 Fax : 2344831

ஞாயிற்றுக்கிழமை வாரம்தோறும் எமது ஜோதிட் கேள்வி-பதில் நிகழ்ச்சிகளை ரூபவாஹினி 'ஐ' அலைவரிசையில் கேளுங்கள்

நுவரெலியாவில் : 33, Daily Fair Complex, Nuwara Eliya.
Tel : 052-2222508, 2235097.



**மட்டக்களப்பு மாந்திரீகம்**

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**

50, THEATRE ROAD,
NINTHAVUR-21,
SRI LANKA.

☎ 067-2250349

**அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் 15ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு திருமதி அமிர்தலிங்கம் வெளியிட்ட கருத்துக்கள்**


## இன்னொருவர் பார்வையில்

# “புலிகளே எனது கணவரைக் கொன்றனர்!”

# மங்கையற்கரசி அமிர்தலிங்கம் விபரிப்பு

“புலிகளே எனது கணவரைக் கொன்றனர்” என்று அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் மனைவியான திருமதி மங்கையற்கரசி தெரிவித்தார். அமிர்தலிங்கம் ஒப்பற்ற பெருந் தலைவராக விளங்கியவர். தனது அன்புக்குரிய கணவரை இழந்து சுமார் பதினைந்து வருடங்கள் கழிந்துவிட்ட இன்றைய நிலையில் புலிகளே தனது கணவரைக் கொன்றதாக முதல் தடவையாக அவர் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் ஒப்பற்ற பெருந் தலைவராகவும் தேசியத் தலைவராகவும் விளங்கிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும்



அமிர்தலிங்கம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளருமான அ.அமிர்தலிங்கத்தின் பதினைந்தாவது ஆண்டு நினைவு தினம் கடந்த 13.07.2004 ஆகும். ஒரு அரசியல்வாதி என்பதற்கும் மேலாக எல்லோராலும் விரும்பப்பட்ட அமிர்தலிங்கம், “எங்கள் அமிர்” என்றும் “தளபதி அமிர்” என்றும் பல்வேறு விதமாக அழைக்கப்பட்டு வந்தார்.

புலிகளின் உறுப்பினர்களான விசு, அலோசியஸ் மற்றும் சிவகுமாரன் ஆகியோர் 13.07.89இல் அமிர்தலிங்கம் அவர்களைக் கொழும்பிலுள்ள யோகேஸ்வரனின் இல்லத்தில் சந்தித்துப் பேச ஏற்பாடாகி இருந்தது. அப்போதுதான் அவர்கள் அமிர்தலிங்கத்தையும் யோகேஸ்வரனையும் கொடூரமாகச் சுட்டுக்கொன்றனர்.

இந்தச் சம்பவத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரான மு.சிவசிதம்பரம் பலத்த காயம் அடைந்தபோதும் பின்னர் உயிர் தப்பிக்கொண்டார்.

13.07.1989இல் அமிர்தலிங்கம் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட அந்தக் கொடூர சம்பவம் குறித்து அவரது மனைவியான-விதவையாக வாழ்ந்து வரும் மங்கையற்கரசி பகிரங்கமாகப் பேசுவது இதுவே முதற் தடவையாகும்.

“ஆசிய ட்றிபியூன்” சஞ்சிகைக்கு வழங்கியுள்ள பேட்டியொன்றில் அந்தக் கொடூரமான நினைவு நாளை நினைவு கூர்ந்தார். அமிர்தலிங்கம் அவர்களது வாழ்க்கை முழு நாட்டுக்கும் குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு மிகவும் பெறுமதி மிக்கதாகும்.

“கொழும்பின் கறுவாத் தோட்டம் பகுதியிலுள்ள புல்லர்ஸ் ஒழுங்கையிலுள்ள ஒரு வீட்டில் நாங்கள் எல்லோரும் குடியிருந்தோம். அந்த மாடி வீட்டின் கீழ்த் தளத்தில் நாங்களும் மேற் தளத்தில் யோகேஸ்வரன் குடும்பத்தினரும் குடியிருந்தோம்.

சம்பவம் நடந்த 13.07.1989 அன்று நாங்கள் அனைவரும் எமது பகுதியில் இருந்தோம். எனது நினைவுகள் சரியானது எனின், பிற்பகல் சுமார் 6.30 மணியளவில் எமது வீட்டு உதவியாள் ஒருவர் யோகேஸ்வரன் தந்ததாகக் குறிப்பிட்டு ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து எனது கணவரிடம் கொடுத்தார். அவர் அப்போது எங்களுடன் பேசிக்கொண்டிருந்தார். அப்போது சிவசிதம்பரம் ஐயாவும் எங்களுடன்தான் இருந்தார். எங்களுடனிருந்த மாவை சேனாதிராஜா அப்போது தொலைக்காட்சியில் வாசிக்கப்பட்டுக் கொண்டிருந்த செய்திகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

யோகேஸ்வரன் அனுப்பியிருந்த கடிதக் குறிப்பைப் படித்த எனது கணவர், அருகிலிருந்த சிவசிதம்பரம் ஐயாவிடம் ஏதோ சொன்னார். இதையடுத்து சிவசிதம்பரமும் எழுந்து மாடிப் படி வழியாக ஏறி யோகேஸ்வரன் குடியிருந்த மேல் பகுதிக்குச் சென்றார்.

இருக்கையிலிருந்து எழுந்த எனது கணவர், மேல் மாடி நோக்கிச் சென்றார். அதற்கு முன்பாக, “செய்திகளுக்குப் பின்னர் தொலைக்காட்சி நாடகம் ஒன்று ஒளிபரப்பாகவுள்ளது. மன்னன் அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்தமை பற்றிய கதையை அடிப்படையாகக் கொண்டது இந்தத் தொலைக்காட்சி நாடகம். நீங்கள் அதனைப் பார்வையிடுங்கள். ஆனால், யோகேஸ்வரன் நாங்கள் மேல் மாடிக்கு வருவதை விரும்புகிறார். நான் மேல் மாடிக்குச் செல்கிறேன். மிக விரைவில் திரும்பி வருகிறேன்” என்றார்.

இதனையடுத்து நான், லண்டனுக்கான தொலைபேசித் தொடர்புக்குப் பதிவு செய்துள்ளதைச் சுட்டிக்காட்டினேன். எமது இரண்டாவது மகனான டாக்டர் பகீரதன் முதல்நாள்தான் மனைவியுடன் லண்டனுக்குப் பயணமாகியிருந்தார். அவர்கள் பாதுகாப்பாக லண்டனைச் சென்றடைந்து விட்டார்களா என்பதை அறியும் ஆவல் எமக்கு இருந்தது.

“தொலைபேசித் தொடர்பு கிடைத்ததும் நீங்கள் பேசுங்கள். எனக்கும் சில வார்த்தைகள் சொல்லி அனுப்பினால் நானும் வந்து கலந்துகொள்கிறேன்” என்று எனது கணவர் பதிலளித்தார்.

இந்த நேரத்தில் மேல் மாடிக்குப் புலிகளின் உறுப்பினர்கள் சிலர் எனது கணவருடன் பேச்சு நடத்துவதற்காக வந்துள்ளார்கள் என்பதை நான் அறிந்திருக்கவில்லை.

எமது இருப்பிடத்தைவிட்டு யோகேஸ்வரன் குடும்பத்தினர் வசித்த மேல் மாடிக்கு மாடிப் படிகள் வழியாக அவர் சென்றார். மூன்று அல்லது நான்கு படிகள் மேலேறிய அவர், நின்று சில கணங்கள் நிதானித்ததை நான் அவதானித்தேன். எனினும் ஒரு நிமிட தாமதத்தின் பின்னர் அவர் மீண்டும் படியேறிச் சென்றார்.

அவர் சென்றதும் தொலைக்காட்சித் திரையில் பார்வையைப் பதித்துச் சிந்தனையை ஒருமுகப்படுத்த முயன்றேன். அப்போது சேனாதிராஜாவும் என்னுடன் இருந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அவதானித்துக்கொண்டிருந்தார்.

“மேல் மாடியில் யாருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுகிறது யார் யார் வந்துள்ளனர்.” சேனாதிராஜாவிடம் நான் வினவினேன். தனக்கு எதுவும் தெரியாது என்பதே சேனாதியின் பதிலாக இருந்தது. இரண்டு நிமிடங்கள் கழிந்திருக்கும். சேனாதியுடன் தங்கியிருந்த கௌரி என்ற இளைஞன் எமது இடத்திற்கு வந்தான். சேனாதியை ஒருபுறம் அழைத்துச் சென்றான். மிகவும் தாழ்ந்த குரலில் ஏதோ குசுகுசுத்தான். எமக்கு எதுவும் கேட்கவில்லை.

சேனாதியும் ஏதோ கூறினார். கௌரி அப்பால் சென்றுவிட்டான். தனது உடம்பைச் சரிசெய்துகொண்டு சேனாதி மீண்டும் வந்து இருக்கையிலமர்ந்து தொலைக்காட்சி நிகழ்ச்சியை அவதானித்தார்.

சில நிமிடங்களில் நான் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களைக் கேட்டேன்.

எமது பகுதியின் முன் பகுதிக்கு விரைந்தேன். எமது வீட்டின் பிரதான பாதைக்கு ஊடாக யாரோ சிலர் உட்புக முயல்வதாகவும், அதனால் அங்கு ஏதோ பிரச்சினைகள் தோன்றியிருக்கலாம் எனவும் நான் எண்ணினேன். இதனால் முன் பகுதிக்கு வந்து என்ன நடக்கிறது? எங்கு நடக்கிறது? என்பதை உறுதிப்படுத்த முனைந்தேன்.

நான் கதவு திறந்ததைக் கண்டதும், எனது கணவரின் மெய்ப்பாதுகாவலர் ஒருவர் என்னைக் கண்டுகொண்டார். கதவைத் திறக்க வேண்டாம் எனவும் உள்ளே இருக்கும்படியும் அவர் சைகை செய்தார்.

ஆனால் இவ் வேளையில் துப்பாக்கிச் சூடுகள் மேல் மாடியிலும், பிரதான வாயிலிலும் இடம்பெறுதை ஊகித்துக் கொண்டேன்.

எனது கணவரும் மேல் மாடிக்குச் சென்றிருந்த விடயம் சிந்தனையில் பொறியாகத் தட்டியது. இதனையடுத்து பின்புறத்திலுள்ள மாடிப் படிகள் வழியாக மேல் மாடிக்கு விரைந்தேன்.

பின்புற வழியாக மேல் மாடிக்குச் சென்றடைந்ததும், எனது கணவர் பிரம்பு இருக்கையில் அமர்ந்து இருப்பதைக் கண்டேன். நான் எதனையும் சந்தேகிக்கவில்லை. ஆனால், சிவசிதம்பரம் ஐயா தரையில் புரண்டுகொண்டிருந்தார்.

அவருக்கு மாரடைப்பு அல்லது அது போன்ற ஏதாவது ஏற்பட்டிருக்கலாம் என்றே நான் கருதினேன். இதனால் கீழ்த் தளத்துக்கு விரைந்து வந்து தலையணை ஒன்றைக் கொண்டுவந்து வைத்தேன். இதன் பின்னர் எனது கணவரின் இருக்கைக்குப் பின்புறமாகச் சென்று எனது இரு கைகளாலும் அவரது முகத்தையும் நெஞ்சையும் தொட்டுத் தூக்கினேன்.

அப்போது அவரது வாய் திறந்தது. இரத்தம் குபீரெனப் பாய்ந்தது.

அவரது வாயிலிருந்து இரத்தம் பீறிட்டதும் அவர் அசைவற்று இருந்ததும் என்னை நிலைகுலைய வைத்துவிட்டது.

இப்போது சிவா ஐயா சிறிது உணர்வு வந்தவராக, தம்மைச் சுற்றி என்ன நடந்தது என்பதை விளக்க முற்பட்டார். தலையை உயர்த்திப் பார்த்தார். என்னைக் கண்டுகொண்டார். “இந்தப் புலிகளை வாழ்க்கையில் ஒருபோதும் நம்ப வேண்டாமென யோகேஸ்வரனுக்கு எத்தனை தடவைகள் எடுத்துச் சொன்னேன்” என்பது சிவா ஐயாவின் குரலாக ஒலித்தது.

“இப்போது என்ன நடந்துள்ளது பார்த்தீர்களா? எல்லாமும் முடிந்துவிட்டதே” அவர் கலங்கினார்.

இப்போது மீண்டும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கீழ்த் தளத்திலிருந்து கேட்டன.

எனது கணவரின் நிலையைக் கண்டு உணர்ந்துகொண்டதும் எனது தோள்களில் அவரது தலையைச் சுமந்தபடி அசைவற்று நின்றுகொண்டிருந்தேன். எனது காலடியில் இரத்தம் குளமாகத் தேங்கிக் கொண்டிருந்தது.

இக் கணத்தில் யோகேஸ்வரனின் உடலிலிருந்து முனகல் சத்தம் கேட்டது. அவரும் அசைவற்ற நிலையில்தான் கிடந்தார். அவரது உடலிலிருந்து உயிர் பிரிந்து போன கடைசிக் கணமாக அது இருக்கக் கூடும். இதனையடுத்து என்னைச் சுற்றிலும் அனைத்தும் அமைதியாக இருந்தது.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் ஓய்ந்து போனதும் அசைவற்ற நிலையில் எனது கணவருடன் நான் இருந்த இடத்திற்குப் பொலிஸார் வருவதைக் கண்டேன்.

எனது கணவரைத் தூக்கிக் கொண்டு கீழேயிருந்த ஜீப் வண்டிக்குச் சென்றனர். யோகேஸ்வரனையும் சிவா ஐயாவையும் கூட அவர்கள் தூக்கிச் சென்றனர்.

எனது கணவரைக் கொண்டு செல்லும் பொலிஸாரின் பின்னால் ஓடினேன். ஜீப் வேகமாக விரைந்து போனது.

நான் அனைத்தையும் உணர்ந்தேன். 1956இல் திருமண பந்தத்தின் மூலமாக இணைந்துகொண்ட கணவரிடமிருந்து நான் பலவந்தமாகத் தனிமைப்படுத்தப் பட்டுவிட்டேன் என்பதை உணர்ந்தேன். கொடூரம் நிறைந்த உலகில் நான் தனியனாக இருப்பதை உணர்ந்தேன். கொலைகாரர்கள் கொடுமையானதும் கோழைத்தனமுமான முறையில் எனது கணவரின் உயிரைப் பறித்துச் சென்றுவிட்டனர் என்பதை உணர்ந்தேன்.

இந்த வேளையில் எனது கணவரின் மெய்ப்பாதுகாவலர்கள் கொலையாளிகளான புலி உறுப்பினர்கள் மூவரைச் சுட்டுக் கொன்றிருப்பதாகத் தெரிய வந்தது. விசு, அலோசியஸ், மற்றும் சிவகுமார் ஆகியோரே பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களாவர்.

ஈவிரக்கமற்ற முறையில் எனது கணவரைச் சுட்டுக் கொன்றவர்கள் புலிகளே. பிரபாகரன் மீது அவர் எவ்வளவு அன்பும் மதிப்பும் கொண்டிருந்தார். தனது பிள்ளைகளில் ஒருவரைப் போலவே பாசம் கொண்டிருந்தார். நம்பிக்கை கொண்டிருந்தார். போற்றிக் கொண்டிருந்தார். ஆனால், புலிகள் எனது கணவரைக் கொன்றுவிட்டனர். பழி பாவம் முழுவதும் அவர்களைச் சாரும். பிரபாகரனையே சேரும். ஆனால், நான் அவர்களைப் பழிவாங்க எண்ணவில்லை.

எனது அன்புக்குரிய கணவரை இழந்தது எனக்கு இப்போதும் ஈடு செய்ய முடியாத ஒரு இழப்பு. எனக்கும் தெரியாத காரணங்களுக்காக அவர் இந்த உலகிலிருந்து கொடூரமான முறையில் அகற்றப்பட்டுவிட்டார். ஒரு எறும்புக்கும் கூடத் தொந்தரவு செய்ய விரும்பாதவர் அவர். அவரைச் சுட்டுக் கொன்ற சம்பவம் காரணமாக என்னால் ஒருபோதும் புலிகளுடன் இணங்கிப் போக முடியாது.

அவர் தனது வாழ்நாளின் இறுதிப் பகுதியில் அடிக்கடி கூறிய ஒரு விடயம் இது. “அரசியலிலிருந்து ஒதுங்கிக்கொண்டு இளம் தலைமுறையினருக்கு வழிவிட விரும்புகிறேன். அவர்கள் விரும்பிக் கேட்டால் ஒரு ஆலோசகராக மட்டும் செயற்படலாம்” என்பதுதான் அது.

என் கணவரைப் போன்ற இத்தகைய ஒருவரைச் சுட்டுக் கொல்வது புலிகளுக்கு எப்படிச் சாத்தியமானது என்பது எனக்குத் தெரியாது.

எனது இரு பிள்ளைகளுக்குத் தந்தையான அவர்களது பிள்ளைகளுக்குப் பேரனான எனது கணவரை இழந்துள்ளமைக்குக் காரணமான யதார்த்தம் எனக்கு இன்னமும் பிடிபடவில்லை. ஆனால், எனது கணவரை இந்த உலகிலிருந்து பிரித்துவிட்டதன் மூலமாகப் புலிகள் எதனைச் சாதித்து விட்டனர்? அவர்களுக்குத் தமிழ் ஈழம் கிடைத்துவிட்டதா? சரித்திரம் பதில் கூறட்டும். இவ்வாறு திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் கூறியுள்ளார்.

> **ஈவிரக்கமற்ற முறையில் எனது கணவரைச் சுட்டுக் கொன்றவர்கள் புலிகளே. பிரபாகரன் மீது அவர் எவ்வளவு அன்பும் மதிப்பும் கொண்டிருந்தார். தனது பிள்ளைகளில் ஒருவரைப் போலவே பாசம் கொண்டிருந்தார். நம்பிக்கை கொண்டிருந்தார். போற்றிக்கொண்டிருந்தார். ஆனால், புலிகள் எனது கணவரைக் கொன்றுவிட்டனர். பழி பாவம் முழுவதும் அவர்களைச் சாரும். பிரபாகரனையே சேரும். ஆனால், நான் அவர்களைப் பழிவாங்க எண்ணவில்லை.**

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## -வாழ்க்கை சரிதம்-

Symphony ஐத் தயாரித்த இளைஞனின் ஆற்றலில் அவர்கள் அனைவருமே சொக்கிப் போயிருந்தார்கள். ஆர்வமுடன் ஒத்திகைக்கு வந்து, முழு மனத்தோடு அந்த இளைஞரின் தலைமையை ஏற்றுப் பணிபுரிந்தார்கள்.


தமிழகம் அன்றே ஒரு Symphony ஐ முழுக்க முழுக்க மேலைநாட்டு சாஸ்திரிய சங்கீதத்தில், அறுபத்துக்கும் மேற்பட்ட வாத்திய விற்பன்னர்களின் வாசிப்பில் அரங்கேற்றமாவதைக் கண்டு அநுபவித்திருக்க வேண்டும்.

அந்த Symphony ஐ உருவாக்கிய இளைஞரின் ஆசையும் அதுதான்.

ஆனால் அந்த ஆசை அப்போது நிறைவேறாது போயிற்று.

காரணம், அந்த இளைஞருக்கு திடீரென்று திரைப்படத்திற்கு இசையமைக்கும் வாய்ப்பு வரவே ஒத்திகை பார்த்த அளவிலேயே உருவான Symphony நின்று போனது.

இது குறித்து அந்த இளைஞர் அப்போது விசனப்பட்டிருந்தாலும், திரைப்படத்திற்கு முதன் முதலாக இசையமைக்க வந்த வாய்ப்பை அவர் நழுவ விட விரும்பவில்லை.



அவர் இசையமைத்த முதல் படம் வெளியாகி, வெள்ளி விழா கண்டு, பாடல்கள் அனைத்தும் பட்டிதொட்டிகள் வரை பவனி வந்தன.

முதல் முயற்சியாக, தமிழ்நாட்டிலேயே இசையை உருவாக்க பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே பிரயாசைப்பட்டு அந்த உருவாக்கத்தில் வெற்றியும் பெற்று, வாசிக்க வந்த வாத்தியக்காரர்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தி அரங்கேற்றம் செய்ய இயலாத சூழ்நிலைக்கு ஆளான அந்த இளைஞர் வேறுயாருமல்லர்; இதே இளையராஜாதான்.

பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே எழுதி நம்ம ஊர் வாத்திய வித்வான்களை பிரமிக்க வைத்த இளையராஜாவின் இசைத்திறனும், மேதாவிலாசமும் ஒரு சேரத் தெரிய வேண்டுமென்பது இறைவன் திருவுள்ளம்.

நாடு பெருமைப்படுவது போல் என் நண்பரின் சாதனை குறித்து நானும் பெருமைப்படுகிறேன்.

ஆனால் ஒரு முக்கியமான விஷயம், இன்று சாஸ்திரிய சங்கீதத்தில் தான் நிகழ்த்தியுள்ள சாதனையினால், இளையராஜாவின் கவனம் தமிழ்த் திரையுலகின் பக்கம் அவ்வளவு ஈடுபாட்டோடு இருக்காது என்கின்ற சந்தேகத்திற்கே இடமில்லை. இப்பவும் அவர் படப் பாடல்களில் அழுத்தமாகவே இருக்கிறார். எப்படி இளையராஜா பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே முயற்சியில் ஈடுபட்டார் என்ற விஷயம் எனக்கு மட்டும் தெரியுமோ அதுபோல், இன்றும் படப் பாடல்களில் தன் கவனம் சிதறாது அவர் செயல்படுகிறார் என்பதும் எனக்கு மட்டுமே தெரிந்த உண்மை.


எதைச் செய்தாலும் அதில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு ஆர்வத்தோடும் அக்கறையோடும் செய்வார். அவர் பழைமைக்கும் புதுமைக்கும் பாலமாக இருப்பவர்.

இந்தியத் திரையுலகமே அவருக்கு விழா எடுத்து வாழ்த்துகையில், இதோ என்னுடைய வாழ்த்துக்கள்;

இளையராஜாவே!
என் -
இனிய இளவலே!
பண்ணை புரத்திலிருந்து
பக்கிங்ஹாம் பேலஸ்வரை
பாடிப் பறந்த
பாட்டுக் குயிலே!
ROYAL PHILHARMONIC
இசைக்குழு உனக்கு
ROYAL RECEPTION
கொடுத்ததில் வியப்பில்லை;
நீ
ராஜாவாயிற்றே!
தேயிலை விளையும் -
மேற்குத் தொடர்ச்சி
மலையின்
தாழ்வாரத்தில் பிறந்து
தேம்ஸ் நதி -
தீரம் வரை -
தேனிசையை எடுத்துச் சென்ற
ஞானத் தென்றலே!
உன் -
சிந்தனை
PERFECT TUNING-ல்
இருப்பதால்
சுதி பிறழ்வதேயில்லை.

(தொடரும்)






சிறு கோவிலை (Chapel) அடைந்து எனது ஏனைய குடும்ப அங்கத்தவர்களோடு இணைகிறேன். நான் எனது முன் ஆசனத்தில் அமர்வதற்கு முன்பாக ஒவ்வொருவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்து வரவேற்கிறேன். கடைசியாக மேரிக்கும் வில்லியமுக்கும் மத்தியில் அமர்கிறேன். நாம் எல்லோரும் இங்கே கூடியிருப்பது எனது தாயார் லோலாவின் மறைவுக்காக வேண்டியென்பதை மனதில் இருத்துவதற்கு நான் மிகவும் பிரயாசைப்படுகிறேன். ஆனால், நான் ஒரு தண்டனைக் கைதி; இன்னும் சில மணித்தியாலங்களில் சிறைக்குத் திரும்ப வேண்டிய சிறைக் கைதி என்பதை என்னால் மறக்க முடியவில்லை.

முற்பகல் 10.30.

பிஷப் தனது ஆராதனையை அமைதியாகவும் கண்ணியமாகவும் நடத்துகிறார். எனது தாயாரின் சவப்பெட்டியைச் சுற்றிய திரை அகற்றப்பட்டதும் மேரியும் நானும் முன்னே சென்று மலர் வளையம் அருகே அழகிய காட்டுப் புதர்ச்செடியை வைக்கிறோம். மேரி முன்வாசல் வழியாக வெளியே போகிறாள். நான் பின்னறைக்குத் திரும்பிய போது அங்கே எனது பழைய நண்பர் ஒருவரால் வரவேற்கப்படுகிறேன். இன்ஸ்பெக்டர் ஹோவெல் - உள்ளூர் பொலிஸைச் சேர்ந்தவர். - "ஹலோ! ஜெஃப்ரி உங்களை இந்தச் சூழ்நிலையில் சந்திப்பதற்கு வருந்துகிறேன்" என்று கூறியதும் இரு சிறை அதிகாரிகளும் ஆச்சரியமடைகின்றனர்.

நான் அவர்களுக்கு விளங்கப்படுத்துகிறேன். நான் கேம்பிரிஜ் ரக்பி க்ளப் தவிசாளராக இருந்தபோது, டேவிட் first xv தலைவராக இருந்தார். நாட்டில் இருந்த சிறந்த அணிகளில் ஒன்று.

"நீங்கள் எப்படிச் செய்ய விரும்புகிறீர்கள்" நான் கேட்கிறேன்.

டேவிட் தனது கைக்கடிகாரத்தைப் பார்க்கிறார். "கிரான்செஸ்டர் ஆராதனை இன்னும் ஒரு மணித்தியாலத்திற்கு நீடிக்காது.

ஆகவே, நாம் கெண்டலூாப்ஃபார்ம் அருகே பார்க் பண்ணும்படியும், சர்ச்சுக்குப் போகும்வரை ஓல்ட் விகாரேஜ் அருகே காத்து நிற்கும்படியும் ஆலோசனை வழங்குகிறேன்" என்கிறார்.

நான் ஜோர்ஜை விழிகளால் வினவுகிறேன்- இதற்கு நீங்கள் சம்மதமா? என்று "உள்ளூர்

### தமிழில் தருவது ஜெஃப்ரி ஆர்ச்சர்

பொலிஸின் அறிவுறுத்தல் எதுவாக இருந்தாலும் அதனோடு உடன்படுவதில் எனக்கு மகிழ்ச்சி தான்" அவர் சொல்கிறார்.

சிறைச்சாலைக் கவச வாகனத்தில் நான் கெண்டலூாப்ஃபார்ம் வரை பயணிக்கிறேன். அங்கே அதன் சொந்தக்காரர் அன்தனி பெம்பர்டன் எம்மை அன்புடன் வரவேற்று பார்க்கினுள் செல்வதற்கு அனுமதிக்கிறார். மேரியும், பையன்களும் எமது குடும்பக் காரில் பயணிக்கிறார்கள்.

(பக்கங்கள் வளரும்)

# மார்லன் பிராண்டோ ஒரு யுகத்தின் முடிவு

உலகத் திரைப்பட வரலாற்றில் மாபெரும் நடிகர் எனக் கருதப்படுகின்ற மார்லன் பிராண்டோ அண்மையில் காலமானார். 1950 முதல் 2001ஆம் ஆண்டு வரை சுமார் ஐம்பதுக்கும் அதிகமான திரைப்படங்களில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய பாத்திரங்களை திரைப்படத்தில் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

2002ஆம் ஆண்டு முதல் இவரது உடல் நிலை பாதிக்கப்பட்டு இருந்தது. நியுமோனியா நோய்க்கு உட்பட்டதனால் இவரது உடல்நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டது. அத்துடன் இருதய நோயும் தொற்றிக்கொண்டது.

உயிரூட்டியுள்ள பிராண்டோ இருமுறை சிறந்த நடிகருக்கான ஒஸ்கார் விருதுகளைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

எண்பது வயதில் காலமான இம் மாபெரும் நடிகர் சில காலமாக இருதய நோய்க்குட்பட்டிருந்தார். லொஸ் ஏஞ்சல்ஸ் நகரிலுள்ள UCLA வைத்தியசாலையில் மூன்று நாட்களாகத் தங்கியிருந்த இவர் காலமானபோது இவர் அருகில் இருந்தவர் இவரது பிரத்தியேக சட்டத்தரணி மாத்திரமே ஆவார்.

பிராண்டோ தனது இறுதி காலகட்டங்களில் அதிகம் பருமன் அடைந்த நிலையில் இருந்து வந்ததால் மூச்சு விட முடியாத நிலை தோன்றி ஒக்ஸிஜன் கொண்டு மூச்செடுக்கும் நிலை ஏற்பட்டதுடன் சக்கர நாற்காலி கொண்டு பயணிக்க வேண்டியும் ஏற்பட்டுள்ளது.

பிராண்டோ தனது தனிப்பட்ட வாழ்க்கையை மிகவும் பேணிப் பாதுகாத்து வந்துள்ளார். ஆகையால் இவரது மரணத்துக்கான காரணம் குறித்து கருத்துக் கூற இயலாதென இவரது பிரத்தியேக சட்டத்தரணி டேவிட் சீலே கூறியுள்ளார்.


மார்லன் பிராண்டோ
மார்லன் பிராண்டோ

மூன்று விவாகங்களைச் செய்து கொண்டுள்ள பிராண்டோ ஒன்பது பிள்ளைகளின் தந்தையாவார். ஏனைய ஹொலிவுட் நடிக, நடிகையரைப் போன்றல்லாது தனிப்பட்ட முறையில் இவரது வாழ்க்கை மிகவும் துன்பம் நிறைந்ததாகவே இருந்து வந்துள்ளது.

அமெரிக்க ஓமாகாவில் பிறந்த பிராண்டோவின் தாய் ஒரு நாடக நடிகையாவார். தந்தை சில்லறைக் கடையொன்றை நடாத்தி வந்துள்ளார். தாய், தொடர்ந்து மது போதைக்கு அடிமையாகி இருந்ததன் காரணமாக சிறு வயது முதல் பிராண்டோவைக் கவனித்துப் பார்க்க ஒருவரும் இருந்ததாகத் தெரியவரவில்லை. தனது மூத்த சகோதரிகள் இருவருடன் மிகவும் வேதனையான வாழ்க்கையை இவர் மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.

தனது 19ஆவது வயதில் நியூயோர்க் நகருக்கு தனிமையில் வந்து குடியேறிய மார்லன் பிராண்டோ நாடக நடிப்புப் பயிற்சியை மேற்கொண்டுள்ளார். இதன்போது ஸ்டெலா எட்லர் எனும் ஆசிரியையின் வழிகாட்டலின் பேரில் நாடக மேடைக்குப் பிரவேசித்த இவர், மூன்று வருடங்களுள் "Disire" எனும் விருதுபெற்ற நாடகத்தில் நடித்து மிகப் பிரபல்யம் பெற்றுள்ளார்.

இவர் 1950இல் முதன் முதலாக ஹொலிவுட் திரைப்படமான "த மென்" திரைப்படத்தில் நடித்துள்ளார். அதன் பிறகு இரு வருடங்கள் கழித்து Nivazapata (1952) Julius Caesar (1953). மற்றும் On the Water Front போன்ற திரைப்படங்களில் நடித்துள்ளார். இத் திரைப்படங்கள் மூன்றில் நடித்தமைக்காக இவரது பெயர் சிறந்த நடிகர் விருதுக்குத் தொடர்ந்து உத்தேசிக்கப்பட்டது. இதன் மூலம் இவரது பெயர் மேலும் பிரபல்யமாகியது.

1960 காலகட்டத்தில் இவர் நடித்து வெளிவந்த One Eyed Jacks மற்றும் The Chase ஆகிய திரைப் படங்கள் அந்தளவுக்கு வெற்றியை ஈட்டித் தராதபோதும் தனது திறமையை வெளிப்படுத்தி இவர் நடித்த The God Father திரைப்படம் 1972இல் திரையிடப்பட்டது.

உலக திரைப்பட வரலாற்றிலேயே அதி சிறந்த நடிப்பாக இன்று வரை கருதப்படும் பாதாள உலகத் தலைவரின் பாத்திரத்தை அவர் இதன் மூலம் மிகவும் அற்புதமாக வெளிப்படுத்தி இருந்தார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இத்திரைப்படம் ஒஸ்கார் விருது உட்பட பல விருதுகளை வெற்றிகொண்டது.

பிராண்டோ அதிகளவிலான திரைப்படங்களில் நடிக்கவில்லை. திரைப்படங்களை தேர்ந்தெடுத்து நடித்த ஒரு நடிகராவார். 80களில் இரண்டே இரண்டு திரைப்படங்களிலேயே இவர் நடித்திருந்தார். 2001இல் The Score எனும் திரைப்படத்தில் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

பிராண்டோ மிகவும் வேதனை மிக்க வாழ்க்கையை மேற்கொண்டவர் என்பது பல விடயங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவரது சுயசரிதையை எழுதிய பீற்றர் மான்ஸே, பிராண்டோ உலகத்தின் மீது அதிக சினங்கொண்டிருந்ததாகவும், விரக்தியடைந்திருந்ததாகவும், அதனால் தனிமையில் இருக்கவே அதிகம் விரும்பினார் என்றும் கூறுகின்றார்.

இறுதிக் காலகட்டத்தில் அவரது தாதி, குளிர்சாதனப் பெட்டியைப் பூட்டி வைக்கும் அளவுக்கு பிராண்டோ அதிகமான உணவு வகைகளை உட்கொண்டுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

முழு உலகையும் தனது நடிப்பாற்றலால் ஆட்டிப்படைத்த பிராண்டோ தனது இறுதிக் காலத்தில் 11 மில்லியன் டொலர்களுக்குக் கடனாளியாகக் காணப்பட்டதாகவும் சமூக சேவைகள் அமைப்பொன்றிலிருந்து கிடைத்த நிதியைக் கொண்டே வாழ்ந்து வந்ததாகவும் தெரியவருகிறது.

நோயுடன் இருந்த நிலையில் கூட பிரித்தானிய திரைப்படம் ஒன்றில் நடிப்பதற்கு இவர் சம்மதம் தெரிவித்திருந்தார். இது இவருடைய வாழ்க்கை பற்றிய திரைப்படமாகும்.

பல பாத்திரங்களை ஏற்று நடித்த இவருக்கு, இவருடைய பாத்திரத்தை ஏற்று நடிக்க இயலாமல் போய்விட்டது.

பிராண்டோ கடன்காரர்களுக்குப் பயந்து தனது ஒஸ்கார் விருதுகளைக் கூட மறைத்து வைத்துக்கொள்வாராம்.

1988இல் பிராண்டோவின் மகனான கிறிஸ்டியன் பிராண்டோவின் மகளான வேயெனோரின் காதலனைச் சுட்டுக் கொலைசெய்துவிட்டு சிறைக்குச் சென்றுள்ளார். இதன் காரணமாக இல் வேயனோரியும் தற்கொலை செய்துகொண்டார். இதனால் அவர் மேலும் மனநிலை ரீதியில் பாதிப்புக்கு உள்ளானார்.

லிப்ட் ஒப்ரேட்டராக தனது தொழிலை ஆரம்பித்து பின்னர் மாபெரும் உலக நடிகராக விளங்கிய பிராண்டோ 1957இல் எனா கஷ்பி எனும் அயர்லாந்து நடிகையையும் 1960இல் மொவிடா எனும் மெக்ஸிக்கா இன நடிகையையும் இறுதியாக டரிட்டா எனும் டஹிட்டி தீவகக்கிராமத்துப் பெண்ணையும் மனைவிமார்களாககக் கொண்டவர். பிராண்டோ தனது யுகத்தின் தலை சிறந்த நடிகர். இன்றும்கூட மார்லன் பிராண்டோவை விட்டு விட்டு திரைப்படக் கலை என்று ஒன்று கிடையாது என்பதும் அப்படியொரு கலைபற்றி எவராலும் பேச இயலாது என்பதும் உண்மையாகும்.

- பாரூக் -

# அராஜகங்களைத் தோற்கடித்து ஜனநாயகத்தை நிலைநாட்டுவோம்

முன்பெல்லாம் ஈ.பி.டி.பி.யினரையும் புலிகளின் தமிழ்க்கொலைகளோடு உடன்படாத மாற்று இயக்க அங்கத்தவர்களையும் இலங்கை இனவாத இராணுவத்திற்கு தலையாட்டிகளாக, ஆட்காட்டிகளாகச் செயற்பட்டதாகச் சொல்லித் திரிந்த புலிகள், மாற்று இயக்கங்களை இராணுவத்திற்கு எட்டபன் வேலை செய்யும் துரோகக் கும்பலென்று சொல்லித் திரிந்ததைத் தவிர வேறு அரசியல் பேசாத புலிகள், இன்று அந்த இராணுவத்தோடு கொஞ்சிக் குலாவுகிறார்கள்.

ஏதோ, இலங்கை இராணுவமோ அல்லது தென்னிலங்கை இனவாத அரசியல்வாதிகளோ தமிழ் விரோதத்தைப் பேசி சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இலங்கையிலே சம அந்தஸ்தும் சம உரிமையும் இருப்பதுதான் சரி என்ற ஞானத்தை வைகாசிப் பௌர்ணமியில் புனித போதிமரத்தின் கீழ் பெற்றுவிட்டார்களா? இல்லை. தமிழ் மக்களுக்குக் கொடுக்கும் சமஷ்டியையோ பிரதேச சுயாட்சியையோ கொடுப்பது சரியானதென்று யூ.என்.பி. மிகுந்த நேர்மையோடும் துணிவோடும் இன்னமும் சிங்கள மக்களிடையே பிரசாரம் செய்யத் தொடங்கவில்லை. அந்தப் புத்தம் புதிய அரசியற் சரக்கை நத்தார்ப் பண்டிகையிலே மலிவு விற்பனை செய்ய யூ.என்.பி. முற்பட்டிருந்தால் தெரிந்திருக்கும் அது கிராக்கியில்லாத சரக்கென்று. அவர்கள் சொல்வதெல்லாம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் குண்டு வெடிப்புகளையும் யுத்தத்தையும் நிறுத்திவிட்டோம் என்பதை மட்டும்தான்.

மறுபக்கத்தில் புலிகளோ, தாம் தமிழ் ஈழக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டோம் என்றும் இனவாத அரசின்கீழ் ஐக்கிய இலங்கையில், இலங்கை அரசின் தனித்துவத்தையும் இறைமையையும் பேணி, இலங்கை அரசின் சட்டத்தை மதித்து அதன்கீழ் பிரதேச சுயாட்சியையோ, சமஷ்டியையோ பெற்று வாழ்வதுதான் சரியென்றும் தமிழ் மக்களுக்குச் சொல்லத் துணிவில்லாமல் இருக்கிறார்கள். தற்கொலைப் போராளிகளை ஏவிவிடுவதிலும் மகா கஷ்டமான இந்த வேலையைப் புலிகளால் செய்ய முடியாது. ஏதோ அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவின் நேர்மையைப் பற்றிப் புளுகுவதும் அவரை நம்புவதாகவும் சொல்லுவதைத் தவிர, சிங்கள மக்களோடு ஏன் எப்படி ஐக்கியமாக இருக்க வேண்டுமென்று சொல்லவில்லை. மலிந்த இந்தச் சரக்கு இன்னும் சந்தைக்கு வரவில்லை.

லண்டனிலே பாலசிங்கம் சிங்கள மக்கள் ஒருநாளும் தமிழ் மக்களுக்கு உரிமையைத் தரமாட்டார்களாம். ஏதோ விதத்தில் இந்தச் சமாதானத்தை அவர்கள் குழப்புவார்களாம். அப்படிக் குழப்பும்பொழுது வெளிநாடுகளின் ஆதரவு புலிகளுக்குக்கிடைக்குமாம். அப்போதுதான் தமிழீழத்தை எடுப்போமாம். என்ன அரைவேக்காட்டுத்தனம்?. ஏதோ பிரித்தானிய, அமெரிக்க இராஜதந்திரிகளின் சாணக்கியமின்றி அவர்களின் புத்திமதியின்றி இலங்கையிலே இனவாதம் வெடித்ததாகச் செப்படிவித்தை காட்டுகிறார்: தேனீயில் மீண்டும் மீண்டும் நிறுவிக் காட்டிவிட்டோம்; நெருக்கடி நிறைந்த இலங்கை அரசின் ஆளும் மூலோபாயம்தான் இனவாதமேயொழிய, அது சிங்கள மக்களின் மூளைப் பைத்தியத்தால் ஏற்படவில்லை. இரண்டு தசாப்த காலமாக ஏற்பட்ட யுத்தம் மாத்திரம்தான் இலங்கையிலே மீண்டும் அரசுடைமையாக்கப்பட்டு நிறுவனங்களைத் தனியார் உடைமையாக்கவும் இடதுசாரி இயக்கங்களை அழித்தொழிக்கவும் வகை செய்தது. இலங்கையிலே பிரஜா உரிமைச் சட்டத்தை இரத்துச் செய்யப் போராடாதவர்களும், அதை இரத்துச் செய்ய உடன்படாதவர்களோடு கூட்டுச் சேர்பவர்களும் கடைந்தெடுத்த துரோகிகளும் கபடர்களுமாகும். தங்களது நாளாந்தப் பத்திரிகைகளில், கணினி வெளியீடுகளில் ஒரு நாளாவது தவறாமல் தமிழ்ச் சிறைக் கைதிகளை விடுதலை செய்யும்படி எழுதவில்லையென்றால் அவர்களோடு தேனீ சமரசப்பட்டுப் போகாது. இந்த அளவுகோலைக் கொண்டே இலங்கைத் தமிழர்களின் அரசியல் இயக்கங்களையும் கட்சிகளையும் அளவிட வேண்டும்.

தமிழ், சிங்களத் தொழிலாளர்களின் ஐக்கியத்தை இன்று வரை வலியுறுத்தியவர்களும் அதற்காக இன்று வரை விட்டுக் கொடுக்காமற் போராடியவர்களும் தமிழ், சிங்கள இடதுசாரிகளே. அவர்களது சிந்தனை முறை தேசிய எல்லைகளைக் கடந்தது. அவ்ர்கள் தேசிய எல்லைத் தடைகளை ஊடுருவி வர்க்க ஐக்கியத்தைக் கட்டிக் காப்பவர்கள். அவர்கள் சிங்கள இனவாதிகளை வெறுக்கும் அதேவேளையில் தமிழ் இனவாதிகளையும் ஒட்ட வெறுப்பவர்கள்.

அவர்கள் அணுவிலுள்ள இலத்திரனின் இயக்கத்திலிருந்து பிரபஞ்சத்தின் இயக்கம் வரை தமது சிந்தனை வீச்சை உள்ளடக்கியவர்கள். அவர்கள் இரசாயன மூலக்கூறுகளின் கூர்ப்பிலிருந்து மனித மூளையினதும் உணர்ச்சி நரம்புத் தொகுதியின் கூர்ப்புவரை நடந்தேறிய ஆராய்ச்சிகளைத் தேடித் தேடிக் கற்பவர்கள். அவர்கள் மைக்குரோவிலிருந்து ஒளிவருட அலகு வரை எடுத்தாள்வார்கள். இந்த அறிக்கையின் பிரகாரம் வலிமையுள்ள தேசங்கள் சின்னத் தேசங்களைப் பலாத்காரமாக இணைப்பதற்கெதிராக விட்டுக்கொடுக்காமற் போராடும் அதே வேளையில், தனிநாடு வேண்டும் என்ற பரம சிந்தனையானது வரலாற்று வளர்ச்சிப்போக்கை விஞ்சியதல்ல என்ற முடிவுக்கு வந்தவர்கள்.

"Nation and economy have come into contradiction-with the state and with each other. The state has become too narrow for the economy. Striving to expand, it tramples upon the nation. The economy, for its part, refuses to subordinate the natural movement of its forces and resources to the distribution of ethnic groups on the earth's surface" (Lenin's Struggle for a Revolutionary international (New York: Monad, 1984], pp. 370-71].

"தேசமும் பொருளாதாரமும் அரசோடு முரண்படுவதோடு ஒன்றோடு ஒன்று முட்டிமோதும். அரசானது பொருளாதாரத்தை உள்ளடக்க முடியாத மட்டத்திற்குக் குறுகிப் போய்விட்டது. பொருளாதாரமானது எப்பொழுதுமே விரிவடைந்து செல்வதால் அது தேசங்களைத் துவாம்சம் செய்யும். பொருளாதாரமானது அதன் இயற்கையான இயக்க சக்தியால் தனது வளங்களையும் சக்திகளையும் பூமிப்பரப்பில் சிதறியிருக்கும் தேசியங்களுக்கு அடிமைப்படுத்திக் கீழ்ப்படிந்து போகாது". - லெனின்-

தமிழீழப் போராட்டத்தின் தலைவிதி இந்த விதிக்கிணங்க நகர்ந்து சென்றது. வீசியெறியும் எந்த எலும்புத் துண்டையும் கவ்வமாட்டோமென்று வீராப்புப் பேசிய புலிகள், சர்வதேச நன்கொடைக்குக் காத்துக் காத்து நிற்கும் யூ.என்.பி.யின் பின்னால் தமக்கும் உதவி கிடைக்கும் எனக் காத்திருக்கிறார்கள். வரலாறு புலிகளை யூ.என்.பி.க்குள் தள்ளி விழுத்தி மீண்டும் அதிலிருந்து மீண்டெழாதபடி பிணைத்துக் கட்டிவைத்ததுதான் தமிழ் மக்களுக்குக் கிடைத்த வெற்றியாகும். ஏனெனில், மீண்டும் புலிகள் அந்த இந்தப் பிரமைகளைத் தமிழ் மக்களுக்குத் தராமல் இருப்பதற்காகவே வரலாறு அப்படிச் செய்தது.

The LTTE while it claims to fight for the rights of Tamils has also played the role of an oppressor in stamping out all other shades of opinion.-Daily Mirror 29.11.2002.

> **புலிகள் நிராயுதபாணியான மறுநாளே புலிகளுக்கு மூச்சுத் திணறுமளவுக்கு புலிகளுக்கெதிரான எழுத்துக்கள் குவியும். புலிகள் அந்த எதிர்ப்பு அலையை எதிர்கொள்ள முடியாமல் போவார்கள். அன்றைக்கு சிறையில் வாடும் தமிழ்க் கைதிகள் சிறையிலிருந்து வெளியில் விடப்படுவார்கள்.**

புலிகள் தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடுகிறோம் என்று சொல்லும் அதேநேரத்தில் ஒரு ஒடுக்குமுறையாளர்களாகவும் செயற்பட்டார்கள். மாற்றுக் கருத்தைக் கொண்ட எல்லா அமைப்புகளையும் துடைத்துக் கட்டினார்கள். ஏகாதிபத்தியங்கள் ஏதோ வட்டியில்லாமல் நன்கொடை வழங்கியதாகப் பூச்சாண்டி காட்டுகிறார்கள். நன்கொடை வழங்கும் நாடுகளின் பின் கதவு நிபந்தனைகள் என்னவென்பது பரம இரகசியமாகவே இருக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியம் ஏற்கனவே அமெரிக்கப் படைகளுக்கு இலங்கையின் வான்பரப்பை வழங்க வேண்டுமெனறு கேட்டுவிட்டது. இலங்கைத் துறைமுகங்களில் அமெரிக்க யுத்தக் கப்பல்களுக்கு எண்ணெய் நிரப்பும் உரிமையை வழங்க வேண்டும் என்றும் கேட்டுள்ளது. ஈராக்குக்கு எதிரான அமெரிக்க யுத்தம் கட்டாயம் உலக யுத்தமாக எழுச்சிகொள்ளும். அதன் பின்னால் இலங்கையும் அள்ளுப்படுவது தவிர்க்க முடியாதது. ஏகாதிபத்தியங்கள் முதலிடுவதோ, கடன் கொடுப்பதோ, தானம் வழங்குவதோ மண்கொள்ளையடிப்பதற்காக.

மாறாக மறைந்த சோவியற் யூனியனும் மக்கள் சீனமும் ஏழுபதுகளுக்குமுன் பல தொழிற்சாலைகளைப் போட்டுக் கொடுத்தார்கள். இலங்கை, இந்தியா, கென்யாவென்று அந்தப் பட்டியல் நீண்டுகொண்டே போகும். இந்த நாடுகள் அந் நாளில் பல தவறுகளைச் செய்தபோதும் சுரண்டுவதற்காகவோ மண்கொள்ளையடிப்பதற்காகவோ இந்தத் தொழிற்சாலைகளைப் போட்டுக் கொடுக்கவில்லை. 1958இல் இலங்கையில் தொழிற்றுறைக் கண்காட்சியை நடாத்தியதோடு பல தொழிற்சாலைகளை இலங்கையில் இலவசமாகப் போட்டுக் கொடுத்தனர். .பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, வாழைச்சேனைக் கடதாசி ஆலை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் காலி சீமெந்துத் தொழிற்சாலை, உருக்குக் கூட்டுத்தாபனம், களனி றபர் தொழிற்சாலை, தெல்தெனியா பால் கூட்டுத்தாபனம், மொறட்டுவ பிளைவூட் கூட்டுத்தாபனம் என்று நீண்டு கொண்டே போகும். இலவசமாக அவர்கள் போட்டுத் தந்ததையெல்லாம் இன்று அரசாங்கம் தனியாருக்கு விற்கிறது. இந்தியாவிலும் இப்படிச் செய்தவை எண்ணிலடங்காது. அவர்கள் ஒருநாளும் வட்டி கூட வாங்கியதில்லை. புலிகளை வழி நடாத்தும் அரைவேக்காடுகளுக்கும் கடைந்தெடுத்த கபடர்களுக்கும் இது பற்றிக் கவலையில்லை.

அண்மையிற் கூட ஆஸ்தானக் கவிஞர் புதுவை இரத்தினதுரை சொன்னார், "எவ்வாறு பாலஸ்தீனர்கள் கெஞ்சிக் கெஞ்சி இஸ்ரேலிடம் வேலைக்குப் போகிறார்களோ அதே மாதிரிச் சிங்களவர்களும் யாழ்ப்பாணத்திற்கு வேலைக்கு வருவார்களாம். இரத்தினதுரைக்குத் தெரியாது இஸ்ரேலுக்கு வருடாவருடம் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஏழு பில்லியன் டொலரை இனாமாக வழங்குகிறதென்று. ஏனெனில், இஸ்ரேலை வைத்திருந்தால்தான் எழுநூறு பில்லியன்களை அரபு நாடுகளிலிருந்து சுரண்டலாம். புலிகள் ஈ.பி.டி.பி.யைச் சும்மா கலைக்கவில்லை. புலிகள் யாரைக் கலைக்காமல் விடுவார்கள் என்பதே கேள்விக் குறி. புலிகளோடு மற்றைய அரசியல் இயக்கங்களுக்கும் நிறுவனப்பட்ட ஸ்தாபனங்களுக்கும் என்ன தொடர்பென்று ஆராயாமல், கண்மூடித்தனமான அரசியல் செய்ததாற்றான் புலிகளின் உயிர் வாழும் காலம் இருபது வருடங்கள் நீடித்தது. புலிகள் நிராயுதபாணியான மறுநாளே புலிகளுக்கு மூச்சுத் திணறுமளவுக்கு புலிகளுக்கெதிரான எழுத்துக்கள் குவியும். புலிகள் அந்த எதிர்ப்பு அலையை எதிர்கொள்ள முடியாமல் போவார்கள். அன்றைக்கு சிறையில் வாடும் தமிழ்க் கைதிகள் சிறையிலிருந்து வெளியில் விடப்படுவார்கள். 2002ஆம் ஆண்டு முடிவதற்கு இன்னும் இரண்டொரு நாட்கள்தான் இருக்கின்றன. நாம் வாழும் சகாப்தமானது உலக அரசியலில் திடீர் திடீர் மாற்றங்கள் ஏற்படும் நிலையற்ற சகாப்தமாகும். சமூக அதிர்ச்சிகளும் சமூக வலிப்புகளும் ஏற்படும் சகாப்தமாகும்.. சுருங்கச் சொல்வதென்றால் யுத்தமும் புரட்சியும் நிறைந்த சகாப்தமாகும்.

மனித நேய சக்திகளை மீறி ஈராக் யுத்தமேற்படுமானால் உலக முற்போக்குச் சக்திகள் கட்டுக்கடங்காமல் வீதிக்கிறங்கிப் போராடுவார்கள் என்பதே திண்ணம். ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வருடத்திற்கு நிகரானதாகவும் சில மாதங்கள் பல தசாப்தங்களுக்கு நிகரானதாகவும் இருக்கின்றது. புரட்சிக் கட்சிகள் அசுர வேகத்தில் பிறந்து வளரும். ஒவ்வொரு புரட்சிக் கட்சியும் சர்வதேச வலைத் தளத்தின் உதவியோடு உலகெங்குமுள்ள புரட்சியாளர்களோடு அநுபவங்களைப் பரஸ்பரம் பகிர்ந்து, பரஸ்பரம் ஒருவரை ஒருவர் மாறிக் கட்டுப்படுத்தி அதீத வேகத்திலே வளர்வார்கள். சிங்கள, தமிழ புரட்சியாளர்களிடையேயும் இந்த நிகழ்வு கட்டாயம் ஏற்படும். ஆதலால் எல்லோரும் ஒன்றுபட்டு சகல தமிழ் அரசியற் கைதிகளை விடுவிக்கவும், பிரஜா உரிமைச் சட்டத்தை இரத்துச் செய்யவும், யாழ்ப்பாணத்து முஸ்லிம்களை மாலை மரியாதைகளோடு திருப்பியிழைக்கவும் தனிச் சிங்களச் சட்டத்தை இரத்துச் செய்யவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்யவும், தமிழீழத்திலிருந்து சகல இராணுவ முகாங்களை அகற்றவும், புலிகளை ஜனநாயக சக்தியாக மாற்றவும் போராட வேண்டும்.

*நன்றி:*
**WWW.THENEE.COM**

# மட்டக்களப்பு சிறைச்சாலை படுகொலைகள் உணர்த்துவதென்ன?

> **ஆயுதப் பயிற்சி பெற்ற சச்சி மாஸ்டரையும் தீபனையும் கைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யுமளவுக்கு துணிச்சலும், அதனைக் கையாளும் திறமையும் ஒரு சாதாரண தனிமனிதனென்று கூறப்படும் புவிதரனுக்கு எப்படி வந்ததென்பது பெரும் கேள்விக் குறியல்ல.**

தமிழர் வரலாற்றில் துரோகம் என்ற வார்த்தைக்குப் புலிகள் கற்பித்துவரும் அர்த்தம் ஆச்சரியத்துக்குரியது. அண்மையில் மட்டக்களப்புச் சிறைச்சாலைக்குள் இடம்பெற்ற இரட்டைக் கொலைகளுக்கும் தமக்கும் சம்பந்தமில்லையெனப் புலிகள் கூறினாலும், அவர்களின் களையெடுப்பு வேலையே இதுவென்பது தெளிவானது. தமிழீழப் போராட்டத்தில் தமிழர்கள் பிரபாகரனையும் கருணாவையும் ஒரே தரத்தில் வைத்தே பார்த்து வந்திருக்கிறார்கள். மிகவும் கவனமாகத் திட்டமிட்டு கிழக்கை ஒதுக்கும் செயற்பாடுகளில் ஆரம்பம் முதலே மேற்கொள்ளப்பட்டு வந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டை ஒதுக்கிவிட முடியாதெனப் பலர் கருதுகின்றனர்.

மட்டக்களப்புச் சிறைச்சாலைக்குள் தடுத்து வைக்கப்பட்டிருந்த சச்சி மாஸ்டரையும் தீபனையும் கடந்த 15ஆம் திகதி வியாழக்கிழமை புவிதரன் என்ற நீலாவணையைச் சேர்ந்த இளைஞர் சுட்டுக் கொன்றார். கொல்லப்பட்ட சச்சு மாஸ்டர் கருணாவின் பேச்சாளராக சிறைச்சாலைக்குள்ளிருந்து செயற்பட்டவர் என்பதுதான் புலிகளின் குற்றச்சாட்டு.

புவிதரன் என்ற இந்த இளைஞர் அன்று காலை இருவரையும் மிகவும் கெட்டித்தனமாகச் சுட்டுவிட்டுத் தப்பிச் செல்ல முயற்சித்திருக்கிறார். அப்போது பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் சுற்றி வளைத்ததும் தான் சரணடைவதாகவும் அப்படியென்றால் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் இவ்விடத்துக்கு வர வேண்டுமென்றும் இல்லையென்றால் தான் தற்கொலை செய்துகொள்ளப் போவதாகவும் அவர் மிரட்டியிருக்கிறார்.

இந்த இளைஞர் திருட்டுக் குற்றத்துக்காகக் கைதுசெய்யப்பட்டு சிறைக்குள் வந்தவர். சச்சி மாஸ்டரைக் கொலை செய்ய இவரைத் தூண்டியவர்கள் யார்? புலி இயக்கத்தோடு சம்பந்தமில்லாத தனிமனிதனாக இவர் தன்னை ஏன் காட்டிக்கொள்ள வேண்டுமென்பதெல்லாம் புரிந்துகொள்ளக் கூடியது. ஆயுதப் பயிற்சி பெற்ற சச்சி மாஸ்டரையும் தீபனையும் கைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யுமளவுக்கு துணிச்சலும், அதனைக் கையாளும் திறமையும் ஒரு சாதாரண தனிமனிதனென்று கூறப்படும் புவிதரனுக்கு எப்படி வந்ததென்பது பெரும் கேள்விக்குறியல்ல. ஏன் இந்த இளைஞர் திருட்டுக் குற்றத்துக்காகச் சிறைக்குள் கொண்டு வரப்பட்டாரென்பது பெரும் மர்மமாக உள்ளது. சிறைக்குள்ளிருக்கும் யாரையும் கொலைசெய்ய வேண்டுமா? களவெடுத்துபிடிபட்டு உள்ளே சென்று கொலையும் செய்யலாம். புக முடியாத இடத்துக்குள்ளும் புகுந்து தாக்கும் திறன் எமக்கு மட்டுமேயுண்டு என்றும் புலிகள் கூறுவதை வெறும் வாய்வீச்சாகக் கொள்ள முடியுமா?

பொலிஸாரிடம் மறுநாள் வாக்குமூலம் அளித்த புவிதரன், தனக்கும் வேறு சிலருக்கும் தெரியக் கூடிய வண்ணம் ஆயுதங்கள் சிறைக்குள் இருந்ததாகவும், சச்சி மாஸ்டரை துரோகியெனத் தான் சந்தேகித்ததாகவும் அதனடிப்படையிலேயே அவரைக் கொலைசெய்ததாகவும் கூறியிருக்கிறார். பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்ட ஒரு பிரதேசத்துக்குள் அதுவும் சிறைச்சாலைக்குள் சென்று ஆயுதத்தினால் கொலை செய்திருக்கிறார். சிறைக்குள் ஆயுதங்களைக் கொண்டு செல்ல முடியாது. இருந்தபோதும் துப்பாக்கித் தாக்குதல் நடந்திருக்கிறது. இந்த ஆயுதங்களை சச்சி மாஸ்டரிடமிருந்தே தான் பெற்றுக்கொண்டதாகவும் அவ் இளைஞர் கதையளந்திருப்பது இன்னும் சிந்தனைக்குரியது. பிரச்சினையைச் சிக்கலாக்கும் நோக்குடனேயே இவ்வாறு புவிதரன் கூறியுள்ளாரென்பது வெளிப்படை.

கிழக்குப் பிராந்தியம் தமது பூரண கட்டுப்பாட்டில் இருக்கிறது என்று சொல்லும் புலிகளுக்கு ஏன் இன்னமும் அங்கு நடைபெறுகின்ற வன்முறைகளை நிறுத்த முடியாதிருக்கிறதென்று எழுப்பப்படும் கேள்விகள் நியாயமானவையே. மார்ச் மாதத்தில் ஆரம்பமான கருணா அம்மானுக்கும் பிரபா அணியினருக்கு மிடையிலான மோதல், புதிய அரசியல் கட்சி ஒன்றினைக் கருணா அம்மான் அமைக்கும் அளவுக்குச் சென்ற பின்னரும் படுகொலைத் தாக்குதல்களைப் புலிகள் தொடர்ந்து நடத்துவதானது பிரபா அணி மீது தமிழ் மக்களை கோபம் கொள்ள வைத்துள்ளது. இன்று வரைக்கும் மட்டக்களப்பில் எத்தனையோ உயிர்களைப் பலிகொண்டுவிட்ட இந்த மோதல், பாரதூரமான பாதிப்புக்களை நாடு தழுவிய அளவில் ஏற்படுத்திவிட்டிருக்கிறது. அதற்கிடையில்தான் கவலைக்கிடமான இந்த இரட்டைக் கொலை மட்டக்களப்புச் சிறைச்சாலைக்குள்ளேயே நடந்து முடிந்தது. ஜனநாயக வழிக்குத் திரும்புவதற்குப் புலிகளுக்கு விருப்பமில்லை என்பது தெரிந்ததுதான். யாருமே அவ் வழிக்கு வந்தால் அவர்களை அழித்துவிடுவோம் எனத் தொடர்ந்தும் புலிகள் மிரட்டல் விடுக்கிறார்களா? கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் நடந்து வருகின்ற வன்முறைகளுக்கும் புலிகளிலிருந்து பிரிந்த கருணாவுக்கும் முடிச்சுப் போடுவதன் மூலம் தமது தவறுகளை மறைப்பதற்குப் புலிகள் முயற்சிக்கின்றனர். ஜனநாயக அரசியல் சூழல் வடக்கு - கிழக்கு உட்பட இலங்கையில் உருவாகும்போது மாத்திரமே சுதந்திரமான நாடாக இலங்கை மலரும் என்பது எப்போது எல்லோருக்கும் சிந்தனைக்கு எட்டுகின்றதோ அப்போதுதான் மனப்பூர்வமான அமைதி கிட்டும். ஆயிரக்கணக்கான ஆயுததாரிகளைத் தன்வசம் வைத்திருந்து வழி நடத்திய கருணாவைக் கொல்ல வலை விரித்திருக்கும் புலிகள், அவரது சகாக்கள் என்று சந்தேகம் கொள்ளும் அனைவரையும் கொன்றொழித்து வருகின்றனர். அந்த வரிசையில் மட்டக்களப்பில் நடந்த சிறைச்சாலைக் கொலைகளையும் குறிப்பிட வேண்டும். இம் மாத ஆரம்பத்தில் புலிகளது கட்டுப்பாட்டுப் பிரதேசமான பதுளை வீதி இலுப்படிச்சேனையில் அப் பிரதேசத்து இளைஞர்கள் இருவருக்குப் புலிகள் மரண தண்டனை விதித்தனர். இது அவர்களது கொடூரத்தனத்தின் உச்சத்தை வெளிப்படுத்தியிருந்தது. அதனைத் தொடர்ந்துதான் இந்தச் சிறைக் கொலைகள் நடந்திருக்கின்றன. தாம் நடத்திய படுகொலைகள் எதனையுமே வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளாத புலிகள், மரண தண்டனை வழங்குவதன் மூலமும் தற்கொலைத் தாக்குதல்கள் நடத்துவதன் மூலமும் தங்கள் வீரத்தையல்ல, வீழ்ச்சியையே காட்ட முனைகிறார்கள்.

**- இலக்குவன்.**



சக்தி தனக்கே உடைமை யாக்கு - அது
தன்னையவள் கோயிலென்று காணும் - அகம்
சக்தி தனக்கே உடைமை யாக்கு - அது
தன்னை யெண்ணித் துன்பமுற நாளும்.

-சுப்பிரமணிய பாரதியார்

# பாப்பா முரசு

## நாக பாம்பும் காக்கைகளும்


பாப்பா முரசு சிறுகதை

ஒரு மரத்தில் இரண்டு காக்கைகள் கூடு கட்டி வாழ்ந்து வந்தன. பெண் காகம் அக் கூட்டில் முட்டைகள் இட்டது. ஆனால், அம் முட்டைகளைக் கொண்டு அவற்றால் குஞ்சு பொரிக்க முடியவில்லை. காரணம் அந்த மரத்திலுள்ள ஒரு பொந்தில் கருநாகம் ஒன்று வசித்து வந்தது. அந்தக் கருநாகம் காக்கை இடும் முட்டைகள் அனைத்தையும் குடித்து வந்தது.

"இந்தக் கொடிய நாகம் நான் இடும் முட்டைகள் அனைத்தையும் குடித்து விடுகிறதே! இதற்கு நாம் என்ன செய்வது?" பெண் காக்கை, ஆண் காக்கையிடம் கேட்டது.

ஆண் காக்கை சிறிது நேரம் சிந்தித்துவிட்டு, "நாம் நமது நண்பர் நரியாரிடம் சென்று இதற்கு ஒரு யோசனை கேட்போம்" என்று கூறியது.

அவை இரண்டும் பறந்து ஒரு புதர் நிழலில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்த நரியிடம் சென்றன. பெண் காக்கை, நரியிடம் அந்தக் கொடிய கருநாகம், தான் இடும் முட்டைகளைக் குடித்து



வந்ததை வேதனையுடன் எடுத்துக் கூறியது.

"நாங்கள் வேறு இடத்திற்குப் போய்விடலாமா?" என்றும் கேட்டது.

"வேண்டாம்! ஒருபோதும் அப்படிச் செய்யக் கூடாது. பேராடாமல் கோழைகளைப் போல் ஓடக் கூடாது. உங்கள் புத்தியைப் பயன்படுத்தி அந்த நாகத்தை நீங்கள் வெல்ல வேண்டும். எனது திட்டத்தைக் கேளுங்கள்..." என்று கூறிய நரி, அக் காக்கைகளின் காதில் மெதுவாக எதையோ முணுமுணுத்தது.

"உனது உதவிக்கு நன்றி! நீ சொன்னபடியே செய்கிறோம்" என்று கூறிய காக்கைகள் அங்கிருந்து பறந்து மீண்டும் தமது கூட்டை அடைந்தன.

மறுநாள் பெண் காக்கை அருகிலுள்ள, அந் நாட்டு இளவரசி தினமும் வந்து நீராடும் ஆற்றுக்குச் சென்றது. இளவரசி வந்து தனது ஆபரணங்களையெல்லாம் கழற்றி வைத்து விட்டு ஆற்றில் இறங்கும் வரை அது அங்கேயே காத்திருந்தது.

பிறகு அது திடீரென்று பறந்தது.

இளவரசியின் தங்க அட்டிகையை எடுத்துச் சென்று கருநாகம் வசிக்கும் மரப் பொந்தில் போட்டது.

பெண் காக்கையை விரட்டிக்கொண்டு வந்த காவலர்கள் இதனைக் கண்டனர். அவர்கள் தங்கள் ஈட்டியை அப் பொந்திற்குள் நுழைத்து அட்டிகையை எடுக்க முயன்றனர். அப்போது பொந்திலிருந்து சீறிக்கொண்டு வெளியே வந்த கருநாகத்தைக் கண்டு அதைத் தமது வாளால் வெட்டிக் கொன்றனர். பிறகு தங்க அட்டிகையை எடுத்துக் கொண்டு இளவரசியிடம் கொடுக்கச் சென்றனர்.

மரத்தின் உயரக் கிளையில் அமர்ந்திருந்த காக்கைகள் இரண்டும் நரியின் யோசனையின்படி தங்கள் கொடிய எதிரி ஒழிந்தது கண்டு ஆனந்தம் அடைந்தன.

"கூர்மையான புத்தி, வலிமையான எதிரியை வென்றுவிடும் என்பதைப் பார்த்தீர்களா? புத்திசாலி நண்டு பேராசை பிடித்த கொக்கையும் வென்றது!" என்று தமனகன் கூறியது.

"அப்படியா! அந்தக் கதையையும் சொல்!" என்று கரடகன் கேட்டது.

அதனால் தமனகன் அந்தக் கதையைக் கூறத் தொடங்கியது.

**ஆம், பிள்ளைகளே! புத்திசாலித்தனமான செயற்பாடு என்றும் நல்ல பலனைத் தரும். நாம் எதிலும் மற்றவர்களின் ஆலோசனையைப் பெற்று அதன் படி எமக்குச் சரியானதா என்பதை உணர்ந்து செயற்பட முன்வரவேண்டும்! அப்போதுதான் துன்பமானாலும் சரி, ஆபத்து ஆனாலும் சரி வெற்றியைப் பெறலாம். ஆகவே புத்திசாலித்தனமான செயற்பாடு வெற்றியை தரும். புரியுதா குட்டீஸ்!**

## அண்ணனின் வேலை



எங்கள் அண்ணன் செய்த
வேலை
என்ன என்று தெரியுமா?

வேளா வேளை தின்று விட்டு
விழுந்து படுத்துத் தூங்க
வில்லை.
பாழாய்ப் போன சினிமாப்
பார்க்கப்
பகலில் க்யூவில் நிற்க வில்லை.

கெட்ட நண்பர் கூடச் சேர்ந்து
வட்ட மிட்டுத் திரிய வில்லை.
வெட்டிப் பேச்சுப் பேசிக்
கொண்டு
வீம்புச் சண்டை போடவில்லை.

எங்கள் அண்ணன் செய்த
வேலை
என்ன என்று தெரியுமா?

உறக்கம் இன்றி,
உணவும் இன்றி
உயிரை மதித்தி
டாமலே,
அரக்க ரான எதிரிப்
படையை
அலற அலற
விரட்டினார்.


மூர்க்க மான டாங்கிப்
படையை
முறிய டித்து
நொறுக்கினார்.
தாக்க வந்த விமானம்
யாவும்
தவிடு பொடியாய்
ஆக்கினார்.

சிங்கம் போல
வீரத்தோடு
தேசம் தன்னைக்
காக்கவே
எங்கள் அண்ணன்
செய்த வேலை
எனக்குப் பெருமை
அல்லவோ?

எனக்கு மட்டும்
பெருமையில்லை;
இப்பூமிக்கே
பெருமையாம்!

## அதிசய உலகம்

### பவளம்



**செ**ங்கடலின் அடியில் பவளம் கிடைக்கிறது. வெறும் எலக்ட்ரானிக் ஃபிளாஷைப் பயன்படுத்தி அவற்றைப் படம் பிடித்தபோது அவை பார்ப்பதற்கு வெகு சாதாரணமாகத் தென்பட்டன.

ஆனால், அதே பவளத்தை இரவில் மிகவும் சக்தி வாய்ந்த அல்ட்ரா வயலட் லைட்டைப் பயன்படுத்தி படம் எடுத்த போது, அந்தப் பவளம்தானா இது என்று அதிசயிக்கும் வண்ணம் ஜொலித்தது!

பவளம் கண்ணுக்குத் தெரியாத அல்ட்ரா வயலட் கதிர்களை அப்படியே உறிஞ்சிப் பின்பு நன்றாகப் பார்க்கும் வண்ணம் ஆரஞ்சு வண்ணத்தில் சுடர் விடுகிறது. இது ஏதோ மாஜிக் போல் தோன்றுகிறதல்லவா? இயற்பியலிலும் உயிர் நூலியலிலும் இந்த மாஜிக்கை ஃப்ளோரசன்ஸ் (Fluorescence) என்கிறார்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 31.07.2004

வர்ணம் தீட்டும் போட்டி இல: 554
தினமுரசு வாரமலர்
த. பெ. இல. 1772.
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 553

**பரிசுக்குரியவர்:**
பா. ஜேம்சன்,
இல. 23, 1ஆம் குறுக்குத் தெரு
மன்னார்.

### பாராட்டுக்குரியவர்கள்


| | |
|---|---|
| கமிலஸ் கிரித்திகன், தந்தை செல்வா பாலர் பாடசாலை, பண்டாரிக்குளம் வவுனியா. | பா. கீர்த்தனா, அமிர்தாம்பிகை வித்தியாலயம், நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. |
| க. அபினயா, கி.ச.பா. 84, டிலாசால் வீதி, கொழும்பு - 15. | மூ.அ. பாமஸ்ரியா, 71/9 ஆதம் போடி, ஹாஜியார் லேன், காத்தான்குடி - 05. |
| அருட்செல்வம் செந்தூரன், கலைவாணி பாலர் பாடசாலை, 246, அன்புவழிபுரம், திருகோணமலை. | ரா. திவ்யா, 175, லோலர் வீதி, பதுளை. |
| ஞா. சஸ்மிதா, சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம், மானிப்பாய். | பா. சிறீகுகன், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை. |
| சே. பிரசாந், 432, மெயின் வீதி, டிக்கோயா. | ஏ.எம். பஸ்லான், 203, கதிரியா பீச் றோட், அக்கரைப்பற்று - 01. |

## உங்கள் பொது அறிவு எப்படி?


1. டேவிட் லிவிங்ஸ்ரன் சிலை எங்கே உள்ளது?
   – சாம்பெசியிலுள்ள விக்ரோறியா நீர்வீழ்ச்சியில் கையில் விவிலிய நூலை ஏந்திய பாவனையில் காட்சி தரும் சிலை.
2. ஐரோப்பாவின் பெரிய எரிமலை எங்குள்ளது?
   – சிசிலியில் உள்ள எட்னாவில்.
3. தென்னமெரிக்காவின் நீளமான ஆறு எது?
   – அமேசன் நதி.
4. உலகின் உயர்ந்த மலைச்சிகரம்?
   – எவரெஸ்ட் (29,002 அடி.)
5. உலகில் பெரிய வாவி (கஸ்பியன் கடல் தவிர்த்து)?
   – அப்பீரியர் வாவி (31,820 சதுர மைல்.)
6. கனடாவில் முக்கிய ஆறு ?
   – சென். லோறன்ஸ் நதி.
7. உலகில் மழை கூடிய பிரதேசம் எது?
   – சிறாப்பூஞ்சி.
8. யூதர்களுடைய நாடு எது?
   – இஸ்ரவேல்.
9. பர்மாவின் நீண்ட ஆறு எது?
   – ஐராவதி.
10. இந்தோனேசியாவின் பிரிவுகள் எவை?
    – லாவோஸ், கம்போடியா, வியட்நாம்.

# தகவல் பெட்டி

## இராட்சத ரபான்




விசாலமான ரபான்களுக்கு சீனா, ஜப்பான் போன்ற நாடுகள் அதிகளவான பிரசித்தம் பெற்றிருப்பதை நாம் அறியக்கூடியதாகவுள்ளது. இதுவும் அவ்வாறான இராட்சத ரபான் ஒன்று. 10 அடிக்கும் மேற்பட்ட விட்டத்தைக் கொண்ட இந்த இராட்சத ரபானை கீழே இருந்துகொண்டு அடிப்பதென்றால் அது முடியாத காரியம். இந்தப் பெண்மணிக்கு இவ்வளவு தூரம் துள்ளிக் குதிக்க ஏற்பட்டதே அதனால்தான். சீனாவில் உள்ள மிகப் பெரிய ரபான் கருவிகளில் ஒன்றாகக் கருதப்படும் இந்த ரபான் சான்ஷி பிரதேசத்தில் சியங் என்ற ஊரில் அமையப்பெற்றுள்ளது. அதன் நிறை 1800 கிலோகிறாம்.




## பெரிய பாலம்

பிரான்ஸின் டார்ன் நதிக்கு மேலாக அதி நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அண்மையில் உருவாக்கப்பட்ட பாலமே இது. 1.6 மைல் நீளமுடைய இப் பாலம் பிரான்ஸ் ஈபில் கோபுரத்தை விட 80 அடி உயரத்திலே அமைந்துள்ளது. இது மணித்தியாலத்தில் 160 மைல் வேகம் கொண்ட புயல் காற்றையும் சமாளிக்கும் வல்லமை கொண்டதாகத் தரவுகள் கூறுகின்றன.



## போட்டிக்கு கொல்லுதல்

முன்னால் சோவியத் குடியரசில் இருந்து தற்போது பிரிந்து தனி இராச்சியமாக உருவாகியுள்ள கஜகஸ்தான் வாசிகள் பருந்துகளை வளர்ப்பதை சம்பிரதாயமாக் கொண்டிருக்கிறார்கள். அங்கு வருடத்திற்கு ஒரு முறை டல்டிகோர்கன் என்ற நகரில் பருந்து வேட்டைப் போட்டி நடைபெறுவது வழக்கமாகும். இது அவ்வாறான போட்டி ஒன்றில் பருந்தொன்று முயலைக் குறிபார்த்து ஓடும் காட்சியாகும்.



## புதுமையான பார்வை

டோம் கிஸ்பன் என்பவர் தொலைக்காட்சிப் பெட்டியைப் பார்ப்பதற்கென்றே தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர். அண்மையில் வீதியோர நடை பாதை ஒன்றில் இருந்து புதுமையான சாதனை ஒன்றை ஏற்படுத்தினார். அது தொடர்ச்சியாக 47 மணித்தியாலம் 8 விநாடிகள் ஓய்வில்லாமல் தொலைகாட்சி பார்த்ததே. இது ஒரு கின்னஸ் சாதனையாகவும் கருதப்படுகிறது.



## உலகிற்கே ஒன்று

இவர் தற்போது உலகின் மிக உயர்ந்த மனிதராவார். லியோனிட் ஸ்டான்ட்னிக் என்ற இவரது உயரம் 8 அடி 4 அங்குலம். உக்ரேன் வாசியான இவர் தனது அசாதாரண வளர்ச்சியை தான் விரும்பவில்லை என்று தெரிவிக்கிறார்.

## பாலாவுக்கு திருமணம்

தமிழ் சினிமாவைத் தலைநிமிரச் செய்த 'சேது', 'நந்தா', 'பிதாமகன்' ஆகிய மூன்று வெற்றிப் படங்களின் இயக்குநரான பாலாவுக்கு ஜூலை 5ஆம் திகதி மதுரையில் திருமணம நடந்தது. தனது உறவுக்காரப் பெண்ணான முத்துமலரை மணந்தார். திருமணத்திற்கு ஒட்டுமொத்த சினிமாப் பட்டாளமும் மதுரையை நோக்கிப் படையெடுத்தது.

மணமக்களை மனசார வாழ்த்துகிறோம்!



ஹரிகிருஷ்ணா சோனியா, அகர்வால்

## சதா மீது ஷங்கர் கோபம்

'அந்நியன்' படத்தில் நாயகி சதா வெகு விரைவில் அந்தப் படத்திலிருந்தே அந்நியப்படுத்தப்படலாம் என்கிறது ஒரு இரகசியச் செய்தி. அந்த அளவிற்கு 'அந்நியன்' படத்தின் இயக்குநர் ஷங்கருக்கு சங்கடத்தைத் தந்துவிட்டாராம் சதா!

'இந்தியன்', 'முதல்வன்' எனப் பல வெற்றிப் படங்களைத் தந்த இயக்குநர் ஷங்கர் 'பாய்ஸ்' படத்தின் மூலம் பெரும் சர்ச்சைக்கு ஆளானார். படமும் படுதோல்வி அடைந்தது. ஆகவே, தனக்கு விழுந்த கெட்ட முத்திரையை நீக்கவும், விட்ட பெயரை மீட்கவும் அவர் எடுக்கிற அடுத்த படம்தான் 'அந்நியன்'.

ஒரு தவம் போல இப் படத்தை உருவாக்கி வருகிற ஷங்கருக்கு படம் பூஜை போட்ட நாளிலிருந்து கால்ஷீட் சொதப்பலைச் செய்து வருகிறார் சதா. இந்த இம்சை போதுமா இன்னும் கொஞ்சம் வேணுமா என்று பாடாத குறையாக அந்நியனுக்குத் தந்த கால்ஷீட்டை 'மோனலிசா' என்ற கன்னடப் படத்திற்கும் பாதியாகப் பகிர்ந்து தந்து பகீர் உணர்வை ஏற்படுத்தியுள்ளார்.

அதற்குக் காரணம் 'அந்நியன்' படத்துக்காக சதா பெற்ற சம்பளத்தை விட கன்னடத்தில் அதிக சம்பளம் தரப்பட்டதுதான். தகவலறிந்த ஷங்கர் கொதித்துப் போய்விட்டாராம்.

ஆனால், சதாவோ, 'அந்நியன்' படத்தில் என்னை அதிகமாக கவர்ச்சி காட்டச் சொன்னார்கள். என் கண்ணியம் என்னாவது என்பதால் மறுத்துவிட்டேன்" என்று பிரச்சினையைத் திசைதிருப்பிவிட்டாராம்.

ஆனாலும் 'அந்நியன்' யூனிட் சதா நடிக்கிற கன்னடப் படத்தில் அவர் படுபயங்கர கவர்ச்சி காட்டுகிறார் என்று ஸ்டில்ஸ் ஆதாரங்களை அள்ளி வீச, சதா இப்போது கப்சிப்.

"சதா சதாய்க்கிறார்" என்று சதா சர்வகாலமும் புலம்புகிறான் 'அந்நியன்'.



துலானி

### மனோஜ் வில்லன் ஆகிறார்

'தாஜ்மகால்', 'ஈரநிலம்' படங்களில் கதாநாயகனாக நடித்தவர் மனோஜ். இயக்குநர் பாரதிராஜாவின் மகனான இவர், ஹீரோவாக வெற்றி பெற முடியாததால், சத்யராஜ் நடிக்கும் 'மகாநடிகன்' படத்தில் வில்லனாக அறிமுகமாகிறார். நடிப்பு உங்களுக்கு வில்லனாகிவிடாமல் பாத்துக்கங்க.

### சரத்குமாரின் 'கடிதம்'

சுப்ரீம் ஸ்டார் சரத்குமார் தனது ரசிகர் மன்றத்தினருக்காக "கடிதம்" என்ற மாதப் பத்திரிகை நடத்தத் திட்டமிட்டு, அதற்கான பணிகளில் இறங்கிவிட்டார். இதில் சூடு பறக்கிற அரசியல் கட்டுரைகளும் இடம் பெறுமாம்.

என்னமோ திட்டமிருக்கு!

## தனுஷ் - ஐஸ்வர்யா காதல் கதை

சூப்பர் ஸ்டார் எப்போதும் பரபரப்புச் செய்திகளின் கிடங்கு. அவரது மகள் ஐஸ்வர்யா பற்றி கிளம்புகிற கிசுகிசுக்களோ அவரை விட இரு மடங்கு.

'லிட்டில் சூப்பர் ஸ்டார்' என்று பட்டம் கட்டிக்கொண்ட சிம்புவும், ஐஸ்வர்யாவும் தீவிரமாகக் காதலிக்கிறார்கள் என்பது நேற்றைய வதந்தி. இப்போது சிம்புவுக்கும், ஐஸுக்கும் என்ன வம்பு வந்ததோ..... இருவரும் கிட்டத்தட்ட காதலை வெட்டிக்கொண்டது உறுதியாகிவிட்டது.

இந்தத் தகவலை உறுதி செய்து சிம்புவின் தாடிக்கார டாடி டி.ராஜேந்தரும் "மூணு நாலு மாசமா என் பயைனும், அந்தப் பொண்ணும் பேசிக்கறதே இல்லை. என்னான்னு கேக்கப் போனா எனக்குத்தான் தொல்லை" என்று தனது நண்பர்களிடம் மனசு கசிந்ததாக செய்தி கசிந்தது உண்மை.

இந்த இடைவெளியில் தனுஷ்-ஐஸ்வர்யா இருவருக்கும் காதல் என்று இன்னொரு கிசுகிசு. இதற்கேற்றாற்போல நடந்தன சில சம்பவங்களும். சமீபத்தில் ரஜினி குடும்பத்தினர் தொடங்கிய ஒரு கடை துவக்க விழாவிற்கு வருகை தந்தார் தனுஷின் தாயார் விஜயலட்சுமி. அவரை பாசம் கொப்பளிக்கப் பணிவாக உபசரித்தார் ஐஸ். பதிலுக்கு ஐஸை உச்சிமோந்து மெச்சினார் விஜயலட்சுமி.

அடுத்த காட்சி மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் திருமணத்தில் மணமகளின் தோழியான ஐஸ் அங்கிருந்த நேரத்தில் ஆஜரானார் தனுஷ் அம்மா. அவரைப் பார்த்ததும் பாய்ந்து சென்ற ஐஸ் தோள் பற்றி அழைத்து வந்து மணமக்களிடம் அறிமுகப்படுத்தி அசத்தியது 'அச்சா' போட வேண்டிய அச்சாரக் காட்சி. இப்படியாக நாளொரு காட்சியும், பொழுதொரு சாட்சியுமாக விறுவிறுப்பாக வளர்ந்து வருகிறதாம் தனுஷ்-ஐஸ் காதல்.

ஆனால், தனுஷைக் கேட்டால், "ஐயோ, ஐஸ்வர்யாவை ஒரு ப்ரிவியூ ஷோவில்தான் பார்த்திருக்கேன்" என்று நழுவி ஓடுகிறார். ஐஸை விசாரித்தாலோ "வருகிற நவம்பரில் நான் தமிழ்நாட்டு மருமகள்" என்று சஸ்பென்ஸ் போடுகிறார்.

இன்றைய கிசுகிசு-நாளை உண்மை?

### தனுஷுடன் நமீதா


'எங்கள் அண்ணா', 'ஏய்' படங்களில் கதாநாயகியாக நடித்த நமீதா, 'தேவதையைக் கண்டேன்' படத்தில் தனுஷுடன் ஒரே ஒரு பாட்டுக்கு கும்மாங்குத்து ஆட்டம் போடுகிறார். காரணம் - கை நிறையக் கிடைத்த சம்பளம்.

புத்திசாலிப் பொண்ணு!

### கமலுக்கு அம்மா கஸ்தூரிபாய்

'காந்தி' படத்தில் கஸ்தூரிபாயாக நடித்து உலகப் புகழ் பெற்றவர் ரோஷினி ஹத்தங்காடி. இவர் 'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்' படத்தில் கமலுக்கு அம்மாவாக நடிக்கிறார்.

அதாவது 'ஹேராம்' அம்மா!




குடைக்குள் மழை
பார்த்திபன்-மதுமிதா

### சத்யராஜ் லொள்ளு

சத்யராஜ் நடிக்கிற 'மகாநடிகன்' படத்தின் சுவ ரொட்டிகள் சென்னையில் எக்கச்சக்க பரபரப்பைக் கிளப்பிவிட்டது. சினிமாக்காரன் சி.எம். ஆகலாமா - அந்த சுவ ரொட்டிகளில் இருந்த சூடான வாசகம் இதுதான். "படத்தின் மையக் கதையும் இதேதான்" என்று நக்கலாகச் சிரிக்கிறார் சத்யராஜ்.

மனிதருக்கு லொள்ளு ஓவர்.



### ஷகீலா திகிலா?

மிரள வைக்கிற அளவு கவர்ச்சி காட்டி நடிக்கிற இரண்டு நடிகைகளிடையே நடக்கிற போட்டி அரள வைக்கிறது. கவர்ச்சி நடிகைகள் ஷகிலா, ஷர்மி இருவருக்கும் அறிமுகம் தேவையில்லை. கடல் கடந்து புகழ்பெற்ற உடல்வாகு கொண்டவர்கள் இவர்கள். மலையாளப் பட உலகில் கிளுகிளு வேடங்களில் நடித்து சக்கைபோடு போடுவதில் ஷகீலாவுக்கு சரியான போட்டி ஷர்மி.

இவர்கள் நடிக்கிற கவர்ச்சிப் படங்களின் வசூலால் மலையாள சூப்பர் ஸ்டார்களான மோகன்லால், மம்முட்டி படங்கள் கூட சமயங்களில் மண்ணைக் கவ்வியிருக்கின்றன. இதனால் உஷாரான மலையாளத்திரை மேற்படி ரெண்டு பெண்டுகளின் தலையில் துண்டு போட்டு தமிழகத்திற்கே ஓட வைத்துவிட்டது.

ஷகீலா காமெடி கலந்த ரோல்களில் நடித்து வருகிறார். ஷர்மியும் டப்பாங்குத்து டான்ஸ் ஆடி சின்னரோல்களில் வந்து போகிறார். கேரளாவில் தனக்குப் போட்டியாக இருந்த ஷர்மி, தமிழிலும் போட்டிபோடுவது தாங்க முடியவில்லையாம் ஷகீலாவால். இதன் விளைவு - நடிகை ஷர்மி தற்கொலை என்று சமீபத்தில் ஒரு வதந்தி கிளம்பியது.

கலங்கிப்போன ஷர்மி இந்தப் புரளியைக் கிளப்பினது அந்தக் குண்டு நடிகைதான். தொழில் போட்டி இருக்கலாம். அதுக்காக இப்படியா பொய்ச்செய்தியை பரப்பறது? அந்த நடிகையின் முகமூடியை சீக்கிரமே கிழிப்பேன் என்று சூடாகப் பேசுகிறார்.

திகிலா இருக்கே ஷகீலா!



## ஆழ்வார்பேட்டை ஆண்டவன் கமல்

கமல்ஹாசனை அவரது இரசிகர்கள் "ஆழ்வார்பேட்டை ஆண்டவா" என்று செல்லமாக அழைப்பார்கள். இதை இரசித்த இயக்குநர் சரண், தனது 'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்.' படத்தில் "ஆழ்வார்பேட்டை ஆண்டவா, வேட்டி போட்டு தாண்டவா" என்றொரு பாடல் காட்சியே வைத்து கமல் இரசிகர்களைப் பரவசப்படுத்திவிட்டார்.

டைட்டிலுக்கேத்த மாதிரி படம் ஓடினா சரி!

## ரஷ்யாவில் ஸ்ரீகாந்த் — சிநேகா

'ஜுட்' பட வெற்றியைத் தொடர்ந்து ஸ்ரீகாந்த் 'போஸ்' என்ற அதிரடி ஆக்ஷன் படத்தில் கமாண்டோ வீரராக நடித்து வருகிறார். படத்தில் இடம்பெறும் ஒரு பாடல் காட்சிக்காக ரஷ்யா கிளம்புகிறார்கள் ஸ்ரீகாந்த், சிநேகா. ஆகஸ்ட் 15இல் படம் ரிலீஸ் ஆகிறது.

சிநேகாவுடன் காதல் கிசுகிசு அடங்கிடுச்சா ஸ்ரீ?



வசூல்ராஜா M.B.B.S
கமல்- சிநேகா

## த்ரிஷா மீது ஸ்ரீதேவி பாய்ச்சல்

ஸ்ரீதேவி விஜயகுமார்-அழகான டீன்ஏஜ் வெல்லக்கட்டி. விஜயகுமார்-மஞ்சுளா நட்சத்திரக் குடும்பத்தின் கடைசிக் கன்னுக்குட்டி. இவர் சிறுமியாக இருந்தபோதுதான் வெற்றி நட்சத்திரம். குமரியாக அறிமுகமான முதல் படம் 'காதல் வைரஸ்' தோற்றுப்போனதால் ஸ்ரீதேவி மனம் குமுறி அழுதார். இப்போது ஸ்ரீதேவி நடிக்கிற ஒரே படம் - 'தேவதையைக் கண்டேன்'. இதில் இவர் தனுஷ்க்கு ஜோடி. ஆனால் படப்பிடிப்பை டி.வி.சீரியல் போல இழுத்தடிக்கிறார்கள் என்று புலம்புகிறார் ஸ்ரீ.

"அப்பா, அம்மா தவிர, உங்கள் குடும்பத்திலிருந்து நடிக்க வந்த யாருமே சினிமாவில் வெற்றிபெற்று நிலைத்து நிற்க முடியவில்லையே ஏன்?" என்று கேட்டால்...

"என்ன செய்வது? இதை விதி என்பதா...சதி என்பதா? அழகு, இளமை, திறமை என சகலமும் இருந்தும் எங்களால் சாதிக்க முடியாமல் போனதற்கு காரணம், நல்ல கதைகள் அமையவில்லை என்பதே. அண்ணன் அருண்குமாரும் அக்காக்கள் வனிதாவும் ப்ரீதாவும் எவ்வளவோ திறமையாக நடித்தும் வெற்றிபெறாதது எங்களின் நேரம்தான்" என்று வருத்தப்படுகிறார் தேவி.

"இன்னொரு விஷயம் சொல்லட்டுமா?" 'சாமி' படத்தில் த்ரிஷாவின் கேரக்டருக்கு முதல் என்னைத்தான் நடிக்க அழைத்தார்கள். அப்போது என்னால் நடிக்க முடியவில்லை. அதனால், படத்தின் டைரக்டரான எனது மாமா ஹரி, அந்த வாய்ப்பை த்ரிஷாவுக்கு தந்தார். இப்போது அதுபற்றி புலம்புவது அனாவசியம் விஷயம். நான் நம்புவது 'தேவதையைக் கண்டேன்' படத்தை. அந்தப் படம் எனக்குத் தரும் முன்னணி இடத்தை" என்று உற்சாகமாகப் பேசுகிறார் ஸ்ரீதேவி.

நம்பிக்கைதானே வாழ்க்கை!

## அரசியலை வெறுக்கும் அஜித் 'ஜி'!

"2005ஆம் வருடம் ஜுலை வரை எனக்கு நேரம் சரியில்லை" என்று அஜித் மனம் வெதும்புகிறார். அடுத்து வருகிற தனது 'ஜி', 'அட்டகாசம்', 'மிரட்டல்' படங்களை ரொம்பவே நம்புகிறார். அஜித் நடித்து வெளியான 'ஆஞ்சநேயா', 'ஜனா' இரண்டு படங்களுமே அடுத்தடுத்து தோல்வி கண்டது. நல்ல கதை அமையாமல் போனதே இந்தத் தோல்விக்குக் காரணம் என்று பகிரங்கமாக ஒப்புக்கொள்கிறார் அஜித். ஆகவே இப்போது லிங்குசாமி இயக்குகிற படத்தில் அதீத அக்கறையோடு நடித்து வருகிறார். ரஜினிகாந்த், விஜயகாந்த் - இவர்களுக்கு அரசியல்வாதிகளால் ஏற்பட்ட எதிர்ப்பை அஜித்தும் மிக உன்னிப்பாகக் கவனித்து வருகிறார். எதற்காக? வரப்போகிற 'ஜி' படத்தில் சுயநல அரசியல்வாதிகளின் முகத்திரையை அப்பட்டமாகக் கிழித்துக் காட்டியிருக்கிறாராம் அஜித். கல்லூரி மாணவர்களை அரசியல்வாதிகள் தங்களது சுயநலத்திற்காகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். இதை மாணவர்கள் உணர்ந்து திருந்த நினைக்கிறபோது, அதே அரசியல்வாதிகளால் பாதிக்கப்படுகிறார்கள். இந்த மோசடியைத் தோலுரித்துக் காட்டுகிறார் அஜித் - இதுதான் 'ஜி' படத்தின் கதை.

எதுக்கும் இந்தப் படத்தை 2005-ஜுலைக்கு அப்புறமா ரிலீஸ் பண்ணுங்க!

## ஆக்ஷன் ஹீரோவாக ஆசை! -சிபிராஜ்

வாலிப வயசு சத்யராஜ் போலவே இருக்கிறார் சிபிராஜ். லொள்ளு ப்ளஸ் உயரத்தில் அப்பா போலவே பிள்ளை. ஆனால் நடிப்பில்தான் தந்தை அளவிற்கு இல்லை!

'ஸ்டுடண்ட் நம்பர் ஒன்' படத்தில் கதாநாயகனாக அறிமுகமான சிபிராஜ், இப்போது நடித்து வெளியாகியிருக்கிற இரண்டாவது படம் 'ஜோர்'. நிஜ அப்பா-மகன் இருவரும், படத்திலும் அப்பா-மகனாகவே ஜாலியாக நடித்து அமர்க்களப்படுத்தியிருக்கிறார்கள்.


11ஆம் வகுப்புப் படிக்கும்போதே சிபிக்கு சினிமா தாகம் வந்துவிட்டது. கல்லூரியில் முதலாண்டு படிக்கையில் 'ஸ்டுடண்ட் நம்பர் ஒன்' படத்தில் ஹீரோவாக அறிமுகமானார். டாக்டர் அல்லது இன்ஜினீயர் ஆக ஆசைப்பட்டார் இவர். ஆனால் இரண்டுமே நிறைவேறாமல் முழு நேர நடிகராக ஆகி விட்டார்.

சிபி நடிக்கிற படங்களின் கதையை சத்யராஜ் கேட்கிறார். ஆகவே மகனின் வெற்றியை முதல் நிர்ணயிப்பது அப்பாதான். தந்தையைப் பற்றிப் பேசுகையில் "ஐயா" என்று மரியாதை காட்டுகிறார். மகனின் வெற்றிக்கு பல டிப்ஸ்களை தந்துள்ளார் சத்யராஜ். கடின உழைப்புத் தேவை; சகலரிடமும் மரியாதையாகப் பழகு; வெற்றி தோல்வி இரண்டும் சமமே - இது தந்தை சொன்ன மூன்று மந்திரம்.

என்னுடைய அபிமான ஹீரோக்கள்-ஆர்னால்டு, ஜாக்கிசான். என்னுடைய எண்ணம் ஒரு ஆக்ஷன் ஹீரோவாக நான் ஜெயிக்க வேண்டும் என்பதுதான். இதுதான் சிபியின் இலட்சியம். திட்டமிட்டு உழைத்தால், சிபிக்கு வெற்றி நிச்சயம்.



சரத்குமார்-மும்தாஜ்



அஜித்- அஸின்

## விசிட்

## நியூ

இயக்குநர் எஸ்.ஜே. சூர்யா ஏற்கெனவே 'வாலி', 'குஷி' போன்ற திரைப்படங்களைத் தந்தவர். தற்போது 'நியூ' படத்தில் தானே கதாநாயகனாகப் பாத்திரம் ஏற்றுக் கலக்கியிருக்கிறார். இயக்குநர்கள் கதாபாத்திரங்களாக மாறுகின்ற போது உணர்வுகள் அவ்வாறே வெளிப்படுகின்ற தன்மையைக் காண முடிகிறது. உதாரணமாக, 'ஆட்டோகிராப்' திரைப்படத்தில் இயக்குநர் சேரன், 'நியூ'வில் இயக்குநர் சூர்யா, மேலைத்தேய சினிமாக்கள் போன்று வித்தியாசமான கற்பனையில் நமக்கு விருந்தளித்திருக்கிறார்கள். எட்டு வயதுச் சிறுவன் பகல் பொழுதில் சிறுவனாகவும் இரவுப் பொழுதில் 28 வயது வாலிபனாகவும் கற்பனைக்கு எட்டாத கதையம்சம். கமலஹாசனின் திரைப்படங்களுக்குப் பிறகு வயிறு குலுங்கச் சிரிக்க வைப்பதில் சூர்யா வெற்றி கண்டுள்ளார். இரட்டை அர்த்த வார்த்தைகள் அவ்வப்போது நெருடலாக இருந்தாலும் அடுத்த காட்சியிலேயே அதற்காக கைதட்டலைப் பெறுகிறார். எல்லாம் தெரிந்தவருக்கு ஒரு சில நேரங்களில் சில விடயங்களை ஏற்றுக்கொள்ள முடிகிறது. இதை ஒரு பரீட்சார்த்தமாக சூர்யா நாடி பிடித்துப் பர்த்திருக்கிறார். எதற்காகச் சிரிக்கிறோம் என்பதை நாம் விளங்கிக்கொள்வதற்கான அடையாளமாகப் படுகிறது. மணிவண்ணன், கருணாஸ் இருவரும் இருந்தும் சூர்யாவே அதிக இடைவெளிகளை நிரப்புகிறார். சிறந்த இயக்குநருக்குள் இப்படி நகைச்சுவை உணர்வும் இருக்கத்தான் செய்கிறது என்பதை சூர்யா உணர்த்துகிறார். சிம்ரனின் இறுதித் திரைப்படம் என்பதாலோ என்னவோ பழைய திரைப்படங்களை விட இதில் கொஞ்சம் கவர்ச்சி சேர்த்திருக்கிறார். நடிப்புக்குத் தேவையானதை தான் செய்தே ஆகவேண்டும் என இதற்கு விளக்கமும் தருகிறார் சிம்ரன். சிம்ரனோடு போட்டிபோட கிரண் களமிறங்கி இருந்தபோதும், நினைத்த அளவுக்கு அவரின் காற்று வீசவில்லை. அவ்வப்போது சினிமாக்களில் தலைகாட்டி வருபவரான தேவயானி சிறுவயது சூர்யாவுக்கு நல்ல தாயாக தனது நடிப்பை நமக்குள் திணித்திருக்கிறார். இளைஞர்களையும் யுவதிகளையும் ஈர்க்கும் என எதிர்பார்க்கப்பட்ட 'நியூ' அதிகமாக சிறுவர்களையே வசப்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை. விஞ்ஞான வளர்ச்சி கண்டுள்ள இவ்வுலகில் எதுவும் சாத்தியம் என்ற சூர்யாவின் அசைக்க முடியாத நம்பிக்கை அவரைக் கைவிடாது என எண்ணலாம். வித்தியாசமான கதையும் புதுமையான கதை அமைப்பும் நம்மை ஆட்கொள்ளும் அதே சந்தர்ப்பத்தில் ஏ.ஆர். ரகுமான் அவருக்கே உரித்தான இசை பாணியில் நம்மை துள்ளல் போட வைக்கிறார். நீண்ட இடைவேளைக்குப் பிறகு பழைய பாடல் ஒன்று புதுமைப் பொலிவுடன் மீண்டும் பிரசவிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஏ.ஆர்.ரகுமானுக்கு சபாஷ்! 'நியூ' புதுமை.




## அர்ச்சனைப் பூ!



அகல்விளக்குகளும் அர்ச்சனைப்பூக்களும்
ஆடம்பரமாக தொலைக்காட்சிப் பெட்டியில்,
நடிக நடிகையரின் நடிப்பில்
ஒவ்வொரு நாளும் ஒலி ஒளி
பரப்பாகும்போது....
கண்ணில் நீர் வடிய வடிய....
துடைத்து, துடைத்து – இறுதிவரை
தவறாது பார்க்கும் – என்
அன்புத் தாயே! (–உன்
தவறால்)–உன்
வீட்டில் உள்ள பூவொன்று
அர்ச்சிக்கப்படாமலிருப்பதும்
உன் வீட்டில் உள்ள
அகல்விளக்கொன்று ஏற்றப்படாமலிருப்பதும்
உன்னால் தான் என்பது
உனக்குப் புரியவில்லையா? – இந்த
நாடகங்களில் வரும் தாயைப் போல்
நீ இருந்திருந்தால்.....
எனது வாழ்வு மலர்ந்திருக்கும்....!

*எஸ்.பத்மினி, திருகோணமலை.*

## சரிவுகள்...!

முதற் சந்திப்பில்
முகவரி தொலைத்தேன்
முத்தத்தின் பின்
முயற்சியை தொலைத்தேன்
உன்னை நினைத்தே
உள்ளம் தொலைத்தேன்
உளவு பார்த்தே
உறவு தொலைத்தேன்
கருங் கூந்தலில்
கனவைத் தொலைத்தேன்
கடைக் கண்ணிலே
கல்வி தொலைத்தேன்
குரலுக்காக
குலவழக்கம் தொலைத்தேன்
கன்னிப் பார்வையில்
கட்டுப்பாடு தொலைத்தேன்
சுடிதார் அழகில்
சுவாசம் தொலைத்தேன்
நிலவு முகத்தில்
நிம்மதி தொலைத்தேன்
பார்த்துப் பார்த்தே
பார்வை தொலைத்தேன்
மென்மை கண்டு
திண்மை தொலைத்தேன்
பச்சை ஜோக்குகளில்
பக்குவம் தொலைத்தேன்
நேச வார்த்தையில்
பாசம் தொலைத்தேன்
நயன பாசையில்
நன்மை தொலைத்தேன்
காத்திருந்தே
காலம் தொலைத்தேன்
கன்னக் குழியில்
என்னைத் தொலைத்தேன்
சில்லறைச் சிரிப்பில்
சித்தம் தொலைத்தேன்
சிணுங்களில்
சினேகம் தொலைத்தேன்
சேலை அழகில்
செல்வம் தொலைத்தேன்
மொத்தத்தில்
அவளுக்காகவே
அகிலம்
தொலைத்தேன்!



*–புத்தளம் நஸீம்*

## எரிந்து போகும் நட்பு

என் தோழியே!
உன்
பழைய கடிதங்கள்
என்னைப் பார்த்து
முகந்திருப்பிக் கொள்கிறது
உன்
ஞாபகங்களெல்லாம்
என்னிதயத்துள்
காயப்பட்டுக்
கிடக்கிறது
நாம்
நடந்து திரிந்த
பாதையெல்லாம்
பரவிக் கிடக்கும்
நம்பிக்கையின்
தடங்கள்:
இருந்து பழகிய
பூங்காக்களில்
பூக்களெல்லாம்
சாட்சி யுரைக்கும்.
எனினும்
சாட்சிகளை கொளுத்திவிட்டுத்
தானே
இந்தச் சமூகம்
தீர்ப்புகளை எழுதுகிறது
இங்கே
பாதையெல்லாம் சந்தேக முட்கள்
எனின்
நானும் நீயும்
எப்படி
நண்பர்களாய் நடந்து போவது?

*மு.கீர்த்தியன், லபுக்கலையூர்.*

## எங்களுக்கே ஓட்டுப் போட வேண்டும்

மீண்டும் உங்கள்
முன் வந்திருக்கின்றோம்
ஓட்டுக் கேட்டு!

கடந்த காலங்களில்
உங்களுக்காக நாங்கள்
என்ன செய்தோம் என்று
எங்களுக்கே தெரியாது என்பதை
மறந்து எங்களுக்கே
நீங்கள் ஓட்டுப் போடவேண்டும்!

உங்கள் பிள்ளைகளின்
கல்வி வளர்ச்சியில்
எதுவித அக்கறையும் இல்லாமல்
எங்கள் பிள்ளைகளை பத்திரமாக
வெளிநாடுகளுக்கு அனுப்பி
படிக்க வைக்கும் எங்களுக்கே
நீங்கள் ஓட்டுப் போட வேண்டும்!

அன்புள்ள மகா ஜனங்களே!
அகதிகளாக அவலப்பட்டு
நீங்கள் ஓடித் திரியும் போது
சொகுசு கார்களில் வலம்
வரும் எங்களுக்கே
நீங்கள் ஓட்டுப் போட வேண்டும்!

உங்கள் நலனன்றி
ஓட்டுக்காகவே கூட்டுச்
சேர்ந்த எங்களுக்கே
நீங்கள் ஓட்டுப் போட வேண்டும்!

*த.நகுலேஸ்வரன் – சிவாநந்தா தேசிய பாடசாலை மட்டக்களப்பு.*

## முற்றுப்பெறாத சரிதை



எழுதிக் கொண்டிருந்தேன்
முற்றுப் புள்ளிகள் தம்மை
முடிவிலே இடுமாறு அடிக்கடி
முணுமுணுத்தன.
என் வாழ்க்கைச் சரிதமே
எழுதுகிறேன் என்றவைக்கு
விளங்கவில்லைப் போலும்.

*ஜெ.சுபாஷினி.*

## இரவு

மெல்லிய காற்று
சில்லென்ற குளிர்
அழகிய நிலவு
அமைதியான வானம்
வெண் மேகக் கூட்டங்கள்
மினுங்கும் நட்சத்திரம்
பசுமையான நினைவுகள்
இதமான ஓசைகள்
இனிமையான ரீங்காரம்
இனிய இரவில்
இவையெல்லாம் ஒளியில்
என் மனம் மட்டும்
இருளில்!

*ரகுபாரதி, கம்பர்மலை.*

## ஒருநாள் பொழுது

அந்தியும் சற்று
மங்கிய நேரம்
குத்துவிளக்கு - மட்டும்
குசினிக்குள் - எரிகிறது

அடுக்களைப் பக்கமாக
அடுப்புமூட்டி - உலைவைத்து
பற்றாத - கொள்ளியோடு
முட்டிக்கொள்கிறாள்....
அன்னை.



கூலித்தொழில்செய்து
கொண்டுவந்த,
கொத்தரிசியில்
மீதம் - பிடியென்று
முணுமுணுக்கும்
கணவரங்கே!

வேளைக்குக் கூழ் குடிக்க
காத்திருக்கும் - பிள்ளைகளோ
கொட்டாவி விட்டபடி.
அன்னையை,
வட்டமிட்டிருக்கிறார்கள்.

வாய் கொண்டு
அடுப்பூதி
இருமலொன்று வந்துவிட
ஓலைக் கினாட்டு தேடி
ஓடுகிறாள் - ஓர்பிள்ளை.

இத்தனையும்
ஆனபிறகுதான்
கூழ்குடித்து உறங்குவார்கள்
ஒருவேளை மட்டுமல்ல!
ஒவ்வொரு நாளும்!

*செயின்தம்பி ஸியாம், கல்முனை – 06.*

## சிந்தனை!

சோதனையைக்கண்டு
சோர்ந்துவிடாதே!
சாறாய் பிழிந்துவிடு
சாதனைபடைத்துவிடு!
துன்பங்களை
துரத்திவிடு!
சந்தோஷங்களை
சந்திப்பாய்!
பெற்ற பரிசுக்காய் - மனதில்
பெருமை பட்டுக்கொள்!
மானம் காத்துவா
மானிடம் காப்பாய்!

*மஹீஸா, புத்தளம்.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

"நான் விரும்புகிறேன், தனது சொந்தக் கால்களில் நிமிர்ந்து நிற்க வேண்டும். என் சொற்கள்/ கவிஞன் என்றழைக்கப்படுவதை நான் விரும்பவில்லை. என் வாழ்வின் கடைசி நாள்வரை என் தோழர்களோடு தோளோடு தோள் சேர்ந்து/ நடக்கவே விரும்புகிறேன்."

என்று கூறும் சுபாஷ் முக்யோபாத்யாய் மேற்கு வங்கத்தின் பிரபல மக்கள் கவிஞர். தொழிலாளர்களுக்கு ஆதரவான போராட்டங்களில் தம்மை இணைத்துக்கொண்டு சிறை சென்றவர்; ஆசிரிய வாழ்க்கையைத் தியாகம் செய்தவர்.

இந்தியாவின் சாகித்திய அக்கடமி, ஞானபீட விருதுகளைப் பெற்றவர். அனைத்துலக அளவிலும் பல்வேறு விருதுகளைப் பெற்றவர்.

வங்கக் கவிஞர் சுபாஷ் முக்யோபாத்யாய் அவர்களின் நான்கு கவிதைகள் - தமிழாக்கியிருப்பவர். பிரபல தமிழ்க் கவிஞர்களுள் ஒருவரான இன்குலாப்.

### தயவுசெய்து வழிவிடுங்கள்!

மூச்சு முட்டுவது போல உணர்கிறேன்
தயவுசெய்து கொஞ்சம் வழிவிடுங்கள்
என்னை வெளியே போக விடுங்கள்.

எங்கே நான் போகவேண்டும்
ஒவ்வொரு காடும் எரிகிறது
மூச்சுவிடப் புதிய காற்றில்லை.

இரவும் பகலுமாய்
தனது குத்துவாளை வீசியபடி
பயங்கரமான கொலைக்களம் ஒன்று
தலைக்கு மேலாகச் சுழித்துக் கொண்டிருக்கிறது.

இங்கே
ஒரு கல் சுவரில் மோதி
நம் முதுகுகளைச் சிராய்த்துக் கொண்டிருக்கிறோம்.
வெறி பிடித்தவர்களாகக்
கூர்மையான நகங்களால்
சொந்த மனிதர்களின் தசையைப் பிய்த்தெறிகிறோம்
பகலும் இரவும்
இரவும் பகலும்.

* * *

### ஓ! இறைவா!

கிருஷ்ணா,
நிறுத்து உனது தேரை
நீ எனக்குக் கற்பித்த போதனைகள்
காலம் கடந்ததாகிவிட்டன.

இந்தக் குருக்ஷேத்திர நரகத்திலிருந்து
என் கால்களைத் தரையில் ஊன்ற விரும்புகிறேன்
பேராசை, குருதி சிந்துதல், போர்
எல்லாம் ஒரு முடிவுக்கு வரட்டும்
உனது அருட்கைகளைப் பிடித்தபடி,
ஓ இறைவா,
ஒற்றுமை, அமைதி,
அன்பு, மீட்சி
எல்லாம் இவ்வுலகுக்குத் திரும்பி வரட்டும்
இந்தப் புனித நாளில்
துள்ளியாடும் காதல் தெய்வத்தின் புகலிடமான
பிருந்தாவனம்
குருக்ஷேத்திரத்திற்குப்
புதிதாய்ப் பிறந்து திரும்பி வரட்டும்
கிருஷ்ணா
நிறுத்து உனது தேரை
நீ
எனக்குக் கற்பித்த போதனைகள்
காலம் கடந்ததாகிவிட்டன.
தாமரைக் கண்ணா
முன்னோக்கிப் பார்
புதுப்பாதை ஒன்று திறந்திருக்கிறது.
உனது போர்க்களச் சங்கை வீசி எறி
உனது புல்லாங்குழலை ஊது.
மனம் கவரும் உன் பழைய புன்னகையோடு,
உன் முகம் சுடர் வீச
நமது வாழ்க்கை நிறைவு பெறட்டும்.

### என்னைத் தனியே விடு!

எனது வலது காது கிட்டத்தட்டச்
செவிடாகிவிட்டது
இடது காது பரவாயில்லை.
ஆக எனது அக்கம் பக்கத்தார்
பேசுவதை
என்னால் கேட்க முடியும்.

"நீ மாறிவிட்ட மனிதன்
என்ன வெட்கக்கேடு
கடந்த காலத்தில் உனது குரல்
இடியாக முழங்கியது
இப்பொழுது கீச்சிடுகிறது
விருதுகள் உன்னைத் தலைகனக்கச்
செய்துவிட்டன
நீ ஒரு கட்சி மாறி
ஒரு காலத்தில் முற்போக்காளன்
இப்போது பிற்போக்குவாதி.

"உனது நெருப்பின் பொறிகள் எங்கே?
நீ மலர்களைக் கொஞ்ச
ஆரம்பித்துவிட்டாய்
ஊர்வலங்களைத் தவிர்த்து
விழாக்களில் களிக்கிறாய்
நடப்பது நல்லதாக இருந்தாலும்
நீ அப்பால் செல்....

தயவு செய்து
என்னைத் தனியே விடு;
செல்.
அப்பால் செல்
ஆமாம்!"



### சும்மா மூக்கை நுழைப்பவர்கள்


இது நிச்சயம்
சதுரங்கம் விளையாட உட்காரும்போது
பிறத்தியார் அலுவல்களில் தலையிடுபவர்கள்
தங்கள் பணிகளை விடுத்துச்
சூழ்ந்து கொள்வார்கள் என்னை....
ஒவ்வொரு நகர்வுக்கும்
ஆணை வழங்குவார்கள்.

நான் என்ன செய்ய வேண்டும்
எனக்குத் துடிக்கிறது
கைகளை மடக்கியபடி
அவர்களிடம் செல்ல வேண்டுமோ?

"பெரிய மனிதர்களே!
இதை அமைதியாய்ப் பாருங்கள்
இல்லையேல்
உங்கள் சொந்த இடங்களுக்குத்
திரும்பப் போங்கள்.

அடப் பாவிகளே!
என் விளையாட்டை
என்னை ஆட விடுங்கள்."

## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி




பெயர் : என்.எம். புகாரி
வயது : 17
முகவரி : வட்டாரம்– 05,
தி/தோப்பூர்.
பொழுதுபோக்கு: கணினி



பெயர் :
ரி.எம்.சல்மான்
வயது : 18
முகவரி :
வட்டாரம்– 06, தி/
தோப்பூர்
பொழுதுபோக்கு :
பேனா நட்பு.



பெயர் : W. பிரிச்சட்
நிர்மலா
வயது : 21
முகவரி : இல. 51,
கணேசபுரம்,
திருகோணமலை.
பொழுதுபோக்கு :
பத்திரிகை, ரி.வி.



பெயர் :
S. Selvakumar.
வயது : --
முகவரி : P.o.Box
60567,Al-Khor, I.C.C,
Doha, Qater.
பொழுதுபோக்கு : கிரிக்கெட்
விளையாடுதல், ரி.வி

# தாய்ப்பால் கொடுப்பது எப்படி?

குழந்தைக்குப் பால் கொடுப்பது ஒன்றும் நீங்கள் நினைக்கிற மாதிரி சாதாரண விஷயம் இல்லை.

ஒரு குழந்தைக்கு பால் கொடுக்க வேண்டுமானால் அதற்கு தாயானவள் எப்போது தயாராக வேண்டும் தெரியுமா?

கர்ப்பம் சுமக்கும் ஆறாவது மாதத்தில் இருந்தே ஒரு தாய் இதற்குத் தயாராகிக்கொள்ள வேண்டும்.


அப்போதிருந்தே குளிக்கும்போது மார்பகங்களை நன்கு கழுவி, குளித்த பிறகு மென்மையான துவாலையால் நன்கு துடைத்துச் சுத்தம் செய்ய வேண்டும்.

இதன் பிறகு சில சிறு பயிற்சி களையும் கையாள வேண்டும்.

மார்பக முன்பக்க கறுப்புப் பகுதியை இலேசாக உள்பக்கமாக அழுத்திப் பழக வேண்டும்.

இதனால் மார்பகம் மென்மைத் தன்மை பெற்று குழந்தை உறிஞ்சு வதற்கு ஏதுவாகும். இது தவிர மார்புக் காம்புகளுக்கு அவ்வப்போது தேங்காய் எண்ணெய் தடவி வருவதன் மூலம் அது குழந்தைக்குப் பால் கொடுக்கும் பக்குவத்தை முழுமையாக அடை கிறது.

இதன்பிறகு பிரசவத்தைச் சந்திக்கும் நீங்கள் சுகப்பிரசவம் என்றால் குழந்தை பிறந்த ஒரு மணி நேரத்துக்குள்ளும், சிசேரியன் பிரசவம்



என்றால் 2 – 3 மணி நேரத்துக்குள்ளும் குழந்தைக்குப் பால் கொடுக்க வேண்டும்.

பொதுவில் குழந்தைக்கு எவ் வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் பால் கொடுப்பது நல்லது.

குழந்தைக்குப் பால் ஊட்டும்போது தாயானவள் அவசரப்படக் கூடாது. அமைதியான மன நிலையுடன் ஆற, அமர பால் ஊட்ட வேண்டும். பால் சுரக்கும் தன்மையில் மனஓட்டத்துக்கும் முக்கிய பங்கு உண்டு என்பதைக் கவனிக்க.

இரு மார்பகங்களிலும் மாற்றி மாற்றிப் பால் கொடுக்க வேண்டும். பால் கொடுக்கும் போது குழந்தையை மிகவும் அழுத்திப் பிடிக்காமல் இதமாக அணைத்திருக்க வேண்டும்.

பால் குடித்து முடித்ததும் சற்று நேரம் குழந்தையைத் தோளில் சாய்ந்த நிலையில் வைத்து பின்னரே படுக்கை யில் கிடத்த வேண்டும்.

குழந்தைக்குப் பால் கொடுத்து முடித்ததும் மார்பகத்தை நன்கு சோப்பு போட்டுக் கழுவி துவாலையால் துடைக்க வேண்டும்.

பின்னர் சிறிது தேங்காய் எண்ணெய் இட்டுக்கொள்வது நல்லது.

# நலமாக வாழ்வோம்

## அர்த்தகட்டி சக்ராசனம்

**பலன்கள்**

**1. முதுகெலும்பிற்கு நல்ல பக்கவாட்ட வளைவைத் தருகிறது.**

**2. கல்லீரல், உணவுப்பை ஆகியவற்றைப் பலப்படுத்து கிறது.**

**3. பக்கவாட்டில் தோன்றும் ஊழல் தசைகளை கரைத்து இடுப்பு அழகு பெற உதவு கிறது.**

**4. இடுப்பு வலியைப் போக்கு கிறது.**

**செய்முறை**

**1. விரிப்பின் மீது கால்களை ஒன்று சேர்த்து நிற்கவும்.**

**2. வலது கையைப் பக்க வாட்டில் உயர்த்தி, உள்ளங் கையை மேல் நோக் கித் திருப்பி கையை மடிக்காமல் உயர்த்தி வலது காதுக்குப் பக்கத்தில் ஒட்டியது போன்று நிறுத்தவும்.**

**3. அப்படியே இடது பக்க வாட்டில் வளைந்து படத்தில் உள்ளபடி 15 எண்ணிக்கை இருக்கவும். சாதாரண மூச்சு, நேராகப் பார்க்கவும்.**

**4. மெதுவாக நிமிர்ந்து நிற்கவும். கையைப் பிரித்து சாதாரண நிலைக்கு வரவும்.**

**5. இதுபோல் மாற்று ஆசன மாக இடது கையை உயர்த்தி செய்யவும்.**

**6. வலது, இடது என மூன்று முறை செய்தால் போ**



**தும்.**

**குறிப்புகள்**

**1. பயிற்சியின் போது முன்னால் அல்லது பின்னால் வளையக் கூடாது. பக்க வாட்டில் மட்டுமே வளைந்து செய்ய வேண்டும்.**

**2. மூச்சை அடக்குவதோ, கையை மடிப்பதோ கூடாது.**

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது : ஷோபா*

## *மாங்காய் பச்சடி*

***தேவையான பொருட்கள்:***

| | |
|---|---|
| முற்றிய மாங்காய்த் துண்டுகள் | – 10 (பெரிதாக நறுக்கியது) |
| வெல்லம் | – 50 கிராம் |
| பச்சை மிளகாய் – (நீளவாக்கில் நறுக்கியது) | – 4 |
| மஞ்சள் பொடி | – 1 சிட்டிகை |
| உப்பு | – தேவையான அளவு |
| நெய் | – 2 ஸ்பூன் |
| கடுகு | – சிறிது |
| வரமிளகாய் | – 1 |
| கறிவேப்பிலை | – 10 |

**செய்முறை**

**மாங்காயை அலம்பிப் பெரிய துண்டுகளாக நறுக்கவும். சதை யோடு கொட்டைப் பகுதியையும் போடலாம். அடி கனமான பாத்திரத் தில் காய்களைப் போட்டு, முங்கும் வரையில் நீர் விட்டு வேக வைக்கவும். வெல்லம், ப. மிளகாய், உப்பு சேர்த்து நன்று கொதிக்கவிட்டு சேர்ந்து வரும் போது இறக்கவும். நெய்யில் கடுகு, வரமிளகாய், கறிவேப்பிலை, போட்டுத் தாளித்துக் கொட்டவும். தேன் போல் இனிப்பும், புளிப்பும் காரமும் சேர்ந்த பச்சடி, பருப்பு சாதத்திற்கு நல்ல மேட்ச், சிரார்த்த தினங்களுக்கு ஏற்றது.**

# லேடிஸ் ஸ்பெஷல்

## மாத்திரைகளைச் சாப்பிடும் போது....!

மருந்துகளைப் பயன்படுத்துவதில் இன்னும் திறமையுடன் செயற்படுவது எப்படி?

தேவையின்றி நிறைய மருந்துகள் நோயாளிகளுக்குத் தரப்படுகின்றன. நோயாளிகள் தாங்களே மருந்துகளைத் தேர்வு செய்து சாப்பிடுகிறார்கள். விலை மலிவான மருந்துகளே போதும் என்ற நிலையிருந்தாலும் விலை அதிகமான மருந்துகளே குறித்துக் கொடுக்கப் படுகின்றன. "தேவையில்லாமல் அதிக மருந்துகளைக் கொடுத்தால், பக்க விளைவுகள் அதிகரிக்கும். செலவும் அதிகமாகும் தேவையான மருந்துகளை மட்டுமே டாக்டர்கள் குறித்துக் கொடுக்க வேண்டும்."

நோயாளிகளின் மனநிலை பலவித மாகச் செயற்படுகிறது. சிலர் தேவையே இல்லாமல் சில மருந்து களைச் சாப்பிடுகிறார்கள். ஒரு நோயாளி விரும்பும் மருந்தை டாக்டர் எழுதித்தர வில்லை என்றால், இன்னொரு டாக்டரிடம் ஓடுகிறார். அவர் நோயாளி விரும்பும் மருந்தை எழுதித் தருகிறார். ஆக, முதல் டாக்டர் ஒரு நோயாளியை இழந்து விடுகிறார்.


இதனால், நோயாளி விரும்பும் மருந்தை எழுதித் தருவதையே வழக்கமாகக் கொள்ளும் டாக்டர்கள் பெருகி வருகிறார்கள். அந்த மருந்தி னால் நோயாளிக்குப் பேராபத்து விளையாமல் இருந்தால்போதும; எழுதிக் கொடுத்து விடுகிறார்கள்.

'இந்த இஞ்ஜெக்ஷன் போடுங்கள். அந்த மாத்திரையைக் கொடுங்கள்' என்றெல்லாம் நச்சரிக்கிறவர்களும் உண்டு. ஒரு டாக்டரிடம், தனக்குத் தெரிந்த மருந்து பற்றி நோயாளி சொல்வதில் தவறில்லை. ஆனால், அதைத்தான் தந்ததாக வேண்டும் என்று வலியுறுத்தக் கூடாது. நோயாளியின் நச்சரிப்புத் தாங்காமல் டாக்டர் ஒரு மருந்தை எழுதித் தந்தால் – அவஸ்தைப்படப்போகிறவர் டாக்டர் அல்ல; நோயாளி தான்.

சில நாடுகளில், மருத்துவமனைப் படுக்கைகளில் சுமார் 30சத வீதத்தை ஆக்கிரமித்திருப்பவர்கள் நோயாளிகள் அல்ல; தேவையற்ற மருந்துகளை உட்கொண்டதால் ஏற்பட்ட பக்க விளைவுகளால் பாதிக்கப்பட்ட வர்கள்தான்.

டாக்டர் குறித்துக் கொடுத்த மருந்தைச் சாப்பிடாமல் புறக்கணிப்பது அல்லது அவர் குறித்துத் தந்த முறையில் சாப்பிட மறுப்பது – இந்தப் பழக்கமும் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. கொஞ்சம் உடம்பு நன்றாக இருந்தால் போதும் – டாக்டருக்குத் தெரியாமல் மருந்து களைத் தூக்கி எறிந்துவிடுகிறார் நோயாளி. 'உடம்பு தேவலை' என்று உணர்ந் தாலும்கூட டாக்டர் குறித்த நாள் வரை மருந்து சாப்பிடுவதைக் கைவிட்டு விடக்கூடாது.

நோயை அடியோடு ஒழிக்கும் ஆயுதமே மருந்துகள். அவற்றை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று தெரிந்தவர் டாக்டர். எனவே, அவர் சொற்படி



மருந்தைப் பயன்படுத்த வேண்டியது நோயாளியின் கடமை.

***நோயாளிகள் தாங்களே மருந்தைத் தேர்ந்தெடுத்துச் சாப்பிடுவது***

டாக்டரின் சீட்டு இல்லாமலேயே நிறைய மருந்துகள் கிடைப்பதால், இஷ்டத்திற்குச் சுய வைத்தியம் பார்த்துக்கொள்கிறவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகிறது. 'சாதாரண மருந்துடன் சுயமருத்துவத்தை நிறுத்திக் கொள்வது நல்லது. ஆன்டிப யாடிக் மருந்துகளில், மூளையைப் பாதிக்கும் மருந்துகளில் ஒருபோதும் சுயமருத்துவம் கூடாது. ஆபத்தில் முடிந்துவிடும். பலரும் சர்வசாதார ணமாகப் பயன்படுத்தும் 'பரசிட்ட மோல்'கூட தவறாகப் பயன்படுத் தப்பட்டால், ஈரலைச் சிதைத்துவிடும்.

எனவே, 'சாதாரண மாத்திரைதானே! என்ன செய்துவிடப் போகிறது?' என்றெல்லாம் அலட்சியம் வேண்டாம். டாக்டரின் ஆலோசனைப்படி மருந்து சாப்பிடுவதுதான் நல்லது.

# ஆண்கள் ஏன் மயங்குகிறார்கள்?

எப்பேர்ப்பட்ட ஆண்களாக இருந்தாலும் பெண்ணைப் பார்த்த மாத்திரத்தில் படக்கென மயங்கி விடுகிறார்கள்.

எதனால் இப்படி?

பெண்களின் குரலிலா? அல்லது அழகிலா?

ஊஹும்...: பெண்களின் மேனியில் உள்ள ஒரு வித வாசனையைக் கண்டு...! என்று கண்டுபிடித்திருக்கிறது ஒரு விஞ்ஞான ஆராய்ச்சி!

வியன்னா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ராபர்ட், ஜஸ்டின் ஆகியோர் ரொம்ப நாளாக ஆராய்ச்சி செய்து இந்த விஷயத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அழகிய பெண்களின் போட்டோ, அவர்களது குரல் வளம், அவர்கள் மேனியில் உள்ள வாசனை எனப் பல வழிகளில் இளைஞர்களைச் சந்தித்து ஆய்வு செய்தபோது பெண்களின் மேனியில் உள்ள ஒரு வித வாசனை யில்தான் ஆண்கள் சொக்கிப் போவது தெரிய வந்துள்ளது.

பெண்களின் உடம்பில் உருவாகும் பீமெல் பெரோமோன் என்ற திரவம்தான்



ஆண்களைப் போட்டு அப்படி அமுக்கி விடுகிறது.

இந்த வாசனையானது ஆண் களைக் கிளர்ச்சியடையச் செய்வ துடன் காதுகளுக்கு அதிகமாக கேட்கும் சக்தியையும் கண்களுக்கு தீவிரமாகப் பார்க்கும் சக்தியையும் கொடுக்கிறதாம்!

கருத்தடை மாத்திரை சாப்பிடும் பெண்களுக்கு இந்தத் திரவம் சுரக்காது என்பதையும் கண்டுபிடித்திருக்கிறார் கள்.

பெரோமோன் திரவம் சுரக்காத பட்டணத்து அழகியை விட பெரோமோன் திரவம் அதிக அளவில் சுரக்கிற பட்டிக்காட்டுக்காரி ஆண் களை அசத்திவிடுவாளாம்!

ஆராய்ச்சி சொல்கிறது.

# விளக்கு ஏற்ற ஐதீகம்

★ இல்லந்தோறும் குத்துவிளக்கு வைத்து அதில் எண்ணெய் ஊற்றி விளக்கு



ஏற்றுவது குடும்ப சுபிட்சம் ஏற்படுத்துவது ஆகும்.

★ குத்துவிளக்கில் கிழக்குப் பக்கமாக திரி எரிவது துன்பத்தை விலக்கும். குடும்பம் சந்தோஷமாகக் காணப்படும்.

★ குத்துவிளக்கை தெற்கு முகமாக எந்தக் காரணத்தைக் கொண்டும் எரிய விடக் கூடாது. அப்படி எரியவிட்டால் பீடை ஏற்படும்.

★ வடக்கு முகமாக எரியவிடலாம். செல்வம், பொருள் சேரும்.

★ ஒரே ஒரு முகத்தை உடைய அகல் விளக்கு அவ்வளவு சிறப்பு தராது. 5 முக விளக்கே சிறப்பு.

★ மங்கல நாட்களில் 5 முகங்களிலும் திரி ஏற்றி வழிபடுங்கள். துர் தேவதைகள் விலகும்.

★ மூன்று முக விளக்கு ஏற்றி வந்தால் புத்திர பாக்கியம் கிட்டும்.

★ பொதுவாக காலை, மாலை இரு வேளைகளிலும் விளக்கு ஏற்ற வேண்டும்.

★ விளக்கு ஏற்றியபின் அமைதியான சூழ்நிலையில் சில நிமிடங்கள் மவுனமாக விளக்கின் முன் அமர்ந்து பிரார்த்தனை செய்து வாருங்கள். நினைத்தது பலிக்கும்.

## அங்கம் 12



# துரோகம் துரத்துகிறது!

எழுதுவது
**புஷ்பா தங்கதுரை**

வீட்டில் எங்கேயோ சரக்கு வைத்திருப்பான்.வாசனை வீசியது. போட்டோவில் பெண்டாட்டி ராக்குடி ஜடவில்லை தரித்துக் கொண்டு மூஞ்சியை ஒரே உக்கிரமாக வைத்துக்கொண்டிருந்தாள்.

போட்டோவைத் தொட்டாலே சீறி விழுவாள். பூவலிங்கம் சமாளித்திருக்கிறான். பிரசவத்துக்கும் அனுப்பிவிட்டான்.

ஓலைக் கூரைக்குக் கீழே பச்சைமண் தரையில் இருந்துகொண்டு ஒரு பாமர உபசரிப்பில் ஆழ்ந்ததில் எல்லாம் குளுகுளுப்பாக இருந்தது.

மத்தியானம் ஒரு மணிக்குள் அவர்கள் சிநேகத்திற்கு இரண்டு வேர் தோன்றி மேலே இரண்டு இலை முளைத்துவிட்டது.

மணி மூன்றுவரை இவனை நம்பலாமா, கூடாதா என்று மனம் அலுத்துக் கொண்டிருந்தது.

பிறகு வாழ்க்கையில் யாரையாவது நம்பத்தான் வேண்டும் என்ற ஒரு சித்தாந்தம் அவனை ஆட்கொள்ள,

- பூவலிங்கம்! உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும், என்று தயங்கியவாறு ஆரம்பித்தான்.

- சொல்லுங்க! என்று குழையாகக் குழைந்து உட்கார்ந்தான் பூவலிங்கம்.

யோசனையோடேயே குரு ஆரம்பித்தான். மெள்ளச் சுருக்கமாகத் தனக்கு நேர்ந்துள்ள விசித்திரக் கஷ்டத்தைக் கூற,

பூவலிங்கம் ஆன்னு கேட்டுக் கொண்டிருக்க,

- நீங்கதான் உதவி செய்யணும், பூவலிங்கம்! போலீஸ்லே போயி நான் சூரியகுமார் இல்லை. அவன் இன்னொருத்தன். இரண்டு பேருக்கும் உருவம் ஒத்துமையாயிருக்கு! அதை வச்சு எனக்குத் தொந்தரவு கொடுக்கிறாங்கன்னு சொன்னாப் போதும்.

- அவ்ளதானே! என்று வேகத்தோடு எழுந்தான் பூவலிங்கம். பட்டை போட்டதுபோல் ஓர் அசட்டுத்தனமான வீரம் எகிறி வந்தது.

- நீங்க சூரியகுமார் இல்லே! அதைத்தானே சொல்லணும்? சொல்லி நிரூபிச்சு ஏ, பொட்டப் பசங்களான்னு சொல்லிட்டு வரேன். (மூன்றெழுத்து) எவண்டாவன் கேஸ் புடிக்கிறான் (மூன்றெழுத்து) மண்டேலே மசாலா இருக்காடா? (அதே ரீதியில் கீழ்ப்பகுதிக்கு ஒரு வாக்கியத்தைக் கூறினான்)

சுவர்க் காலண்டரிலிருந்த வள்ளுவருக்கு உயிர் இருந்தால் அவன் தமிழ்களைக் கேட்டு லெமூரியாவுக்கு ஓடியிருப்பார்.

விளாசித் தள்ளினான்.

- நீங்க இங்கேயே குந்திக்கிட்டிருங்க! நா வேலங்கரைக்குப் போய் அவங்க கண்ணிலே விரலை ஆட்டிட்டு வர்றேன். நாளைக்கு இன்ஸ்பெக்டர், டி.எஸ்.பி., ஐ.ஜி. எல்லாம் ஒங்கிட்டே வந்து மன்னிப்புக் கேட்பான், பாரு! முன் கதவை ரெண்டையும் சாத்திட்டுப் போறேன். யாரேனும் பார்த்துடப் போறானுங்க.

என்று சொல்லி, கதவு இரண்டையும் சாத்திக்கொண்டு, வாசலிலெல்லாம் திட்டிக்கொண்டே வேலங்கரைக்குப் புறப்பட்டுப் போனான். பத்துமைல் தூரந்தான்! சாயங்காலத்திற்குள் திரும்ப வேண்டும்.

அவன் சொன்னதென்னவோ குருவுக்குத் தைரியமாக இருந்தது. அந்தப் புளிக்கும் வார்த்தைகளை மைனஸ் பண்ணினால் இன்னும் தைரியம் கூடியிருக்கும்! ஆனால் அவற்றை அவனது பாமரத்தனத்திற்கு லைசென்ஸாக வைத்துக் கொண்டான்.

இருட்டும்போது குருவின் தலைக்குள் ஒரு சிவப்பு விளக்கு எரிந்தது.

காரணமில்லாமல் ஒரு பரபரப்பு!

எங்கேயோ அகப்பட்டதுபோல் ஒரு நினைப்பு!

யாரையோ நம்பினோமோ என்று பிரமிப்பு!

மண் வீட்டுக்குள் ஒரு மணி முன்னதாக இருட்டு வந்தது.

எலிகள் பந்தயம் போட்டுக்கொண்டு கண்ணாமூச்சி ஆடின.


பூவலிங்கம் போன சூட்டோடு திரும்பி இருந்தால், இதற்குள் மாமாங்கம் ஆகியிருக்கும்.

அவன் வராதது கவலைப்படுத்தியது.

முதல் கதவைத் திறந்து வாசல் கதவுக்கு வந்தான்.

கதவை இழுத்தபோது வெளியில் பூட்டியிருந்தது!

சுள்ளென்று ஓர் அசாத்திய வெம்மை கால் நுனியிலிருந்து தலை வரை பாய்ந்து அங்கே ஒரு ஸ்டவ்வைப் பற்ற வைத்தது.



பூட்டியது, பாமரத்தனமா, படுகாலித்தனமா?

'சுறுசுறு' என்று யோசித்தான்.

பூவலிங்கம் முன் அவனே பாமரனாகிவிட்டது தெரிந்தது.

பூவலிங்கம் பாஷையிலே அதே இன்டொனேஷனுடன் அந்த மூன்றெழுத்தைச் சொல்லித் திட்டினான்.

அகப்பட்ட எலிபோல் அங்குமிங்கும் ஒரு விடுதலை வழியைத் தேடினான்.

கூரைகள் உயரமாக இருந்தன. வாசலும் புழக்கடையும் ஒரே கதவு வழிதான். ஒன்-வே வீடு.

பூவலிங்கத்தின் சம்சாரம் முறைத்துக் கொண்டிருக்க, கல்யாணப் பானைகளையும், உலைப் பானைகளையும் அவள் முன்பாக ஒவ்வொன்றாக எடுத்து வந்து அடுக்கி வைத்தான்.

பானை உடையாமலிருந்தால் ஏறலாம்.

முறைகெட்டு ஏறியதால் ஒரு பானை உடைந்தது. பிறகு 'புத்தி புத்தி' என்று சொல்லி ஜாக்கிரதையாக ஏறினான். கூரை கையில் அகப்பட்டது.

பனை ஓலையைக் கேவலமாக நினைக்கப்போய் அவை ஒற்றுமையுடன் யானை பலம் காட்டிக் கொண்டிருந்தன.

பூவலிங்கம் சம்சாரத்திடம் - ஸாரி, என்று சொல்லி விட்டு அவளுடைய அரிவாள் மனையை எடுத்து வந்தான்.

கூரையின் நார்களை அறுத்து, ஓலைகளை நகர்த்தி, அ. மனையைக் கடாசி, வீட்டுக்கு ஓங்கி ஒரு 'டா டா' சொல்லி, கூரை ஓட்டை வழியாக வெளியே குதித்தான்.

லேட்டாக எழுந்த கிராமம், சீக்கிரமாகவும் உறங்கத் தொடங்கியது.

அந்தக் கிராம வீடு ஒவ்வொன்றுக்கும் ஐம்பது பல்புகள் போட்டாலே பாதிக்கோவணம் கட்டிய மாதிரி.

இரண்டு பதினைந்து வாட்டுகள் என்ன செய்யும்? உழவு மாடுகளைப்போல் நோஞ்சானாக வேலை செய்து, உள்ளே இருப்பவர்களை நடமாடும் பிசாசுகளாகப் பாதி இருட்டடித்துக் காண்பித்தது.

வீடுகள் இப்படி இருக்கும்போது, தெருக்களோ? பஞ்சாயத்து வாழ்க! கம்பங்கள் எரியவில்லை!

அக்கறையாக நடந்து, இருட்டுக் கத்தரிப்புகளாகத் தோன்றும் நாய்களைப் புறக்கணித்து, ஊரைக் கடந்ததும் நடையைக் கூட்டி, கழனி வெளிகளில் குறுக்கே பாய்ந்து, சாலைக்குப் பக்கமாக, ஆனால் அதைப் பார்க்கும்படி வாகாகப் பதுக்கலில் அமர்ந்து கொண்டான்.

நினைத்தது வீணாகவில்லை.

அந்தப் பிரதேசத்தில் பால்போல் ஒளியைப் பீச்சிக்கொண்டு போலீஸ் ஜீப் வேகமாக வந்தது.

ராத்திரிப் பூச்சிகள் அதை நோக்கிப் படுவேகமாக முட்டிக்கொண்டன.

கழனிக்குள்ளே நீளும் ரஸ்தா ஆதலால் ஆயிரம் திருப்பங்களைத் திருப்பிக் கொண்டு, சில சமயம் வந்த வழிக்கே திரும்புகிற பாவனையை ஏற்படுத்திக்கொண்டு,

ஜீப் அவன் முன்னால் இருக்கும் சதுப்பு நிலத்திற்கு வர,

பின் பக்க டயர் இரண்டும் ஸ்வைன்ன் என்று விஷ்ணுச் சக்கரம் சுற்றத் தொடங்கின.

சதுப்பு நிலத் துண்டுகள் மானாவாரியாக இரைத்துக்கொண்டு ஓடின.

துத்தேறி என்று டிரைவர் இறங்கினார்.

ஏழெட்டு போலீஸ் நிழல்கள் துப்பாக்கி நிழல்களுடன் இறங்கின.

- ஏம்பா! இந்நேரம் வரை அவன் இருக்கப் போறானா? வீட்டைப் பூட்டி வச்சிருக்கேன்னியே பூட்டி! என்றது ஒரு நிழல்.

- நீங்க ஜீப் கிடைக்கிற வரைக்கும் வரமாட்டேன்னீங்க! ஒரு டாக்ஸியைப் புடிச்சி முன்னாலேயே வந்திருக்கலாமில்லே! இம்.... இம்...... நாலுபேர் என்னோட ஜல்தியா வாங்க. ஊர் இதா இந்தாத்தான்!

இது பாமரனின் குரல்!

எல்லோருமே இறங்கிப் போக, அந்த டிரைவர், வண்டியைக் கிளப்பும் வசங்களைப் பற்றித் தீவிரமாக ஆராய்ந்துகொண்டிருந்தார்.

ஆற்றுப் படுகை முழுதும் வெள்ளி மணல்! மருந்துக்குத் தண்ணீர் கிடையாது.


அதன் கரையில் ஏகாந்தமாக இருந்த சின்னக் காரைக் கட்டடத்துள் அவன் அடுத்த பகற்பொழுதைக் கழித்தான்.

கட்டடம் ஓர் ஐம்பது வருடத்திய சமாதி. ஆறடிக்கு ஏழாக அறை போல் தோற்றம். அதன் நடுவில் இருந்த லிங்கம் எடுபட்டு, அந்த இடம் புண்ணாக இருக்க, அதைச் சுற்றிவர ஆட்டாம் புழுக்கைகள் சிதறிக் கிடந்தன. லிங்கம் அயல்நாடு போயிருக்கலாம்.

**(துரோகம் துரத்தும்......)**

# நிறவெறி

**பூ**ஜாபட் தனசூ ரோக்(Rog) படத்தில் நடிக்க வைப்பதற்காய் சமீபத்தில் புதுமுக வேட்டை நடத்தினார். ஏகப்பட்ட மாடல்களைக் குவித்து வைத்துப் பொறுக்கியதில் ஒரு அழகி தேறினார். அவர் பெயர் லீன் ஹாமன். அந்தப் பெண்ணின் போட்டோவை ஒரு மேகஸின் அட்டைப்படத்தில் பார்த்து அவர்தான் படத்தின் நாயகி என நேர்முகத்திற்கும் அழைத்துவிட்டார். தென் ஆபிரிக்காவில்




கேப்டவுனில் வசிக்கும் இந்த லீன் ஹாமன் ஒரு கறுப்பு இன மாடல் அழகி. அது மும்பைக்கு வந்த பிறகே பூஜாபட்டிற்குத் தெரிந்ததாம். இந்த ஒரே காரணத்திற்காக தனது படத்தில் அவரை நாயகியாக நடிக்க வைக்காமல் ரிஜெக்ட் செய்துவிட்டார் பூஜா.




தென் ஆபிரிக்கா திரும்பிய லீன் ஹாமன் இந்தியாவில் கூட இப்படியா என வருத்தப்பட்டதோடு, பூஜாபட்டின் நிறவெறியை டி.வி. செய்தித்தாள் என எல்லா ஊடகங்களிலும் பரப்பிவிட்டார். இப்போது பூஜாபட்டின் நிறவெறியைப் பார்த்து அதிர்ந்து கொண்டிருக்கிறது தென் ஆபிரிக்காவும், பாலிவுட்டும்!


# எதிர்ப்பு



**பா**லிவுட்டில் சமீபத்தில் ஃபயரைக் கிளப்பியிருக்கும் ஹாட் குதிரை 'இஷா கோபிகர்'. தூங்கிக்கொண்டிருந்த இயக்கங்களை நந்திதா தாஸு க்குப் பிறகு தட்டியெழுப்பிவிட்ட இவர் பல தியேட்டர்களின் திரைகள் கிழிக்கப்படவும் காரணமாக இருந்திருக்கிறார். கேர்ள் ஃபிரண்ட் லெஸ்பியன் பற்றிப் பேசக்கூடிய படம் என்பதால் எதிர்ப்பு அலை பற்றிக்கொண்டிருக்கிறது. இஷா கோபிகர் மீதும் அந்தக் கோபக்கனல் திரும்பியிருந்தாலும், பாலிவுட் இப்போது அவரை சகல மரியாதைகளோடும் அணுகத்தொடங்கி இருக்கிறது. தமிழ் பீல்டுக்கு "என் சுவாசக்காற்றே" மூலமாக வந்து, ஒரு சில படங்களில் நடித்து, ஜெயிக்க முடியாமல் பாலிவுட்டிலேயே இருப்பிடம் தேடிக் காத்திருந்தவருக்கு இந்த எதிர்ப்பு அலை நிச்சயம் நல்லதொரு இடத்தைப் பிடித்துக்கொடுக்கும் என்கிறார்கள் பாலிவுட்வாசிகள்.

அந்தத் தோழிகளின் பெற்றோர்கள் ஒழுங்கீனமான குழப்பவாதிகள் போல் எனக்குத் தென்பட்டது. அவர்களின் செயற்பாடுகள் அனைத்தும் ஒரு கிளர்ச்சியை உண்டுபண்ணுவதுபோல் எனக்கு விளங்கியது. அவர்கள் இது விடயத்தில்

# 19 ஒரு பெண்ணின் வாழும் வரலாறு




## ஹிலாரி கிளிண்டன் எழுதுகிறார்

தெளிவில்லாதவர்களாக பொடுபோக்காக இருந்தார்கள். என்ன செய்ய- சிந்திக்கத் தெரியாத மனிதப்பிண்டங்கள் என்றுதான் அவர்களைக் கூற முடியும். அவ்வளவுதான் அவர்களுக்குள்ள சுய புத்தியும் சிந்தனையும். இன்னும் அவர்களை எனது வார்த்தையில் சொல்வதென்றால் அவர்கள் “கிணற்றுத்தவளைகள்” என்றே சொல்ல முடியும்.

டொக்டர் மார்டின் லூதர் கிங் அவர்களின் விஷேட சொற்பொழிவின் மூலம் நான் ஈர்க்கப்பட்டேன். அவருடைய அந்த பிரசித்தமான சொற்பொழிவின் தலைப்பு “ஒரு புரட்சியினூடாக எஞ்சியிருக்கும் எழுச்சி” என்பதாகும். அவருடைய பேச்சின் விளக்கங்கள், மற்றும் அதன் தெளிவுரைகளை நன்றாக அவதானித்த நான் - அதுவரை சமூக எழுச்சி என்றால் என்ன, அதன் தாத்பரியங்கள் என்றால் என்ன என்பதையெல்லாம் எந்தளவுக்கு தெரியாமல் இருந்துள்ளேன் என்பதையும்; டொக்டர் மார்டின் லூதர் கிங்கின் கருத்துக்கள் இந்த சமூகத்தில் பாரிய தாங்கங்களை உண்டுபண்ணி ஒரு சமூக எழுச்சிக்கான அடிநாதமாக இருக்கின்றதையு மிட்டு நான் மிக்க மகிழ்வுற்றேன். மேலும், உண்மையிலேயே டொக்டர் மார்டின் லூதர் கிங் அவர்களின் கருத்துக் களினூடாக அவர் பல்வேறு சவால்களை சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து, வித்தியாசமான கோணங்களில் எதிர்கொண்டு, தற்பொழுது- ஒரு உறுதியான, ஒன்று சேர்ந்த நாட்டிற்கான எல்லைப்பகுதியில் நாம் நின்று கொண்டிருந்தோம். அதாவது ஒரு “உறுதியான அமெரிக்காவாக” எமது நாடு அப்பொழுது வளர்ந்து கொண்டிருந்தது. டொக்டர் மார்டின் லூதர் கிங் இது விடயத்தில் கூடிய பங்களிப்பை செய்திருக்கிறார் என்பதுதான் எனது கருத்தாகும். அத்துடன் பழைய ஒழுங்கு முறையும் சிந்தனைப் போக்கும் தற்பொழுது ஒரு வகையில் வேகமாக மாற்றமடைந்து - புதிய ஒழுங்கு முறையும், சிந்தனைப் போக்கும் அமெரிக்காவில் எழுச்சி பெறுகிறது. இந்தப் புதிய உலக ஒழுங்கு முறையினை நாம் ஏற்றுக் கொண்டு, அதனூடே சர்வதேச சமூகத்தின் சகோதரர்களாக, சகோதரத்துவ வாஞ்சனையுடன் வாழ அமெரிக் காவினை இட்டுச் செல்ல வேண்டும். இல்லாவிட்டால் நாம் எல்லோரும் அழிந்து நாசமாகிப் போவோம் என்பதுவும் டொக்டர் மார்டின் லூதர் கிங்கின் சிந்தனைகளின் வெளிப்பாடுகளாகும். இதற்கு செயல்வடிவம் கொடுப்பதில்தான் அமெரிக்காவின் வெற்றி தங்கியுள்ளது என்பதை நான் அப்போதே புரிந்து கொண்டேன்.

எனது விழிகள் அப்போதே திறந்து கொண்டன. இருந்தபோதிலும், இற்றைவரைக்கும் நான் முழுமையாகக் கவரப்பட்டதும் ஆகர்ஷிக்கப்பட்டதும்-பிற்காலப் பகுதியிலான (Park Ridge's) பார்க் ரைட்டர்ஸின் சம்பிரதாய பூர்வமான அந்த பாண்டித்திய புத்திக் கூர்மையின் தன்மையினாலேயே.


அத்துடன், எனது தந்தையின் அரசியல் ஞானமும் எனக்கு நல்ல பல முற்போக்கு அரசியல் சிந்தனைகளுக்கு வழிசெய்தது; உத்வேகத்தை அளித்தது. அதேவேளையில் டொன் ஜொன்ஸ் ஒரு புறம் தாராளமயக் கொள்கை மற்றும் அதனுடைய அனுபவங்களை என்னுடன் பகிர்ந்து கொள்கின்ற அதே வேளை; போல் கார்ல்சன் சோவியத் ரஷ்யாவிலிருந்து அமெரிக்காவுக்கு அரசியல் அகதிகளாக துரத்தியடிக்கப்பட்ட அகதிகள் சிலரை எனக்கு அறிமுகப்படுத்தி,




அவர்களுடைய அனுபவங்கள் மற்றும், சோவியத் ரஷ்ய கம்யூனிச தலைவர்களினால் அவர்களுக்கு செய்யப்பட்ட அட்டூழியங்கள், அநியாயங்களை அந்த அகதி சகோதரர்களிடம் கேட்டு அறிந்து கொள்வதற்கும் வழிவகை செய்தார்.

(இன்னும் வரும்...)

## உலகில் மிகப் பெரிய சக்தி வாய்ந்த யுத்தக் கப்பல்



உலகின் மிகப் பெரிய சக்தி வாய்ந்த யுத்தக் கப்பலானது (6-02-1907)ல் உருவாக்கப்பட்டது, இந்த யுத்தக் கப்பலின் பெயர் 'HMS DREADNOUGHT' என்பதாகும். இந்தச் சக்தி வாய்ந்த யுத்தக் கப்பல் பிரித்தானியாவில் தயாரிக்கப்பட்டது. இது தயாரிக்கப்பட்டு ஒரு சில மாதங்களின் பின்பே வெள்ளோட்டம் விடப்பட்டது.

அந்த யுத்தக்கப்பலையே இங்கு காண்கிறீர்கள். தற்பொழுது இது உபயோகத்தில் இல்லாமல் கண்காட்சிக்காக பிரித்தானியாவில் வைக்கப்பட்டுள்ளது. 1907ம் ஆண்டு இந்தப் பாரிய, சக்தி வாய்ந்த யுத்தக் கப்பல் தயாரிக்கப்பட்டபோது, பிரித்தானியா - ஜேர்மேனியை கடுமையான அச்சுறுத்தலுக்குள்ளாக்கியது. அத்துடன், இந்த யுத்தக்கப்பலில் 10க்கும் மேற்பட்ட 12 அங்குல நீளமுடைய பெரிய துப்பாக்கி ரவைகள் வெளிப்புறமாக பொருத்தப்பட் டுள்ளன. இந்த சக்தி வாய்ந்த பெரிய யுத்தக் கப்பலை பாவித்துத்தான் பிரித்தானியா அப்பொழுது உலகளவில் பல வெற்றிகளைப் பெற்றது.


*இருபதாம் நூற்றாண்டின் வரலாறு நமது கண்முன் உள்ளது. ஆனால் கடந்த பல நூற்றாண்டுகளின் வரலாற்றை நாம் காண முடியாதுள்ளது.*

*ஆனாலும், நம்மைக் கடந்து சென்ற 19ம் நூற்றாண்டு வரலாறு கண்ணீர் சிந்த வைப்பதும், அழகியதும், அரியதுமான படங்களி னூடாக உங்கள் முன் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கதையைக் கூறுவன. 19ம் நூற்றாண்டின் வரலாறானது முன்னெப்போதுமில்லாத வகையில் அதிக மாற்றங்களை சந்தித்தது. எல்லா மாற்றங் களும் இயல்பாக ஏற்பட்டதுமல்ல, அவற்றுள் சில யுத்தங்கள், எதிர்ப்புகளைத்தாண்டி நடந்துள்ளன. பல சாம்ராஜ்யங்கள் சிதைந்து, புதிய நாடுகள் உருவாகி யுள்ளன. விஞ்ஞான, அறிவியல் மாற்றங்கள் ஏற்படு கின்றன. உலகம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது.*

*19ம் நூற்றாண்டு தொடக்கத்தில் உலகின் முழு நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கீழிருந்தது. இப்போது? இப்படியான பல கதைகள்... இவைகளை நமது வாசகர்கள் தரிசிக்க ஒரு வாய்ப்பை தினமுரசு ஏற்படுத் துகிறது.*

## கவிஞர் கிறிகின் மரணம்



எட்வார்ட் கிறிக் (1843-1907) நோர்வே நாட்டின் பிரசித்தி வாய்ந்த கவிஞர். இவர் 4-09-1907ல் பேர்கனில் மரணமானார். இவரால் இயற்றப்பட்ட மிகப் பிரபல்யமான பாடல் தொகுப்புக்கள்தான் PIANO CONCERTO (1869) PEER GYNT (1876) என்பனவாகும். இவைகள் இரண்டின் மூலமும் எட்வார்ட் கிறிக் புகழின் உச்சிக்கே வந்துவிட்டார். அத்துடன் இற்றைவரைக்கும் அவரது புகழ் தொடர்ந்தும் ஐரோப்பாவில் மட்டுமல்ல முழு உலகிலுமே நிலைத்து நிற்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். நோர்வேயின் உலகத் தரம் வாய்ந்த அந்த மகா கவிஞரையே இங்கு காண்கிறீர்கள்.

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## இணக்கம் காணும் முயற்சி

இரத்தினபுரி, காவத்தை, பலாங்கொடைப் பகுதிகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கொழும்பு திரும்பியதும், கனடா பல்கலைக்கழகத்தில் விரிவுரைகளுக்காகத் திரும்பிச் சென்றிருந்த பேராசிரியர் ஏ.ஜே.வில்சனுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டார். அமைச்சரவையின் முழு உறுப்பினர்களும் எதிர்த்தாலும் ஏற்கெனவே பேசிக்கொண்டதற்கு இணங்க உயர் மட்டக் குழுவை அமைக்கத் தான் எண்ணியுள்ளதாகத் தெரிவித்தார். சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான நல்லெண்ணத்தைக் கட்டி வளர்க்க இத்தகைய குழுவொன்று அவசியம் என்பதைத் தான் உணர்ந்திருப்பதாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனா குறிப்பிட்டார். மேலும், வில்சன் உடனடியாகக் கொழும்பு திரும்பி இந்த முயற்சி ஆரம்பமாவதற்கு உதவ வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இதனையடுத்து அமிர்தலிங்கம் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்று ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவைச் சந்தித்தார். அப்போது அமைச்சர்களான லலித் அத்துலத்முதலி, தொண்டமான், நிசங்க விஜயரட்ணா, எம்.எச்.முகமட் ஆகியோருடன் இப்போதைய ஐ.தே.க.வின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவும் இருந்தார். இரு தரப்புக்கும் இடையிலான தூதுவராகவும் ஆலோசகராகவும் பேராசிரியர் வில்சன் பணி புரிந்தார்.

## 70 தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்!

உத்தியோகபூர்வமான மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் 1981 ஆகஸ்ட் 31இல் உத்தியோகபூர்வமாக ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் ஜனாதிபதி தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளன. நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் கடந்த சில மாதங்களாக இடம்பெற்ற உயிரிழப்பு மற்றும் பொருள் இழப்புக்கள் குறித்துக் கவனம் செலுத்தினார்கள். துரதிர்ஷ்டவசமாக இச் சம்பவங்கள் இடம்பெற்றமை குறித்து கவலை தெரிவித்துள்ளனர். இன ரீதியான பதற்றம் இனியும் தொடர்வதைத் தவிர்த்து, சமாதானமும் அமைதியும் நிலைபெற நடவடிக்கை எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்காக

1) உயர் மட்டக் குழுவொன்று ஜனாதிபதியின் தலைமையில் அமைக்கப்படும். இக் குழுவில் பிரதமர் மற்றும் தலைவர்களுடன் கூட்டணித் தலைவர்களும் அங்கம் வகிப்பார்கள். இந்தக் குழு அமைதி வழியில் தீர்வை நிலைநாட்டும் நோக்கில் தொடர்ந்து கலந்துரையாடல்களை மேற்கொள்ளும்.

2)வன்செயல்களை முற்றாக ஒழித்துக்கட்டும் நோக்கில் எல்லா அரசியல் கட்சிகளதும் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3) மாவட்ட அபிவிருத்திச் சபைகள் தமது பணிகளைச் சீராக முன்னெடுக்க, பொருத்தமான நடவடிக்கைகளைத் திருப்திகரமான வகையில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் கையொப்பத்துடன் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

ஆனால், நான்காவது சுற்றுப் பேச்சுக்களுக்குப்

இணைந்து எழுதுவது
த.சபாரத்தினம்
+
அம்பி மகன்

பின்னர் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவருமான அமிர்தலிங்கம் நான்கு அம்சங்களைக் கொண்ட கோரிக்கையொன்றை முன்வைத்தார். கூட்டணி அரசாங்கத்துடன் ஒத்துழைக்க அரை மனத்துடன் தயாராக உள்ளது. கூட்டணி முன்வைக்கும் நான்கு அம்சங்கள் பற்றிப் பரிசீலிக்க ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது குறித்து மகிழ்ச்சி தெரிவிக்கின்றது. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களில் ஈடுபட்ட பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கூடுதலான அளவில் தமிழ்ப் பொலிஸாரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், வன்செயல்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் வகையில் ஊர்காவல் படை அமைக்கப்பட வேண்டும். இவையே கூட்டணியினர் முன்வைத்த நான்கு அம்சக் கோரிக்கை ஆகும்.

ஆனால், செப்டெம்பர் மாதத்தையடுத்து வந்த அக்டோபர் மாதத்தில் இராணுவ வாகனங்கள் மீதான தாக்குதல்கள் தீவிரமாகின. அக்டோபர் மாதத்தில் இடம்பெற்ற வெவ்வேறு தாக்குதல்களில் படைவீரர்கள் மூவர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர். இதற்குப் பதிலடியாகப் படையினர் பேருந்துகளுக்குத் தீவைத்தும் பொதுமக்கள் மீதான தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியும் இருந்தனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு வரும்படி ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்திற்கு அழைப்பு விடுத்தார். பொதுமக்கள் மீதான தாக்குதல்களும் சொத்து அழிப்புக்களும் தொடர்ந்தும் இடம்பெறாது என்று கூட்டணித் தலைவர்களுக்கு முப்படைத் தளபதிகளும் உறுதிமொழி அளித்தனர். இதற்குப் பதிலாகக் கூட்டணித் தலைவர்கள் வெளியிட்ட ஒரு அறிக்கையில், கூட்டணியினரோ தமிழ் மக்களோ வன்செயல்களை ஆதரிக்கவில்லை எனவும் சட்டபூர்வமான கடமைகளை நிறைவேற்றும் அதிகாரிகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களைக் கண்டிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவைச் சந்தித்துப் பேசிய பின்னர் அமிர்தலிங்கமும் சிவசிதம்பரமும் கூட்டாக ஒரு அறிக்கையை வெளியிட்டனர். இந்த அறிக்கையில் ''இந்தக் கொலைகளுக்கு எவ்வித மன்னிப்பும் இருக்க முடியாது. இத்தகைய வன்செயல்கள் மூலமாகத் தமிழ் மக்கள் தமது இலட்சியத்தை முன்னெடுப்பது இயலாத விடயம். இத்தகைய செயல்கள் மூலமாகத் தமிழ் மக்கள் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லப்படுவதுடன், இவ்வளவு காலமும் அநீதிகள் காரணமாகக் கிடைத்துள்ள அனுதாபங்களையும் கூட இழக்க நேரிடும்'' எனத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அரசாங்கமும் கூட்டணியும் மாதமொரு தடவை சந்தித்துப் பேசுவதென இணக்கம் காணப்பட்டது. இந்தச் சந்திப்புக்களின் ஒழுங்கமைப்பாளராக அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நியமனம் பெற்றார். அத்துடன் ''மிதவாதிகளின் சங்கமம்'' என்ற பெயரில் மற்றுமொரு நிகழ்ச்சித்திட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் எல்லாச் சமூகங்களையும் சேர்ந்த மிநாட்டுவது குறித்த கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இந்தச் சந்திப்புகளின் நோக்கமானது மக்களுக்கு இடையில் வன்செயல்கள், பயங்கரவாதம் என்பவற்றுக்கு எதிரான கருத்துக்களைக் கட்டி வளர்ப்பது மற்றும் மத, இன முரண்பாடுகளின் அடிப்படையில் மோதல்கள் உருவாகாமல் தடுப்பது என்பதாகவே இருந்தது.

இந்தச் சூழ்நிலை லண்டனில் வசித்து வந்த கிருஷ்ணா வைகுந்தவாசன் மேற்கொண்டதொரு பிரகடனத்தால் சீர்குலைந்து போனது. 1922 ஜனவரியில் வரும் தைப் பொங்கல் தினத்தன்று ''தனித் தமிழீழ அரசு'' ஒன்றைப் பிரகடனம் செய்யப் போவதாக அவர் அறிவித்தார். அந்தத் தைப் பொங்கல் தினத்தில் இலங்கைக்கு வெளியே ''தனித் தமிழீழத்திற்கான நிழல் அரசு'' அமைக்கப்படும் எனவும், தமிழீழம் சுதந்திரம் அடைந்துள்ளதாகப் பிரகடனம் செய்யப்படும் எனவும் அவர் வாய்ச்சவடால் விடுத்தார்.


இது ஒரு முட்டாள்தனமான அறிவிப்பு என்பதில் தாம் பூரண தெளிவைக் கொண்டிருப்பதாக அமிர்தலிங்கம் உடனடியாகவே பதிலளித்தார். அத்துடன் தவறான அறிவுரைகளின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள இச் செயற்பாடு, தமிழர்களின் இலட்சியத்தை முன்னெடுக்கத் துணியளவும் உதவப் போவதில்லை எனவும் அமிர்தலிங்கம் வர்ணித்தார்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் கடந்த மேதினத்தன்று தான் ஆற்றிய உரையை மீண்டும் நினைவு கூர்ந்தார் அமிர்தலிங்கம். ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு மிதவாதத் தலைமையுடன் ஒத்துழைக்க முன்வர வேண்டும். நான்கு அல்லது ஐந்து றிவோல்வர்களைக் கொண்டிருக்கும் ஒரு சிறு ஆயுதக் குழுவான இளைஞர்களால் விடுதலை இயக்கத்தைச் கட்டியெழுப்ப முடியாது. கூட்டணித் தலைமை மேற்கொள்ளும் இணக்கப் பேச்சுவார்த்தைகள் மூலம் உரிய பயன் கிடைப்பதாக இல்லையென இளைஞர்கள் எண்ணுவதாகத் தெரிகிறது. ஆனால், இணக்கப் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறவில்லையெனின் தானே வன்முறைப் பாதைக்கு வழிகாட்டுவார் எனவும் அமிர்தலிங்கம் கூறினார்.

அமிர்தலிங்கத்தின் இந்தச் சொற்பொழிவும் கோட்டே சிறீ ஜெயவர்த்தனபுரத்தில் அமைக்கப்பட்ட புதிய பாராளுமன்றத் திறப்பு விழாவில் கூட்டணித் தலைவர்கள் கலந்துகொண்டமையும் பலத்த சர்ச்சைகளைத் தோற்றுவித்தது. புதிய பாராளுமன்றத் திறப்பு விழாவில் கலந்துகொண்டது மட்டுமன்றி அமிர்தலிங்கம் மிக முக்கியமான உரை ஒன்றையும் நிகழ்த்தினார். உரையின் சாராம்சம் என்ன?

(தொடர்ந்து வடியும்....)

**கொலைகளுக்கு எவ்வித மன்னிப்பும் இருக்க முடியாது. இத்தகைய வன்செயல்கள் மூலமாகத் தமிழ் மக்கள் தமது இலட்சியத்தை முன்னெடுப்பது இயலாத விடயம். இத்தகைய செயல்கள் மூலமாகத் தமிழ் மக்கள் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லப்படுவதுடன், இவ்வளவு காலமும் அநீதிகள் காரணமாகக் கிடைத்துள்ள அனுதாபங்களையும் கூட இழக்க நேரிடும்" எனத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருந்தனர்.**




**வணக்கம்! வணக்கம்!! வணக்கம்!!!**

'போன வாரப் புதினம்' பகுதி குறித்த உங்கட அபிப்பிராயங்களை ஒரு வரியெண்டாலும் எழுதிப் போடுங்கோவெண்டு கேட்டிருந் தனாங்கள். அந்த வகையில எமக்கு அஞ்சல் வழியிலயும், தொலைபேசி மூலமாகவும் உற்சாகம் கொடுத்தவர்களுக்கு எமது நன்றிகள். இனி இந்த வாரத்துக்கு வருவம். மிக மிக கவலையோடையும், தொண்டையை அடைக்கிற துக்கத்தோடயும் நாங்கள் ரெண்டு பேரும் இருக்கிறம். ஏன் எண்டதை சின்னவற்ற முதல் கேள்வியே விபரிக்கும்.

**சின் :-** இந்தியாவின் கும்பகோணத்தில சிறுவர் பாடசாலையொண்டில தீ விபத்துக் காரணமாக சுமார் நூறு பச்சிளங் குழந்தைகள் கருகியுள்ளதே.

***மன் :-*** *ஜனங்களே! உலகையே உலுக்கிய துக்கமான சம்பவம் இதுதான். குழந்தைகள் இல்லாமல் கோயில் குளம் ஏறி இறங்கியும், பலவித முயற்சியும் செய்து தவமிருக்கும் பலரில் தீக்கிரையான இத்தனை குழந்தைகளின் பெற்றோர்களின்ர நிலையை விளக்கவேமுடியாது. இந்தச் சம்பவத்தில ஆசிரியைகள் குழந்தைகளப் பற்றிய அக்கறையில்லாமல் தப்பி ஓடிவிட்டினம். தவிரவும் இது சதியாகவும் இருக்க வாய்ப்பிருக்கு. இனியாகினும் இவ்வாறான துரதிர்ஷ்டமான சம்பவம் நடைபெறாமல் அரசு நடவடிக்கை எடுப்பதே கட்டாயத் தேவை.*

**சின் :-** இந்த வலியுறுத்தல் இந்திய அரசுக்கு மட்டுமில்லை. எல்லா நாட்டுக்கும் தான். சரி அடுத்த கேள்வி. யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த பிரதம நீதியரசர் நட்டு வச்ச நவீன நீதிமன்றக் கட்டிடத்துக்கான அத்திவாரக்கல்லு பிடுங்கப்பட்டு நல்லூர்க் கந்தசாமி கோயிலுக்குப் பக்கத்தில உடைக்கப்பட்டிருக்குதாம். அதுக்குப் பக்கத்தில 'மாணவர் படை' எண்டு துண்டுப் பிரசுரமும் கிடந்ததாமே?

***மன் :-*** *சட்டதிட்டங்களுக்கும் தமிழர்களுக்கும் விரிசல் விழுந்து பல நாளாயிட்டுது. யார் நட்டால் என்ன? யாழ்ப்பாணத்தில நீதிமன்றக் கட்டிடமொண்டு கட்டப்பட்டால் யாருக்கு நன்மை? அதைப் பிடுங்கித் துணிச்சல் காட்டின பேடித்தனம் மெச்சும்படியானதில்லை. உந்த மாணவர் படை யார் எண்டது அந்த கந்தனுக்குத் தெரியும். எண்டாலும் சின்னவரே! எங்கட தேசிய தமிழ் பற்றுக்கு ஒரு அளவே இல்லாமல் போச்சு போ.....*

**சின் :-** இது எந்த ரகமான தமிழ்ப் பற்றோ கடவுளே! அடுத்த கேள்வி...இ.தொ.கா. தலைவரின்ர நிலைமை இன்னும் சரியாத் தெரியேல்லையே. அவர் ஆட்சியில பங்கு எடுப்பாரோ இல்லையோ.....

***மன் :-*** *அவருக்கு விருப்பம்தான். அதே நேரத்தில ஒரு சில மாற்றுக் கருத்துக்களும் ஏழாமலில்லை. முடிஞ்ச ரெண்டு எலக்ஸனிலையும் குறிப்பிடக்கூடிய மக்கள் பலத்தை பெற்றுள்ளவர் எண்டதால அதை தக்க வைக்க வேணும். மறுபுறத்தில் சந்திரசேகரனை மலையகத்தில பெரியாளாக்கிற முயற்சியில வன்னியும் எங்கட தமிழ் ஊடகங்களும் வியூகம் வகுத்திருக்கினம். இந்தக் கட்டத்தில அரசோடு இணைஞ்சு பலத்தை காட்டிக் கொண்டாக வேணும். ஆளைப் பயமுறுத்திற மாதிரி சில நடவடிக்கைகளும் ட்டவிழ்த்து விடப்பட்டிருக்கு. புரிஞ்சுகொண்டால் சரிதான்.*

**சின் :-** அரசியலில பழமும் திண்டு கொட்டை போட்ட குடும்பத்தின்ர வாரிசு சரியான முடிவெடுப்பார். அடுத்த கேள்வி. சமாதானப் பேச்சு எப்ப துவங்கும் எண்டு எதிர்பாத்திருக்கிற மக்களிட்ட யுத்தம் தம் மீது திணிக்கப்படுகிறதாகவும் தாம் எதுக்கும் தயாராக இருக்கிறதாகவும் புலிகள் அடிக்கடி கூறிவருகினமே....

***மன் :-*** *இதிலை என்ன சந்தேகம்? தம்பிமார் கோபம் தாங்கமாட்டினம் எண்டது தெரியும் தானே. எதுக்கெடுத்தாலும் மக்கள் சொல்லிகினம், மக்கள் விரும்புகினம் எண்டு சூளுரைப்பினம். யுத்தத்தை ஆரம்பிக்க எந்த மக்கள் விரும்புகினம்? குண்டுவெடிப்பினம், சிறையுக்குள்ள கொலைசெய்வினம், ஆயுதம் கடத்துவினம், ஆக்களை மிரட்டுவினம். இதைப் புலிகள்தான் செய்தினம் எண்டால் கோபப்படுவினம். சமாதானத்தை விரும்பாத தீய சக்திகள்தான் தம் மீது குற்றம் சுமத்துத் துகின்றன எண்டு சொல்லுவினம். பிறகு அரசுதான் யுத்தத்தைத் திணிக்குதெண்டு சொல்லுவினம். தம்பிமாரே! இது கொஞ்சம் ஓவராத் தெரியேல்லையோ? யுத்தம் நடத்த நீங்கள் தயார். மக்கள் தயாரில்லை......விளங்குதோ?*

**சின் :-** ச்சா.....நெத்தியடியாச் சொன்னியள். அடுத்த கேள்வி. கொள்ளுப்பிட்டித் தற்கொலைச் சம்பவம் தொடர்பான அறிக்கையைத் தாங்கள் வெளியிடமாட்டினமாம். அரசும் புலிகளும் விரும்பினா வெளியிடலாமாம். இப்பிபடி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளதே!

***மன் :-*** *குழந்தைகள் கருகின கவலையில இருக்கிறன். உந்த மாதிரி விசர்க் கேள்வியெல்லாம் கேட்கிறீர். அவையள் ஒரு கண்காணிப்புக் குழு; அவயளுக்கு ஒரு அறிக்கை! பேசாம இழுத்து மூடிவிட்டுப் படுக்கச் சொல்லும். குண்டு வெடிச்சவுடன இது யுத்த நிறுத்த மீறலோ எண்டு யோசிக்கினமாம். பின்ன என்ன? விடுப்புப் பாக்கவே வந்தவ? உந்த மாதிரி வெங்காயக் கேள்விகளை இனிக் கேட்டிடாதயும்.*

**சின் :-** பின்ன என்ன தீர்ப்பை சர்வதேசத்துக்கு முன்னால வச்சு குற்றமிழைச்ச தரப்புக்கு நடவடிக்கை எடுக்க சர்வதேசத்தை வலியுறுத்தினாத்தானே இப்பிடியான சம்பவங்கள் நடக்காமலிருக்கும். எத்தினை தடவை தவறு நடக்கிறதுக்குக் காரணமா இருந்திட்டினம். ஏலாட்டில் விட்டுப்போட்டு மரியாதையாப் போக வேண்டியதுதானே. சரி அடுத்த கேள்வி...மட்டக் களப்புச் சிறைக்குள்ள நடந்த படுகொலை பற்றி என்ன நினைக்கிறியள்?

***மன் :-*** *ம்...கருணாவைக் காரணங் காட்டி கிழக்குப் பிரதேசப் புலிகள் வேட்டையாடப் படுகினம். இப்பிடியே போனால் கிழக்கு மக்களுக்காக குரல் கொடுக்க ஒருவரும் இருக்கமாட்டினம். கேள்வி கேட்டாச் சுடுவினம் எண்டு மௌனமாக இருக்கிற சனம், இப்பிடியான படுகொலையளுக்கு எதிராப் போராட முன்வராவிட்டால் கிழக்கு மாகாணத்தில வாழுற தமிழ் பேசும் மக்களின்ர வாசற் கதவுகளில இறப்புத் திகதி குறிக்கப்பட்டிருக்கும்.*

**சின் :-** என்னடாப்பா இந்தாள் பயமுறுத்துது...அடுத்த கேள்வி. இடைக்கால நிர்வாகம் குறித்த பேச்சு நடததிறத தாங்கள் எதிர்க்கிறதா ஜே.வி.பி. தெரிவிச்சு வருகுதே.

***மன் :-*** *நடக்கிற அநியாயங்களைப் பாக்கேக்க இடைக்காலம், உடைக்காலம் எண்டு சும்மா நாளைக் கடத்தாமல் நிரந்தரத் தீர்வைப் பேசி, நாட்டைப் பிடிச்சிருக்கிற பேயைத் துரத்த வேணும். இல்லாவிட்டால் இடைக்கால நிர்வாகம் கொடுத்த பிறகு யுத்தம் நடக்காதெண்டதுக்கு யார் உத்தரவாதம்...உங்களுக்குள்ள பிசகை வச்சுக் கொண்டு அவன் அப்பிடி, இவன் இப்பிடி எண்டு சொல்லக் கூடாது.*

**சின் :-** அண்ண கோபமாக இருக்கிறியளே...! அடுத்த கேள்வியப் பாருங்கோ...எய்ட்ஸ் நோய் ஆசிய வடபசுபிக் நாடுகளிலதான் வேகமாப் பரவி வருகுதாமே.....

***மன் :-*** *ஓம்...வேகமாப் பரவுதுதான்....இதுப் பற்றிச் சொன்னா யார் கேக்கினம்...? இதப் பற்றி பள்ளிக்கூடங்களிலையும் ஏன் வீட்டிலையே கருத்துப் பரிமாறிறது இண்டைக்கு அவசியம். தகாத உடலுறவாலதான் பரவுதெண்டது எல்லாருக்கும் தெரியும். யார்தான் நிதானமா யோசிக்கினம்? உதவாத வெக்கத்தை விட்டுப்போட்டு விவேகமாச் சிந்தியுங்கோ.... ப்ளீஸ்.*

**சின் :-** ஒழுங்கோ ஒருக்காச் சிந்தியுங்கோ...அடுத்த கேள்வி. இலங்கையில போர் நிறுத்தத்தை பேணுறதுக்குக் கடும் பிரயத்தனப் படுகினமாமே.

***மன் :-*** *இதுதான் உலக மகா முஸ்பாத்தி...இராணுவமும் தம்பிமாரும் சண்டைபிடிக்காமல் இருக்க அவையள் பிரயத்தனப்படுகினம். கடந்த இரண்டரை வருசத்தில சின்னச் சின்னச் சம்பவங்கள் நடக்கேக்க அதை உடனுக்குடன் தீர்த்து சமாதானப் பேச்சுக்களை நடத்தாமல், பாம்புக்கும் நோகாம கம்புக்கும் நோகாம....கதை விட்டிச்சினம். இப்ப சுடு தண்ணி குடிச்ச நாய் மாதிரி ஓடித் திரியினம்*

*அதில வேற வேற நாடுகளை விடவும் இலங்கையில யுத்த நிறுத்த மீறல்கள் குறைவுதானாம் எண்டு வியாக்கியானம் வேறை....டக்ளஸ் அமைச்சருக்கு கொண்டுவந்த குண்டு பொலிஸில வெடிக்காம அமெரிக்க வெள்ளை மாளிகையில வெடிச்சா நடவடிக்கை எடுப்பினம். தோளில ஏத்தினீங்கள். காதைக் கடிக்குது. வாங்குங்கோ......*

**சின் :-** இண்டைக்கு மன்னவர் கொஞ்சம் கோபமாப் பேசிறார். அதற்காக மன்னிச்சுக்கொள்ளுங்கோ. நாட்டு நிலைமை படு மோசமாகப் போறதில அவர் மனம் உடைஞ்சு போயிருக்கிறார். எரியிற நெருப்பில எண்ணையை ஊத்தாமல்....... அடுத்த வாரம் சந்திப்பம்.

**மன்னவரும் – சின்னவரும்**

இரகசியம் காத்தல் அவசியம் என்பதால் பெயர்கள், இடங்கள் யாவும் கற்பனையில்

# நெஞ்சினில் என்ன காயமோ...? 66

புலன்கள், நடத்தைகள் போன்ற பல்வேறுபட்ட உளத் தொழிற்பாடுகளைப் பாதிக்கின்றது. இவற்றின் காரணமாக இந் நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரின் வாழ்க்கையில் முன்னேற்றம் தடைப்படுகின்றது.

**இந்நோய் எவ்வளவிற்குப் பொதுவாகக் காணப்படுகின்றது?**

உலகில் ஏறத்தாழ 1000 பேருக்கு, 0.1 - 0.5 வீதமான மக்கள் ஒரு வருடத்தில் இந் நோயினால் பாதிக்கப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பொதுவாக 15-45 வயதிற்குட்பட்டவர்களையே இந் நோய் பாதிக்கிறது. ஆண்களையும் பெண்களையும் இந் நோய் சரிசமமாகப் பாதித்த போதிலும் ஆண்கள் சிறுவயதிலேயே இந்நோய்க்குட்படுகின்றனர்.

**மனச்சிதைவு நோயின் அறிகுறிகள் யாவை?**

மனச்சிதைவு நோயின் தீவிர தாக்கத்திற்குட்பட்ட ஒருவர் தனியாக சிரித்துக்கொண்டோ அல்லது கதைத்துக் கொண்டு இருப்பது போல் பாவனை செய்வது போலவோ காணப்படுவர். அமைதியற்ற தன்மையும் எதிர்பாராத நடத்தை மாற்றங்களும் இவர்களில் நிகழும். அர்த்தமற்ற உரையாடல்கள் மற்றவர்களால் புரிந்து கொள்ள முடியாமல் இருப்பதுடன், சிலவேளைகளில் புதிய சொற்பிரயோகங்களும் கொண்டதாக அமையும்.

நீண்டகால மனச்சிதைவு நோய்க்கு உட்பட்ட ஒருவர் தனது உடல் சுகாதாரத் தன்மை பற்றிய ஆர்வத்தை இழந்திருப்பதுடன் ஒரு தனி அறையில் அடைந்து இருக்கவோ, மற்றவர்களில் இருந்து ஒதுங்கி இருக்கவோ முற்படுவர்.

மனச்சிதைவால் பாதிக்கப்பட்ட நோயாளிகளில் ஏற்படும் முக்கிய மாற்றம் - மாயப் புலனுணர்வு (Hallucinations) ஆகும். இம் மாயப் புலன் உணர்வுகள் எந்த ஒரு புலன் உறுப்பினை அடிப்படையாகக் கொண்டிருப்பினும், அதிகமானவர்களில் செவிப் புலன் தொடர்பான மாயப் புலனுணர்வே காணப்படுகிறது. யாருமற்ற நிலையில் அவர்களைப் பற்றி பல குரல்கள் கதைப்பதாகவோ அல்லது அவர்களின் செயற்பாடுகளை விவரிப்பதாகவோ இவை அமையலாம். பெரும்பாலும் நோயாளிக்கு கோபத்தை அல்லது வருத்தத்தை ஏற்படுத்தக் கூடிய இம் மாயப் புலனுணர்வுகளுக்கு சில வேளைகளில் இவர்கள் பதில் கூறுவதுடன் ஒரு சில சந்தர்ப்பங்களில் அக் குரல்களின் கட்டளைகளுக்கேற்ப நடந்து கொள்ளவும் முற்படுவர்.

மனச்சிதைவு நோயின் இன்னுமொரு பிரதான அறிகுறியாகத் தோன்றுவது பிறழ்நம்பிக்கை (Delusions) ஆகும். எந்தவோர் ஆதாரமுமற்ற நிலையில் அவர்களின் சமூகப் பின்னணிக்குப் பொருந்தாத வகையில் ஏற்படுகின்ற இந் நம்பிக்கைகளை விவாதிப்பதன் மூலம் அவற்றை மாற்றுவது முடியாத காரியமாகும்.

(தொடரும்)

## உள மருத்துவம்

உடல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை விட உள நோயினால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாக காணப்படும் இன்றைய காலகட்டத்தில், உள நலம், உளப் பாதிப்புகள், உள நோய்கள் பற்றி அறிந்துகொள்வதும் இவற்றுக்கான வைத்திய முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகிறது. எனவே மேற்படி உள மருத்துவத்துறையில் அநுபவம் பெற்றவர்களும் நிபுணர்களுமான வைத்திய கலாநிதி திரு. த. கடம்பநாதன் (எம்.பி.பி.எஸ். எம்.டி உள மருத்துவம்) அவர்களும் உளவியலாளர் திரு. தி. சுவீந்திரன் பி.ஏ (உளவியல்) எம்.பில். உள மருத்துவம்) அவர்களும் இணைந்து தமது அநுபவங்களை பகிர்வர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

# ரங்கராட்டின மனசு

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

பகவத்கீதையின் முதல் அத்தியாயம் இதைத்தான் சொல்கிறது. 'விசாதயோகா' என்று இது குறிப்பிடப்படுகிறது. துன்பம் ஒன்று நிகழ்கிறபோது அது குறித்து போதிய அக்கறை காட்டி, அதனை நிவர்த்தி செய்வது மிக அவசியம். அப்படிச் செய்யாமல் விட்டுவிட்டால், அந்தச் சோகத்துடன் இன்னும் சிறிது சிறிதாகப் பல சோகங்கள் சேர்ந்து மனிதனையே சோகக் கடலில் மூழ்கடித்துவிடும். சாதாரண மனிதன் சோகம் வந்தால் என்ன செய்வான்? தன்னைத் தானே நொந்துகொள்ளுவான். அடுத்தவர் மீது கோபப்படுவான். இதனால் அவனது கஷ்டம் தீரப்போவதில்லை. மாறாக, ஆழ்ந்து சிந்தித்து அதற்கு நிவாரணம் தேடுவதுதான் கீதை சொல்கிற 'விசாதயோகா'. கஷ்டம் என்றால், அதற்கு நிவாரணம் தேடுவது எப்படி? குறிப்பாக கணவன்-மனைவி உறவில் ஒரு கஷ்டம் என்றால் என்ன நிவாரணம் என்று பார்க்கலாம். முதலில், உங்கள் கஷ்டத்துக்குக் காரணம் வேறு யாருமில்லை; நீங்களேதான் என்ற முதல் உண்மையைப் புரிந்துகொள்ளுங்கள். மற்றவர்கள்தான் உங்கள் கஷ்டத்துக்குக் காரணம் என்று அடுத்தவர் மீது பழிபோடுவதை நிறுத்துங்கள். உங்கள் கஷ்டங்களுக்கு மற்றவர்கள் காரணமில்லை என்றால், கஷ்டத்துக்குத் தீர்வு காணவும், நீங்கள் அடுத்தவரை நம்ப வேண்டிய அவசியமில்லை அல்லவா? நம் சுகத்துக்கும் துக்கத்துக்கும் காரணம் நாம்தான் என்று புரிந்துகொண்டபின், அடுத்த கட்டமாக துக்கத்தை வெற்றிகொள்ளத் தேவையானது, துன்பத்தை வென்றே தீருவது என்ற தீர்க்கமான முடிவுதான். ஒரு குடும்பத்தில் இத்தகைய சூழ்நிலை நிலவ வேண்டுமென்றால் அடிப்படையில் மூன்று விடயங்கள் தேவை. முதலாவது, நிம்மதியான மகிழ்ச்சியான மணவாழ்க்கை நமக்கு அமைய வேண்டும் என்ற இலட்சிய மனப்பான்மை. நிம்மதியும் மகிழ்ச்சியும் தேவை என்ற இலட்சியம் இல்லாத தம்பதிகளின் வாழ்க்கை எவ்வளவு மோசமாக இருந்தால் என்ன? வாழ்க்கையின் அடுத்த கட்டத்தை அடையாவிட்டால்தான்

(தொடரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

**குறுக்கெழுத்துப் போட்டி இல.77க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

ஆர்.நிவேதிகா, ஐ.டி.55ஏ, சந்தை சுற்றுவட்ட வீதி, வவுனியா.

| பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள். |
|---|
| லிங்கராஜா பிரதாப், இல.24, புதிய வன்னியனார் வீதி, மட்டக்களப்பு. |
| லலிதா சகாதேவன், லக்ஸபான, இல.02 த.வி., மஸ்கெலியா. |
| சி.றாதை, கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை, வெள்ளவத்தை. |
| ஷகிலா வேலுப்பிள்ளை, ஈஸ்டேல் எஸ்டேட், நானுஓயா. |
| கே.மேகசுதன், தேவாலய வீதி, திருக்கோவில். |
| பு.ஜெயதீபன், இலகடி, காரைநகர். |
| செ.ஞானராசா, கீரிசுட்டான், பாலம்பிட்டி, மடுக்கோவில். |
| நவின் பிரகாஷ், 219, ரொக்ஹில், ஸ்பிரிங்வெலி ரோட், பதுளை. |
| எஸ்.இறைவன், 68/1, வோல்ஸ் ஒழுங்கை, கொழும்பு - 15. |
| எம்.காயத்திரி, 64/9, லக்கி ஒழுங்கை, ரத்தோட்ட வீதி, மாத்தளை. |

## குறுக்கெழுத்துப் போட்டி 79

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | ■ | 7 | ■ | 8 |
| 9 | 10 | 11 | ■ | 12 |
| 13 | 14 | 15 | 16 | ■ |
| 17 | 18 | ■ | 19 | ■ |
| ■ | 20 | 21 | 22 | ■ |

### இடமிருந்து வலம்

1) துறவு பூண்டவர்
9) ஒருவகை தோல் நோய் (குழம்பியுள்ளது).
13) திண்மத்தின் எதிர்ச் சொல் (குழம்பியுள்ளது)
17) ஒருவகை கோரைப்புல் (திரும்பியுள்ளது)
20) அழகிய மஞ்சள் பூக்களை கொத்து கொத்தாகத் தாங்கிநிற்கும் ஒரு மூலிகைச் செடி. (குழம்பியுள்ளது).

### மேலிருந்து கீழ்

1) பஞ்ச பாண்டவர்களில் ஒருவர்.
3) மனிதன் சந்தோசமாக வாழ தேவைப்படுவது.
5) தலை
10) தண்ணீர் தடாகங்களில் தோன்றும் தாவரம். தாமரை போன்ற மலர்களை தரக்கூடியது. (குழம்பியுள்ளது)
16) கடவுளிடம் வேண்டுவது (தலைகீழாக உள்ளது)

### குறுக்கெழுத்துப் போட்டி 76 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 வ | 2 ல் | 3 லா | 4 ரை | ■ |
| 5 ர | ■ | 6 சீ | 7 வ | 8 ன் |
| 9 லா | 10 ப | ■ | 11 அ | ■ |
| 12 று | 13 கு | 14 அ | ■ | 15 ண் |
| ■ | 16 ம் | ■ | 17 சி | 18 ப |
| 19 அ | 20 ம் | 21 பா | 22 றை | ■ |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 28.07.2004க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

**குறுக்கெழுத்துப் போட்டி இல-77**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ. இல - 1772,**
**கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

**சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.**


# ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

## வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லாவிதமான,ஆண்கள்,பெண்கள்,குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சயபாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

**RATHAA TEXTILE**


377,379A,Galle Road,Wellawatta,Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel:2364792

Branch:
No,33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

**மகளிர் மட்டும்** **மகளிர் மட்டும்**

53

பெயர்:- ..........................
முகவரி:- ..........................
..........................................
தொழில்:- ..........................
கையொப்பம்:- ..................



- ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா)
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: **28-07-2004**

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர்,த.பெ.இல-1772,
கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு சேலை? 51
## சங்கானை வாசகிக்கு அதிர்ஷ்டம்!

**இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்**


**செ.செபதர்சினி**
**பிளாக் வீதி, சங்கானை.**

பரிசு பெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்த வாரம் யாருக்கு? ஒரு வாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா. இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசுபெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்ற பின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# இவ் வாரச் சிறுகதைகள்

# குடும்பம்

மாலை நேரம். அந்தி வானிலே சூரியன் மேற்கு நோக்கி அஸ்தமிக்கும் வேளை. வானம் செக்கச் செவேலென சிவந்திருந்தது. கடற்கரையில் குழந்தைகள் தமது மழலை மொழியால் பேசி, சிரிப்பது போல் கலகலவென கடலலைகள் ஓயாது கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்தன. இந்த இயற்கை அழகை இரசிப்பது ஒரு தனி சுகம். இச் சுகத்தில் சோகம் கூட மறைந்து விடும் என்பதைப் போல் தனது கயல் விழிகளால் உற்று நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தாள் ரம்யா. பெயருக்கேற்றாப்போல் மிகவும் ரம்மியமாக - அழகாக இருந்தாள். அவளது சிவந்த மேனியின் நிறத்துக்கேற்றாப்போல் அழகான சேலை அணிந்து தலை நிறைய மல்லிகைப் பூக்களை, அவளது அழகிய நீண்ட கருங்கூந்தலில் சூடியிருந்தது அவளது அழகை மேலும் மெருகூட்டியது. அவளது உள்ளத்தில் எத்தனை குமுறல்கள், கவலைகள் உள்ளனவென்பதை அவளது கண்கள் வெளிப்படுத்தின. அவள் கண்கள், சோகத்தால் நிறைந்திருந்தன. அந்தச் சோகம் கவலையாகி கண்ணீராக அவளது அழகிய முகத்தில் வழிந்தது. இந்தக் கண்ணீரின் அர்த்தம் என்னவோ? அந்த நேரத்தில் ஒரு கை வந்து ரம்யாவை தட்டியது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள் ரம்யா. அது வேறு யாருமல்ல. அவளது உயிர்த்தோழி காயத்திரி. அவள் ரம்யாவை சமாதானப்படுத்தி அழைத்துச் சென்றாள். இருவரும் அவர்களது வசிப்பிடமான ஆச்சிரமத்துக்கு வந்துசேர்ந்தனர். கிட்டத்தட்ட 15 வருடங்களாக இருவரும் வசிக்கின்றனர். இருவருமாக முகம், கை, கால் கழுவி ஓய்வெடுத்தனர். அப்போது ஆச்சிரமத்துக்கு பொறுப்பான ராஜேஸ்வரி அம்மா வந்தார். அவர் மிகவும் அன்பானவர். ரம்யா, காயத்திரி இருவர் மீதும் மிகவும் பாசம் கொண்டவர். அதே போல் ரம்யா காயத்திரி இருவரும் அவர் மீது மிகவும் மதிப்பும் மரியாதையும் கொண்டவர்கள். ராஜேஸ்வரி அம்மா கடிதமொன்றைக் கொண்டுவந்து ரம்யாவிடம் கொடுத்தார். காலையில் உனக்கு வந்தது என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார். ரம்யா அந்தக் கடிதத்தை ஆவலுடன் பிரித்தாள். அது ஒரு நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம். அப்போதுதான் ரம்யாவுக்கு ஞாபகம் வந்தது, சென்ற மாதம் ஒரு பெரிய கம்பனியில் பதவி வெற்றிடம் உள்ளது என விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கு ரம்யா விண்ணப்பித்திருந்தாள். அதற்கான நேர்முகப் பரீட்சைக்கான கடிதம்தான் அது. அவளுக்கு மிகவும் சந்தோசமாகவும் அதேவேளை கவலையாகவும் இருந்தது. நேர்முகப் பரீட்சை எப்படியிருக்குமோ? இலஞ்சம் கேட்பார்களோ? கேட்டால் என்ன செய்வது இப்படிப் பல கேள்விகளை தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டாள். காயத்திரி ஆறுதல் சொல்லி சமாதானப்படுத்தினாள். காயத்திரிக்கும் சந்தோசமாகவும் கவலையாகவும் இருந்தது. நல்ல இடத்தில் வேலை கிடைக்கப் போகின்றது என்ற சந்தோசம் ஒரு புறம். தன்னை விட்டுப் பிரிந்து செல்லப்போகின்றாளே என்ற கவலை மறுபுறம். ஏனெனில் இருவரும் தற்போது ஒரு சிறிய கம்பனியில் ஒன்றாகத் தொழில் புரிகின்றனர். ரம்யா, ராஜேஸ்வரி அம்மாவின் உதவியுடன் பட்டப்படிப்பை முடித்திருந்தாள். அழகு, படிப்பு, நற்குணம் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கினாள். நாள் நெருங்கிக்கொண்டிருந்தது..... அன்று வைகாசி 20ஆம் திகதி. நேர்முகப் பரீட்சைக்கான நாள். காலை 10.00 மணிக்கு பரீட்சை. அன்று காலை ரம்யா சீக்கிரமே எழுந்து வேலைகளை முடித்துக்கொண்டு ராஜேஸ்வரி அம்மாவிடம் ஆசீர்வாதம் பெற்று காயத்திரியிடமும் சொல்லிவிட்டு நேர்முகப்பரீட்சைக்குச் செல்ல ஆயத்தமானாள். ஒரு முச்சக்கர வண்டியில் ஏறி உரிய இடத்திற்குச் சரியான நேரத்தில் வந்தடைந்தாள். கம்பனியின் வாயிலில் நின்று கம்பனியின் தோற்றத்தைப் பார்த்தாள். இவ்வளவு பெரிய கம்பனி, இதில் எனக்கு வேலை கிடைத்தால் நான் மிகவும் அதிர்ஷ்டசாலிதான் என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு உள்ளே சென்றாள் சிறு பயத்துடன். அங்கே நேர்முகப் பரீட்சைக்காகக் கிட்டத்தட்ட 15 பேர்கள் காத்திருந்தனர். அதைப் பார்த்ததும் ரம்யாவுக்கு பயம் அதிகரித்தது. இத்தனை பேர் இருக்கின்றனர். எனக்குக் கிடைக்குமா? என்ற சந்தேகத்துடன் தனது ஆசனத்தில் அமர்ந்தாள். ஒவ்வொருவராக அழைக்கப் பட்டனர். அடுத்ததாக ரம்யா அழைக்கப் பட்டாள். பயத்துடனும் நடுக்கத்துடனும் தயங்கித் தயங்கிச் சென்றாள். உள்ளே சென்று "குட் மோர்னிங் சேர்" என்றாள். அவர் "குட் மோர்னிங் பிளீஸ் சிட்டவுன்"



என்று சொல்லி நிமிர்ந்தார். இருவரும் அதிர்ச்சியுடன் ஒருவரை ஒருவர் உற்று நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தனர். ஆச்சரியம் கலந்த ஆனந்தத்துடன் இருவரும் திகைத்து நின்றனர். ஆம், அது வேறு யாருமல்ல. ரம்யாவின் அண்ணன் பிரஷாந். ரம்யா தன் நிலை மறந்து கடந்த காலத்துக்குச் சென்றாள்.

ஆம். வடமராட்சியில் இயற்கை எழில் கொஞ்சும் ஓர் அழகிய கிராமம். அதில் பாசம் நிறைந்த ஒரு சிறிய குடும்பம் சந்தோசமாக வாழ்ந்தது. அம்மா ராஜலக்ஷிமி அப்பா கதிரேசன். அண்ணா பிரஷாந், கடைக்குட்டி ரம்யா என்று அந்தக் குடும்பம் வாழ்ந்தது. ரம்யா செல்லமாக வளர்ந்தாள். எதைக் கேட்டாலும் மறுக்காத அப்பா. அளவுக்கு அதிகமாக அன்பு செலுத்தும் அம்மா. தன்னுடன் விளையாடி குறும்புகள் செய்யும் அண்ணன். இப்படிச் சந்தோசமாக இருந்தாள் ரம்யா. அன்று ரம்யா வகுப்பிற்குப் படிக்கச் சென்ற பின்தான் அந்த விபரீதம் நடந்தது. யுத்தத்தின் கொடூரத்தால் குண்டடிபட்டு மூவரும் இறந்து கிடந்தனர். படித்து விட்டு வந்த ரம்யா அதிர்ச்சியடைந்தாள். துன்பம், பிரிவு என்பதை அறிந்திராத அவள், தனது 10 வயதில் எல்லாவற்றையும் இழந்து தனிமரமானாள். அவளுக்குச் சொந்தமென்று சொல்ல ஒரு மாமா மட்டுமே இருந்தார். அவரும் ஒரு நோயாளி. அவரால் ரம்யாவை பார்க்கக் கூடாதிருந்தது. எனவே, அவர் ஒரு ஆச்சிரமத்தில் சேர்த்தார். அதன்பின் கடுமையான நோயால் இறந்துவிட்டார். அந்த விபத்திலே அண்ணன் இறந்து விட்டார் என்றிருந்தேனே இவர் எப்படி இந்தக் கம்பனியில் இருக்கின்றார் என்று சிந்தித்துக்கொண்டிருக்கும் வேளை தொலைபேசி மணி அலறியது. இருவரும் தம்நிலையுணர்ந்து மீண்டனர். 'பிரஷாந், தொலைபேசியை எடுத்து "அப்புறம் பேசுங்கள்" என்று வைத்த அடுத்த கணமே இருவரும் கட்டித் தழுவி தமது பிரிவுத்துயரை அழுது தீர்த்தனர். "அண்ணா நீ உயிருடனா இருக்கின்றாய்? என்னால் நம்பவே முடியவில்லை. இவ்வளவு நாளும் எங்கிருந்தாய்" எனப் பதறினாள். பிரஷாந் சமாதானப்படுத்தி நடந்ததை விளக்கினான். "அந்த இடத்தில் நான் உடலில் பல காயங்களுடன் அம்மா, அப்பா இறந்த அதிர்ச்சியில் மயங்கிக் கிடந்தேன். எல்லோரும் நினைத்தனர் நான் இறந்து விட்டதாக. பின் நான் மயக்கம் தெளிந்து பார்த்தபோது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். எனக்கருகில் ஒரு அம்மாவும், அப்பாவும் நின்றனர். அந்த நேரத்தில் வைத்தியர் வந்து, இவர்கள்தான் உங்களை சரியான நேரத்துக்குக் கொண்டு வந்து காப்பாற்றினார்கள் என்றார். நான் அவர்களுக்கு நன்றி சொல்லியபின், அவர்களது வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்றனர். அதன் பின்தான் அவர்களது வேதனை புரிந்தது. பெரிய பணக்காரர்கள் என்றும் பல வருடங்களாகக் குழந்தைச் செல்வம் இல்லை என்றும் தெரிந்து கொண்டேன். என்னை அவர்கள் தங்களது பிள்ளையைப் போல் பாசமாக வளர்த்து, படிக்க வைத்தனர். இந்தக் கம்பனி அவர்களது சொத்து. தற்போது இந்தக் கம்பனியின் பொறுப்புக்களையும் என்னிடம் ஒப்படைத்துள்ளனர். அது சரி, ரம்யா இவ்வளவு நாளாய் நீ எங்கிருந்தாய்? இப்ப என்ன செய்கின்றாய்?" என பிரஷாந் ஆர்வமாகக் கேட்டான். "உன்னை பல நாட்களாக தேடி அலைந்தேன். எந்தத் தகவலும் கிடைக்கவில்லை" என்றான். அதற்கு ரம்யா தனது நிலையை விளக்கினாள். மாமா ஒரு ஆச்சிரமத்தில் சேர்த்துவிட்டு இறந்து விட்டார். நான் அங்கு தான் இருக்கின்றேன். இப்ப நேர்முகப் பரீட்சைக்காக இங்கு வந்தேன் என்றும் கூறினாள்.

ரம்யாவை, பிரஷாந் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று எல்லாவற்றையும் விளக்கி தனது தங்கையை அறிமுகம் செய்தான். அவர்களுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது. பெண்பிள்ளை இல்லை எனும் கவலையும் எங்களுக்கு இப்போது நீங்கிவிட்டது எனக் கூறினர். அவளையும் ஏற்றுக் கொண்டனர். அவள் நன்றாக படித்திருந்தபடியால் கம்பனியின் பொறுப்புக்களை இருவருக்கும் பகிர்ந் தளித்தனர். அவர்கள் அனைவரும் சந்தோசமாக இருந்தனர். ரம்யாவுக்கு புது உறவு கிடைத்ததையிட்டு ராஜேஸ்வரி அம்மாவுக்கும் காயத்திரிக்கும் சந்தோசமாக இருந்தது. ரம்யாவுக்கு மிகவும் மகிழ்ச்சியாயிருந்தது. தான் சிறுவயதில் இழந்த அன்பு, பாசம், குடும்பம் என்பன மீண்டும் தனக்குக் கிடைத்ததையிட்டு கடவுளுக்கு முதற்கண் நன்றி செலுத்தி னாள். தான் இழந்த சந்தோசத்தை மீண்டும் பெற்றுக்கொண்டாள். ஆனாலும் ஒரு சோகம். பெற்ற அம்மா, அப்பா இல்லையே என்பதுதான். அதை நினைத்தாலே கண்கள் நீரைச் சொரிகின்றன. ரம்யாவின் கண்ணீருக்கான அர்த்தம் இதுதான்.

**- டி. லெவனா, மட்டக்களப்பு.**

# இனிய காதல்

ரமேஸ் மட்டக்களப்பில் ஓர் நகரத்தை வசிப்பிடமாகக் கொண்டவன். இவன் வாழ்வு சற்று வித்தியாசமானது. எந்தவொரு கெட்ட பழக்கமும் இல்லை. பொதுவாக, பொய் பேசுவது, பிறருக்கு உபத்திரவம் செய்வது, பெண்களைக் கேலி செய்வது என ஒன்றுமே இவனிடம் கிடையவே கிடையாது. இவனுக்கு அம்மா, அப்பா, சொந்த பந்தங்கள் எதுவும் இல்லை. இவன் ஒரு மெக்கானிக்கராச் ஒன்று சொந்தமாக வைத்திருந்தான்.

இவன் வாழ்வில் ஒரு பெண் தோன்றினாள். இவள் பெயர் ரீஜி. இவள் ஒரு பணக்கார வீட்டுப் பிள்ளை. இவளும் இவனை மாதிரி ஒரு நல்ல ஒழுக்கமுள்ள பெண்மணி. ரஜியின் அப்பா பல கோடி ரூபாவிற்குச் சொந்தக்காரர். இப்படி வசதியுள்ள இந்த ரீஜி ரமேஸின் பின்னால் சுற்ற ஆரம்பித்தாள். ரமேஸிடம் தன் காதலை எப்படியாவது சொல்ல வேண்டும் என்று நினைத்தாள். அதுபோல் ரமேஸை ஒருநாள் நேரில் சந்தித்தாள் ரீஜி. ரமேஸிடம் தன் மனதிலுள்ள காதலைத் தெரிவித்தாள். ரமேஸ் அவள் காதலை ஏற்றுக்கொள்ளவில்லை.

அதற்கு ரீஜி "ஏன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறீர்கள் இல்லை; என்ன காரணம்?" என்று கேட்டாள்.

"நீ ஒரு பணக்கார வீட்டுப் பெண். என் நிலைமைக்குச் சரிவராது" என்றான் ரமேஸ்.

"அப்படி என்ன நிலைமை உங்களுக்கு? சொல்லுங்கள், நான் அதன்படி மாறத் தயார்" என்றாள் ரீஜி.

"நான் ஒரு ஏழைப் பெண்ணைத்தான் திருமணம் செய்யப்போகிறேன்" கூறினான் ரமேஸ்.

"நான் ஒரு பணக்கார வீட்டுப் பெண்தான். உங்கள் நல்ல மனதை அறிந்த நான் ஒரு ஏழைப் பெண்ணாக வரத் தயார்" என்றாள் ரீஜி.


ரமேஸ், ரீஜியின் நல்ல மனதை அறிந்து அவளைக் காதலிக்க ஆரம்பித்தான். இருவரும் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்துகொண்டு பழகினர். இந்த விசயம் ரீஜியின் அப்பாவிற்குத் தெரிய வந்தது. ரீஜியின் அப்பா ஒருநாள் ரமேஸைச் சந்தித்து,

"நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மையா? நீதான் என் பெண்ணைக் காதலிக்கிறாயா?" என்று கேட்டார்.

ரமேஸ் "நான்தான் ரீஜியைக் காதலிக்கிறேன்" என்று நிதானமாகப் பதில் கூறினான். ரீஜியின் அப்பா நீ என்ன தொழில் செய்கிறாய் என்று கேட்டார்.

"சொந்தமாக ஒரு மெக்கானிக் செட் வைத்திருக்கிறேன்" என்றான். ரமேஸ், "சாதாரண மெக்கானிக் கராஜ் வைத்திருக்கும் நீ என் பெண்ணை காதலிக்கிறாயா? இனிமேல் என் பெண்ணைப் பார்ப்பது பேசுவதைக் கண்டால் நான் மனிதனாக இருக்கமாட்டேன்" என்று கூறிச் சென்றார் ரீஜியின் அப்பா.

ரமேஸ் பயப்படவில்லை. அவன் தொடர்ந்து பழகிவந்தான். ஒருநாள் இருவரும் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த வேளை திடீரென்றொரு பஸ்வண்டி மோதி விபத்துக்குள்ளாகியது. இதில் ரமேஸு க்குப் படு காயம். ரீஜி சுயநினைவை



இழந்தாள். பின் ஒரு மாதத்தின் பின் ரமேஸ் காயங்களிலிருந்து மீண்டு ரீஜியைச் சந்திக்க அவளின் வீட்டுக்கு வந்தான். ரீஜியின் வீட்டில் யாரும் காணப்படவில்லை. ரீஜியின் அப்பா மட்டும் வந்து ரமேசைப் பார்த்து, "இப்போது உனக்கு சந்தோசமா? என் பொன்னு சுயநினைவை இழந்துவிட்டாள். இப்பொழுது ரீஜியை நீ கல்யாணம் செய்துகொள்வாயா?" என்று கேட்டார்.

"நான் உங்கள் பணத்தைக் காதலிக்கவில்லை. உங்கள் பெண்ணைத்தான் காதலிக்கிறேன். இந் நிலைமையில் ரீஜியை திருமணம் செய்ய நான் தயார்" என்று ரமேஸ் துணிச்சலுடன் கூறினான்.

இதைக் கேட்ட அவள் அப்பா, "ரமேஸ்! நீங்க என் மகள் மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறீங்க என்று இப்பதான் புரிந்துகொண்டேன். இந்த நிமிடத்திலிருந்து நீங்கள்தான் என் மருமகன்" என்று ஏற்றுக்கொண்டார்.

திருமணம் முடிந்துவிட்டது. ரமேஸ் தன் மனைவி ரீஜியை தன் சொந்த உழைப்பில் குணப்படுத்த வேண்டும் என்ற வைராக்கியத்துடன் உழைக்க ஆரம்பித்தான். சுமார் ஒரு வருடத்துக்குப் பிறகு தன் சொந்தப் பணத்தினால் ரீஜியை இந்தியாவுக்குக் கொண்டுசென்று குணப்படுத்தினான். ரீஜிக்கு நினைவு திரும்பியது.

"ரமேஸ் எனக்கு ஒரு வருடமாக என்னவோ நடந்திருக்கிறது. அப்படியிருந்தும் நீங்கள் என்னை மனம் முடித்திருக்கிறீர்கள். இன்னும் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் நான்தான் உங்களுக்கு மனைவியாக வர வேண்டும்" என்று சொன்னவாறு கட்டிப்பிடித்து அழுதாள் ரீஜி. இருவரும் நாடு திரும்பினார்கள். ரீஜியின் குடும்பத்தார் இருவரையும் அன்போடு வரவேற்றனர்.

யாவும் கற்பனை.

**- எம்.யூ.எம். இர்ஷாத், புதிய காத்தான்குடி - 06.**

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

### ஒழுக்கமும் உயர்வு தரும்

* எதிர்காலமாக இருந்தது இப்போது நிகழ்கின்றது. இப்போது நிகழ்வது கடந்த காலம் ஆகின்றது. ஆகவே ஏன் கவலை?

*ஒவ்வொரு நாளிலும் ஒரு இரகசியம் மறைந்திருக்கின்றது. நீங்கள் இதைப் பலமுறை பார்த்திருக்கிறீர்கள்.

* என்னுடைய முயற்சியின் பலனை அநுபவிக்கப் பொறுமையற்றிருந்தால், அது கனியாத காயை உண்ண முயற்சிப்பது போலாகும்.

*ஒரு சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் கண்ணீர் சிந்துவதைவிட அடுத்ததையும் தவறவிடாமலிருக்க பார்வையைத் தெளிவாக வைத்திருங்கள்.

* எதையும் பணிவுடன் அநுசரித்து நடப்பவர் மிகவும் பெருந்தன்மை கொண்டவராவார்.

* நேர்மையற்றவர் உண்மையான மன அமைதியை அநுபவிக்க முடியாது. அவருடைய தந்திரம் அவரை முடிச்சுப் போட்டுக் கட்டிவிடும்.

* நேர்மையானவரில் மற்றவர்கள் திருப்தியடையும் அளவிற்கு தானும் தன்னில் திருப்தியுடையவராய் இருப்பார்.

* சமூகத்தில், நாட்டில், உலகில் இன்றுள்ள மிகவும் சிக்கலான பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு ஒழுக்கம். ஒழுக்கத்தை இழந்தால் எந்தக் கௌரவமும் இருக்காது.

* எல்லாக் கடமையிலும் விசுவாசத்துடனிருந்தால், எண்ணம், பேச்சு, செயல்கள் யாவும் நம்பிக்கை நிறைந்த முத்திரையைக் கொண்டிருக்கும்.

**"இன்றைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்" என்ற நூலிலிருந்து....**

## இலக்கிய நயம்

# தேவதை வந்தாள்! தேன் சுவை தந்தாள்!!

தென்றல் ஏந்திவரும் பட்டுத்துணி ஒன்றைப் போல மிக மெதுவாகப் படிகளில் இறங்கி வந்துகொண்டிருந்தாள் மதுமதி.

அவளையே பார்த்தபடி கீழே நின்றிருந்த எழிற்கோ,

'தேவதைகள் மேலிருந்துதானே கீழே வரவேண்டும்' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.

சிறிது நேரம் நின்றிருந்தான் எழிற்கோ.

வார்த்தைகளைத் தேடித் தவித்துக் குழம்பி...... வெறுமனே பேசுவதற்கான முன் ஆயத்தங்களை மட்டுமே சில நிமிட நேரத்திற்குத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தான்.

மதுமதி புன்னகைத்தாள். தாமரை இதழ்கள் போன்ற மிருதுவான அவள் அதரங்கள் சற்றே திறந்தன. உள்ளே



படியிலிருந்து அவள் இறங்கி வந்த ஒய்யாரமும், அவனருகில் வந்து மூச்சு வாங்கி நின்ற அழகும் எழிலின் கண்களைப் பறித்தன. 'கொழுகொம்பு இல்லாமல் கொடி நிற்க முடியாது என்பார்கள். இந்தக் கொடியால் நிற்கவும் முடியும், படிகள் வழியே தான் தாங்கிய மலர்களை மெல்ல அசைத்த வண்ணம் இறங்கி நடந்து வரவும் முடியும்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அருகில் வந்த மதுமதி, தன்னையே விநோதமாகப் பார்த்தபடி நின்றிருக்கும் அவனை விநோதமாகப் பார்த்தபடி நின்றாள்.

நன்றாகச் சீவப்பட்டிருந்தாலும், அவள் அடர்த்தியான கூந்தலிலிருந்து கட்டுமீறி விடுபட்டு முகத்தில் தவழ்ந்த இரண்டொரு சுருள் இழைகள் காற்றில் மெல்ல அசைய, முகத்தில் பரவசம் ததும்ப நின்று கொண்டிருந்தாள்.

அம்பு தொடுக்க இழுக்கப்பட்ட வில்லைப் போல் காட்சியளித்த வளைந்த புருவங்கள், கடலின் சிப்பிகளைப் போல் விழிகளின் மேல் பாதி கவிழ்ந்திருந்த இமைகள், சிறகடித்து ஓய்ந்திருந்தன. உதடுகள் செக்கச் செவேலென்றிருந்தன. 'பல்லொக்கும் முத்தென்றாலும் பவளத்தை இதழென்றாலும் அது உள்ளதை உள்ளபடி எடுத்துக் கூறுவதாகாது' என்று எழிற்கோ நினைத்தான்.

**தருவது முழடில்யன்**

தொட்டுப் பார்க்கச் சபலமெழுப்பும் வகையிலான துணியில் நெய்யப்பட்டிருந்த அவள் ஆடைகள் அங்கங்கே எழுந்தும் மடிந்தும், நதியின் வசீகரமாய் வளைந்து நெளிந்தும் உடலெங்கும் ஓடியதைக் கண்டான்.

அந்த ஆடைக்குள்ளே புரட்சி செய்துகொண்டிருந்த மேடுகளும் குன்றுகளும் அவன் கண்களை வம்புக்கிழுத்தன. அவனுடலில் சூடாக ஒரு நடுக்கம் பரவியது. மீதியை ஊகிக்கப் பயமாக இருந்தது அந்த வாலிபனுக்கு. ஊகித்தால்.... கட்டுமீறிவிடக் கூடிய உள்ளக் கிளர்ச்சி நன்றாகப் புரிந்திருந்தது அவனுக்கு.

மூச்சு வேகமாகி, இதயம் படபடத்து, கால்களினடியில் பூமி காணாமல் போய்...

தெரிந்த முத்துக்கள் பளபளத்தன. மேல்வரிசை முத்துக்களில் ஒன்று வரிசை தவறியிருந்தது. அதுதான் அப் புன்னகையை அசாதாரணமாக்குகிறதா என்று யோசித்தபடி நின்றான்.

தான் மெல்ல மெல்ல குழப்பத்தின் உச்சிக்குச் சென்றுகொண்டிருப்பது மட்டும் அவனுக்கு நிதர்சனமாய்த் தெரிந்தது.

கனவுக் கண்களுடன் நின்றிருந்தவன், கனவில் நடப்பவன் போலவே நடந்து அவளை நெருங்கினான்.

மதுமதி சுவருக்கும் அவனுக்குமிடையே அகப்பட்டுக்கொண்டாள். இன்னும் சற்றுத் திரும்பினாலோ தன் உடல் அவனுடலின் மீது உராய்ந்துவிடும் என்பதை அறிந்த மதுமதி, நெளியக் கூட முடியாமல் தவித்தாள்.

இயற்கை மிகவும் செழுமையாக்கியிருந்த அவள் வசீகர எழிலனைத்தையும் மிக நெருக்கத்தில் பருகிய கிறக்கத்தில் அவன் சிறிது நேரம் நின்றான்.

உள்ளூர ஓடிய உணர்ச்சிகளால் தன் கால்களால் நிற்கவும் முடியாமல் பலவீனப்பட்டுப் போவதை அறிந்து மதுமதி சுவரைப் பிடித்துக்கொண்டாள்.

அந்தத் தடுமாற்றத்தில் அவள் சேலை விலகி வெளிப்படுத்திய எழுச்சிகளை ஒருகணம் எழிற்கோ தவிர்க்க முடியாமல் சந்தித்தான்.

ஒரு கணம்தான்!

அவள் இடையைத் தாவி இறுக்கின அவன் கைகள். அவளை இறுக்கியதோடு நிற்கவில்லை அந்தக் கொடிய கைகள்! எதை எதையோ தேடி அலைந்தன. தேடலில் சிக்கிய மலர்களை மிருதுவாகக் கையாளத் தெரிந்திருக்கவில்லை அந்தக் காமக் கரங்களுக்கு. 'அலையும் அந்தக் கரங்களைத் தடுக்காமலிருந்தது மட்டுமல்ல, காட்டியும் கொடுக்கிறாளே பாவி!' என்று அவள் அங்கங்கள் சினந்தன.

'இவள் வெட்கங்கெட்டவள்' என்று முடிவு செய்தன. அவளோ எதையும் இலட்சியம் செய்யும் நிலைமையில் இல்லை. அவள் கையொன்று அவன் கையைப் பற்றி, அவன் தொட அச்சமுற்ற இடங்களுக்கு அழைத்துச் சென்றது.

அவன் தன்னை மறந்தான். சூழலை மறந்தான். இருவரையும் தவிர உலகில் யாரும் இல்லை என்ற நினைப்பில் அவள் அழகுகளைத் தேடினான். இம்சை செய்தான். பெரிய பெரிய இன்பங்கள் இம்சையில்தான் இருக்கின்றன என்று அந்த நேரத்தில் உணர்ந்தாள் மதுமதி.

அவள் மேனிதான் மலர்களால் செய்யப்பட்டதாயிற்றே! அதுதான் இத்தனை மென்மையாயும் குழைவாயும் இருக்கிறது என்று உணர்ந்தான் எழிற்கோ. பெரியதும் சிறியதுமான பல மலர்களால் தொடுக்கப்பட்ட மாலை இவள்! தொடுகை மட்டும் இதை அறியவில்லை. முல்லையும், குவளையும், காந்தளும், ரோஜாவுமாக...... எத்தனை எத்தனையோ அற்புத மலர்களின் வாசனையும் கலந்து இவளிடத்திலிருந்து வருகிறது! தளிரைக் காட்டிலும் மென்மையும், தண்மையும் நிறைந்த இவளுடல், தழுவப் பெற்றால் விட முடியாதது என்று நினைத்து மயங்கினான்.

மலர்களைத் தொட வேண்டிய மென்மையை மறந்தான். மாலையைப் பிய்த்தெறியும் விலங்கையே வரவேற்றாள் மதுமதியும்!

சொர்க்கமா, நரகமா என்று சொல்ல முடியாத ஒரு சொப்பன உலகத்துக்கு இருவரும் வெகு வேகமாக இழுத்துச் செல்லப்பட்டனர்.

***கோடல், எதிர்முகைப் பகவீ***
***முல்லை நாறுஇதழ்க் குவளையொடு***
***இடைப்பட விரைஇ, ஐதுதொடை***
***மாண்ட கோதை போல***
***நறிய நல்லாள் மேனி;***
***முறியினும் வாய்வது;***
***முயங்கற்கும் இனிதே.***
***(குறுந்தொகை : 62)***

---

## சிந்தியா பதில்கள்

**நீங்கள் பெரிதும் மதிப்பது யாரை? உண்மையைச் சொல்லுங்கள்!**
- நா. பிரியா, வெலிமடை.

'வாசகர்களை....' என்று சொன்னால், 'சுத்தாதே..... சுத்தாதே' என்று தொடுப்புக்குள் சிரிப்பீர்கள். பிறகு எப்படி நான் உண்மை பேசுவதாம்!

***

**இயக்குநர் இமயம் பாரதிராஜாவின் மகன் மனோஜினால் முன்னுக்கு வர முடியவில்லையே, ஏன்?**
- ரா. கௌரீஸ்வரன், வவுனியா.

வாத்தியார் வீட்டுப் பிள்ளை மக்கு.

***

**பிரசாந்தின் வரவிருக்கும் புதிய படம் என்ன?**
- எம்.ஆர்.எம். றிஸ்வான், கொழும்பு - 12.

'ஷொக்.' ராம்கோபால் வர்மாவின் ஹிந்திப் படமான 'பூத்'தை தமிழில் இயக்கியிருக்கிறார் தந்தை தியாகராஜன். "கர்ப்பிணிப் பெண்கள், இதயம் பலவீனமானவர்கள் இந்தப் படத்தைப் பார்க்க வேண்டாம்", "திரையரங்கில் தனியே இருந்து படத்தைப் பார்ப்பவர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் பரிசு" என்றெல்லாம் அவர் தடல்புடல் பண்ணுவதைப் பார்த்தால்......... தந்தையையே பாசத்துடன் நம்பியிருக்கும் பிரசாந்துக்கு இந்தப் படமும் மற்றுமொரு 'ஷொக்' தந்துவிடும் போல்தான் தெரிகிறது.

***

**மக்களை விழிப்போடு வைத்திருப்பவை பத்திரிகைகள்தானே?**

**சிந்தியா பதில்கள்**

இரா. சதீஸ், பொகவந்தலாவ.

இல்லை. நுளம்புகள்!

***

**கிழக்குப் பிரதேசவாதி என்ற பிரகடனமும் வீரப்பிரதாபமும் பார்த்தீர்களா?**
- ஜே. யோகநாதன், கல்லடி.

'அசிங்கமான நேர்மையீனத்தைக் காண்பித்துக்கொள்வதில் நமது பத்திரிகையாளர்கள் அரசியல்வாதிகளை விட மோசமானவர்கள்' என்று சொல்லப்படுவதை நிரூபிப்பது போலவே இவர்களும் நடந்து வெட்கப்படுத்துகிறார்கள். பிரதேசவாதத்தின் ஆரம்பப் போராளி பிறகு வன்னிப் புலிகளின் வழிகாட்டி என்ற சுயதம்பட்ட வரலாற்றுக்கிடையே, இன்னொரு இயக்கத்திலிருந்து புலிகளை மூர்க்கமாய் எதிர்த்து உட்கொலைகளுக்கும் காரணமாயிருந்ததை ஒளித்துவிடலாம் என்ற நப்பாசைதான்! அதை விட முக்கியம் வெளிநாட்டு 'அசைலம்' விரைவில் கிடைக்க எப்படி எழுத வேண்டும் என்ற வித்தை!

***

**நடிகைகளின் திருமணம் தோல்வியில் முடிவது ஏன்?**
- பெ. கோகிலன், மேபீல்ட்.

பெரும்பாலும் அவர்களைத் திருமணம் செய்துகொள்ள முன்வருபவர்களுக்கு அது மற்றொரு திருமணமாக இருப்பதால்!

***

**உலகில் மிக அழகான பெண்கள் அதிகம் உள்ள நாடு எது?**
- மனோ கோபாலன், ஹப்புத்தளை.

உலகம் சொல்வது லெபனான். நான் சொல்வது இங்கேயே!

***

**ஆண்கள் பெண்கள் மீது 'ஆடம் டீசிங்' வழக்குப் போட முடியுமா?**
-பே. உதயகுமார், திருகோணமலை.

தனது மேலதிகாரியான டெமி மூர் மீது அப்படி ஒரு வழக்கைப் போட்டு மைக்கல் டக்ளஸ் வெற்றி பெறுவதாக ஒரு ஹொலிவூட் திரைப்படம் பார்த்தேன். (சட்டென்று பெயர் ஞாபகம் வரவில்லை!) இங்கு அது எடுபடுமா தெரியவில்லை. எதற்கும், "நீங்கள் எல்லாம் அண்ணன் தம்பிகளோடு கூடப் பிறக்கவில்லையா?" என்று அவர்களிடமே வினயமாக முறையிட்டுப் பாருங்கள்!

***

**பெண்கள் தலையின் பின்புறம் கூந்தலில் மலர் சூடிக்கொள்வது ஏன்?**
- த. ராமநாதன், ஹட்டன்.

அட ராமா! இப்படியுமா எனக்குப் பரீட்சை வைக்க வேண்டும்..... ம்..... முன்புறம் மலர்கள் மீது வேறும் மலர்கள் எதற்கு?........ சரியா!

***

**விலங்குகளில் எதுவாவது பிறக்கும்போது அழுதுகொண்டே பிறப்பதுண்டா?**
- ம. ருத்ரா, சின்னசெல்வகந்த.

அவற்றுக்கென்ன...... பால்மா விலையேற்றம், பாடப் புத்தகங்களை உருப்போடுதல், பாஸ் எடுத்தல், அடையாள அட்டை காட்டுதல், அகதி வாழ்க்கை........ என்றெல்லாம் கிடையாதே!

***

**ஆசிய கிண்ணம் யாருக்கு?**
- கே. ஜெசிந்தன், தம்பிலுவில் 02.

மிகப் பொறுமையான, ஆனால் ஓட்டங்களைக் குவிப்பதிலும் சளைக்காத, அந்த அணியையே தாங்கி நிமிர்த்தக் கூடிய ஒரு முன், நடுவரிசை ஆட்டக்காரரைக் கொண்டிருக்கும் நாட்டுக்கு!

***

**உலகிலேயே சமாதிகளால் பெருமை பெறும் தேசம் எது?**
- ஆர். ரமேஷ், மன்னார்.

சமாதானத்தால் பெருமையடைவதை விட்டு இந்த விநாச விருப்பம் வேண்டாமே ரமேஷ்! உண்மையில் உலக அளவில் புகழ்பெற்ற சமாதிகள் இந்தியாவிலும் (தாஜ்மஹால்), எகிப்திலும் (பிரமிடுகள்) இருக்கின்றன.

***

**'களை பொருந்திய முகம்' என்கிறார்களே! அப்படி என்றால் என்ன சிந்தியா?**
- ஜெ. பிரபாகரன், கண்ணகிபுரம்.

அருகில் மனைவி இருக்கும்போது, அழகான முகங்களை எதிரில் பார்த்தால், அப்படிச் சிலர் சொல்வதுண்டு!

***



**பாராளுமன்ற கலரியை மூடிவிடுவது ஜனநாயக விரோதமானது என்று மாவை சேனாதிராசா எம்.பி. கூறியுள்ளாரே?**
- கு. சுந்தர், கொழும்பு - 05.

அப்பாடா! ஆக.... அவருக்கும் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் எவையெவை என்பது தெரிந்துதானிருக்கிறது..... ம்!

***

**நீர் யாருக்கு அல்லது எதற்கு அடிமை?**
- முஹமட் மாஜிஸ், மீராவோடை - 04.

மரியாதை மற்றும் அன்பு காரணமாக ஒருவரிடம் கீழ்ப்படிவோடு நடந்துகொள்ள வேண்டியிருப்பதை அடிமைத்தனமாக நான் எடுத்துக்கொள்வதில்லை.... ஹிஹி......

***

**விஜயகாந்தும் பாட்டாளி மக்கள் கட்சியுடன் மோதுகிறாரே....... அரசியலுக்கு வருவாரா? அல்லது ரஜினியைப் போல புஸ்வாணம்தானா?**
- வீ. மணிராஜா, பசறை.

விஜயகாந்த் இன்னொரு ரஜினிகாந்த் அல்ல என்றே தெரிகிறது. விஜயகாந்தின் இரசிகர் மன்றங்கள் ரஜினியுடையது போல் இன்னொருவரால் (சத்யநாராயணா) நிர்வகிக்கப்படாமல், தானே நேரடியாகவும் கட்டுக்கோப்பாகவும் நடத்தி வருகிறார். அதனால்தான் பா.ம.க. தாக்குதலுக்கு ரஜினி இரசிகர்கள் போலச் சிதறி ஓடாமல், பதில் தாக்குதல்களை அவர் இரசிகர்களால் நடத்த முடிந்திருக்கிறது. பா.ம.க. தன் போராட்டத்தை நிறுத்துவதாகவும் அறிவித்தது.

தவிரவும், நடிகர் சங்கத்துக்கு உருப்படியான தலைமையை வழங்கிக் காட்டியிருக்கிறார். காவிரிப் பிரச்சினையில் பாரதிராஜா - ரஜினி மோதலைச் சமாளித்த விதமும் ஓர் உதாரணம். இரசிகர் மன்றம் அரசியல் அநுபவத்தையும் இலேசாகப் பெற்றிருக்கிறது. ஏற்கெனவே உள்ளூராட்சித் தேர்தலில் நின்று மன்றப் பொறுப்பாளர்கள் சிலர் வென்றிருக்கிறார்கள்.

தி.மு.க.வுக்கும், அ.தி.மு.க.வுக்கும் மாற்றாக ஓர் இயக்கத்திற்கான வெற்றிடம் அங்கே இருக்கிறது. ரஜினியால் அதை நிரப்ப முடியாதென்று காட்டிவிட்டார். ஆக, விஜயகாந்த் அந்த இடத்தைப் பிடிப்பார் என்றே தெரிகிறது. தமிழ்நாட்டில் மூன்றாவது சக்தியான காங்கிரஸைப் பதவியில் அமர்த்தும் வலுவான இயக்கமொன்றை விஜயகாந்த் ஏற்படுத்தக் கூடும்.

***

# கிரிக்கெட்டின் வரலாறு – 5



இங்கிலாந்தில் சால்டர் ஹவுஸ் மற்றும் வெஸ்ட்மினிஸ்ட்டர் ஆகிய பாடசாலைகளுக்கிடையில் 1794இல் கிரிக்கெட் போட்டியொன்று இடம்பெற்றுள்ளது. உலக கிரிக்கெட் வரலாற்றிலே பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்றுள்ள முதலாவது கிரிக்கெட் போட்டி இதுவேயாகும். இதன்போது வெஸ்ட்மினிஸ்ட்டர் பாடசாலை அணி வெற்றியீட்டியது.

இலங்கையில் இடம்பெறுகின்ற பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகளில் நடைபெறுவது போன்று போட்டியைப் பார்த்துக்கொண்டிருந்த பாடசாலை கிரிக்கெட் பார்வையாளர்கள் மைதானத்துக்குள் நுழைந்து விக்கெட்டுகளைக் கழற்றிக்கொண்டு ஓடுதல் முதலான செயற்பாடுகளில் இறங்கியமை இப்போட்டியின்போதுதான் முதன்முறையாக இடம்பெற்றது.

இதே நேரம் 1800ஆம் வருடம் விளையாட்டுத்துறை தொடர்பிலான உலகின் முதலாவது நூல் வெளியிடப்பட்டது. ரி.போத்ஸ்வல் என்பவர் இதனது ஆசிரியராக இருந்து செயற்பட்டுள்ளார். 30 பக்கங்களைக் கொண்ட இந் நூலில் கிரிக்கெட் சட்டதிட்டங்கள், வரலாறு, மைதானங்கள் மற்றும் கிரிக்கெட் கழகங்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இதுகாலவரையில் இங்கிலாந்தில் மாத்திரமே நிலைகொண்டிருந்த கிரிக்கெட் விளையாட்டானது அவுஸ்திரேலியாவுக்கும் பரவியதன் காரணமாக சர்வதேச கிரிக்கெட் உலகில் புதுமையான வகையிலான மலர்ச்சி ஏற்படலாயிற்று. அவுஸ்திரேலியா முழுவதிலும் கிரிக்கெட் விளையாட்டு இங்கிலாந்தைக் காட்டிலும் வேகமாகப் பரவிச் செல்லலாயிற்று.

1803இல்தான் அவுஸ்திரேலியாவில் உத்தியோகபூர்வமான நிலையில் கிரிக்கெட் விளையாட்டு இடம்பெற்றது. இது சிட்னி நகரில் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கதாகும். இதேநேரம் 1855/56 காலகட்டத்தினுள் விக்டோரியா மாநிலத்துக்கும் நிவ், சவுத் வேல்ஸ் மாநிலத்துக்கும் இடையில் வருடாந்த கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதன்பின்னர், அவுஸ்திரேலியாவுக்குத் தென் பகுதியில் அமைந்துள்ள தீவான தஸ்மேனியாவிலும் கிரிக்கெட் விளையாட்டுப் பரவலாயிற்று.

1867/68 காலகட்டத்தில் விக்டோரியா மற்றும் நியூ சவுத் வேல்ஸ் மாநிலங்களுக்கிடையில் இடம்பெற்ற வருடாந்த கிரிக்கெட் போட்டியின்போது விக்டோரியா அணியைச் சேர்ந்த டிக்வொடில் 110 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். ஏற்றுக்கொள்ளப்பட்ட கிரிக்கெட் போட்டியொன்றின்போது அவுஸ்திரேலியா சார்பாக சதமொன்றைப் பெற்றுக்கொண்ட முதலாவது கிரிக்கெட் வீரர் இவரேயாவார்.

இவ்வாறு கிரிக்கெட் விளையாட்டு பிரபல்யமாகி வரும்போது கிரிக்கெட் மைதானங்களும் வேகமாக நிர்மாணிக்கப்படலாயின. இங்கிலாந்தில் ரிச்மன்ட் கிறீன், கெனின்டன் தொமன், டார்ட் போர்ட் ஹீத், மோல்ஸே ஹர்ஸ்ட் டுரஸ்ட் ஸ்கெவெசார், பென்னரிஸ்ட் பார்க் மற்றும் க்ளெப் ஹாம் கொமன் போன்ற மைதானங்கள் அக் காலகட்டத்தில் பிரபல மைதானங்களாகக் காணப்பட்டன.

அக் காலகட்டத்தில் டுரஸ்ட் ஸ்கெவெசார் என்றழைக்கப்பட்டுவந்த மைதானம் 1814 ஜூன் மாதம் 22ஆம் திகதி 'லோட்ஸ்' எனும் பெயரில் நவீனமயமாக்கப்பட்டதன் பின்னர் கிரிக்கெட் விளையாட்டு புதியதொரு வடிவத்தைப் பெற ஆரம்பித்துவிட்டது. இம் மைதானத் திறப்பு விழாவின்போது எம்.சீ.வீ. மற்றும் ஹார்ட்போஸயர் அணிகளுக்கு இடையில் கண்காட்சி கிரிக்கெட் போட்டி ஒன்று இடம்பெற்றது.

இதன் பின்னர் 1838இல் ட்ரண்ட் பிலிஜ் மைதானமும், 1845இல் ஓவல் மைதானமும், 1846இல் கேம்பிரிஜ் மைதானமும், 1847இல் புனித லோரன்ஸ் மைதானமும், 1857இல் ஒலட் ட்ரபட் மைதானமும், 1882இல் ஏஜ் பெஸ்டன் மைதானமும், 1887இல் ஹெடின்ங்லி மைதானமும் ஆரம்பிக்கப்பட்டன.

முதன்முறையாக சர்வதேசமட்ட மைதானமொன்று 1852இல்தான் அவுஸ்திரேலியாவில் ஆரம்பிக்கப்பட்டது. இது விக்டோரியா மாநிலத்தில் மெல்பர்ன் (எம்.சி.ஜே.) விளையாட்டரங்கமாகும். இதே வருடம் தஸ்மேனியா, ஹோபார்ட்டில் பெல்லிவ் மைதானமும், 1857இல் சிட்னி மைதானமும் 1871இல் எடிலேடி ஓவல் மைதானமும் 1859இல் பிரிஸ்பென்சில் கெபா மைதானமும், 1899இல் பர்த் வெக்கா மைதானமும், ஆரம்பிக்கப்பட்டன.

தென் ஆபிரிக்காவில் முதன்முறையாக 1889இல் போர்ட் எலிஸபெத், புனித ஜோர்ஜ் பார்க் மைதானம் ஆரம்பிக்கப்பட்டது. இதுவே அந் நாட்டின் முதலாவது சர்வதேச கிரிக்கெட் மைதானமாகும்.

இதன் பின்னர் மேற்கிந்திய தீவுகளிலும் நியூஸிலாந்திலும் கிரிக்கெட் மைதானங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

**-மைந்தன்**

## குண்டுதாரியின்........


(5ஆம் பக்கத் தொடர்ச்சி.)

**இப்படியானவர்கள்தான் தேசப் பற்றாளர்கள் என்று சாதாரண மக்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. குண்டு வெடித்து இருபத்து நான்கு மணி நேரம் கழிந்த நிலையில், புலிகள் மேற்படி குண்டுத் தாக்குதலைக் கண்டிப்பதாகவும் அதற்குத் தாம் பொறுப்பில்லையென்றும் அறிக்கை வெளியிட்டனர். அவ்வறிக்கை வந்து அடுத்த ஒரு மணித்தியாலத்துக்குள் யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஊடகங்களுக்கும் கொழும்பில் இருக்கும் ஊடகங்களுக்கும் இரகசிய அறிக்கை வந்தது, தங்களின் மறுப்பைப் போட வேண்டாமென்று. காரணம், தாங்கள் மறுத்தால் தங்கள் அளவுக்கு இன்னொரு சக்தி இருப்பதாகக் கருதப்படுமாம். இவற்றையெல்லாம் ஆராய்ந்த அமெரிக்கா தனது சூடான கண்டனத்தை வெளியிட்டது. இதைத் தொடர்ந்து ஜப்பான், கனடா, இந்தியா போன்ற நாடுகள் கண்டித்தன. இதற்கிடையே இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வெளியிட்ட அறிக்கையில், குண்டு வெடிப்பு போர் நிறுத்த ஒப்பந்த மீறலா என்பதைக் கூற முடியாது என்றும், புலிகளுடன் தொடர்பு கொண்டு வருவதாகவும், எனினும் தொடர்புகொள்ள முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. யுத்தம் ஆரம்பிக்கப்பட்டுவிடுமோ என்ற பதற்றச் சூழல் உருவாவது மாகாண சபைத் தேர்தலுக்குப் பாதகமாக இருக்கும் என்பதால் அரசு நேரடியாகப் புலிகளைச் சாடாமல், இச் சம்பவம் சமாதானத்தைக் குழப்பாது என வாலைச் சுருட்டிக்கொண்டு தன் இயலாமையைக் காட்டியது. இத்தனைக்கும் நடுவே அமைச்சர் டக்ளஸ், கருணாவை போன்று நாளைக்குப் பிரபாகரனும் ஜனநாயக வழிமுறைக்கு வர விரும்பினால் அதற்கு ஆதரவு கொடுக்கத் தயார் என்றும் தமிழ் மக்களுக்கு சரியான நியாயமான தீர்வு கிட்டும் வரை தனக்கு மரணமில்லை என்றும் கூறினார். தன்னைக் கொன்று விட்டால் இலங்கைவாழ் தமிழர்கள் மத்தியில் மாற்றுக் கருத்துக்கோ ஜனநாயக நடைமுறைகளுக்கோ இடமிருக்காது எனவும் கூறிய அவர், கருத்துக்களைக் கருவிகளால் அடக்க முடியாது என்பதை வலியுறுத்தினார்.**

# தீ விபத்து

காலையில் இளம் மொட்டுக்களாய் அம்மா, அப்பாவுக்குக் கை அசைத்து விட்டுச் சென்ற இளம் பிஞ்சுகள் அடுத்த இரண்டு மணி நேரத்தில் கரிக் கட்டையாகிப் போய்விட்டனர்.

ஒரு பாவமும் அறியாத அப்பாவிக் குழந்தைகள் தீப்பிடித்த ஒரு மணி நேரத்துக்குள் பலியானார்கள். அவர்களின் கடைசி நிமிடங்களை – தீயுடன் அவர்கள் நடத்திய உயிர் போராட்டத்தை நினைத்தால் நடுங்குகிறது. தங்கள் முகம் அடையாளம் காண முடியாதளவுக்குச் சிதைந்துவிட்டது தெரியாமல் உடல் வெந்துபோய் மருத்துவமனையில் அரை மயக்கத்தில் முனகியபடி கிடக்கும் குழந்தைகளைக் காணும் எவர்க்கும் கண்ணீரை அடக்கிவிட முடியாது.



எரிந்த பாடசாலை

இத் துயரத்திற்கு யார் பொறுப்பு? நான்கு அதிகாரிகளைப் பதவியிலிருந்து நீக்கினால் இவ் விவகாரம் முடிந்துவிடுமா?

தமிழ்நாட்டின் கும்பகோணத்தில் கடந்த 16.07.2004 வெள்ளிக்கிழமை பாடசாலைத் தீ விபத்தில் பரிதாபகரமான முறையில் உடல் கருகி மாண்ட 90 குழந்தைகளைப் பற்றியதே இது.

கும்பகோணத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ கிருஷ்ணா ஆரம்பப் பள்ளியின் கூரை ஓலையால் வேயப்பட்டதே தீ விபத்துக்குப் பிரதான காரணமெனத் தெரிவிக்கின்றனர். இக் காரணங்களை முழுமையாக ஏற்க முடியாது. தீ எப்படி ஏற்பட்டது? இந்தக் கேள்விக்கான விடையைக் காவற்துறை தற்போது ஆய்வு செய்து வருகிறது.

90 சிறார்களின் உயிரைப் பறித்த பாடசாலையானது 3 மாடிகளைக் கொண்டுள்ளது. இந்த மூன்றாவது மாடி முழுவதும் தீ பரவும் வரை சிறார்களை ஆசிரியர்களால் அல்லது சுற்றத்தார்களாலாவது காப்பாற்ற முடியாமலா போனது?

பாடசாலைகளில் ஓலைக் கூரைகளை அரசு தடைசெய்தும் அவ்வாறான கூரைகளுடன் இன்னும் பல பள்ளிகள் இயங்கி வருவதுதான் கவலைக்குரிய விடயம்.

இன்னும் ஒரு கும்பகோணச் சம்பவம் நடைந்துவிடாமல் தடுக்க வேண்டுமானால் அனைத்துப் பள்ளிகளையும் அரசின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டுவர வேண்டும். அரசு மட்டுமல்ல, தமது பகுதியில் இயங்கிவரும் பாதுகாப்பில்லாத பள்ளிகள் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியது மக்களின் கடமையும் கூட.

கருகிய மொட்டுக்கள்



இனி இதுபோன்ற ஒரு சம்பவம் நாட்டின் எப் பகுதியிலும் எந்தக் காலத்திலும் நடந்துவிடாமல் தடுத்தாக வேண்டிய கடமை ஒவ்வொரு அரசுக்கும் உண்டு.

உயிர் நீத்த மொட்டுக்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள். அதிகாரிகளின் அசமந்தப் போக்கு காரணமாகவே இவ்வாரான அனர்த்தங்கள் நடக்கின்றன. இவை தடுக்கப்பட வேண்டியதே இன்றையத் தேவையாகும்.

## எந்தக் கிழமையில் பிறந்தீர்கள்? என்ன அதிர்ஷ்டம் பெறுவீர்கள்?

மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.

சொல்பவர் :
ஜோதிட அறிஞர், பேராசிரியர்,
டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.,
(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)

### ஆதிக்கம் 3 : பிறந்த கிழமை ஞாயிறு

பிறப்பெண் 3ஐயும் பிறந்த நாள் ஞாயிற்றுக்கிழமையாகவும் கொண்ட நீங்கள் அடிப்படையிலேயே ஆடம்பரமாகவும் சுகபோகமாகவும் வாழ வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருப்பீர்கள். எப்படியும் பணம் சம்பாதித்து காணி, கட்டடம், கார் என்று வாழ ஆசைப்படுவதால் குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க முயற்சிப்பீர்கள். திடீரெனப் பணக்காரனாக வேண்டும் என்று ஆசைப்படுவீர்கள். இதனால் குதிரைப் பந்தயம், லாட்டரி (லொத்தர்) டிக்கட் இவற்றில் பரிசு பெற வேண்டும் என்று முயற்சி செய்வீர்கள். ஆனால், நீங்கள் 42 வயது வரை பெரிய பணத்தொகையினைப் பெற முடியாது. உங்களுக்கு 43 வயதாக இருக்கும் காலத்தில், ஆரம்பத்தில் நீங்கள் காட்டும் முயற்சி தீவிரம் இறுதி வரைக்கும் இருக்காது. நீங்கள் செய்யும் காரியத்தில் தடைகளோ அல்லது இடையூறுகளோ ஏற்பட்டால், அந்தக் காரியத்தினை மேற்கொண்டு செய்யாமல் இடையிலே விட்டுவிடுவீர்கள். நீங்கள் செய்கின்ற காரியங்களில் தடைகள் அல்லது இடையூறுகள் ஏற்படாமல் இருந்தால், அந்தக் காரியத்தினை தொடர்ந்து செய்வீர்கள்.

வேலை விடயத்தை எடுத்துக்கொண்டால், முடியாதது என்று எதுவுமே உங்களிடம் இல்லை. எந்த வேலையாக இருந்தாலும் சிறப்பாகச் செய்து முடிக்கும் திறன் உங்களிடம் இருக்கிறது. நேர்மை என்பது ஒரு மனிதனின் புனிதமான குணங்களில் ஒன்று. நாணயம் என்பது ஒரு மனிதனின் மேலான நற்பண்புகளில் முக்கியமானது. உண்மை என்பது தெய்வீகத்தன்மைக்கு நிகரானது என்று நம்புகின்ற உயர்குணம் பெற்றவர் நீங்கள். ஆனால் மேற்கூறிய பண்புகளுக்கு மாற்றமாக, அதாவது பொய் சொல்லுதல், வாக்குத் தவறுதல், ஒழுக்கயீனமாக நடத்தல் போன்ற செயல்களை உடையவர்களை வெறுத்து ஒதுக்கிவிடுவீர்கள்.

மனிதனாகப் பிறந்தது புனிதனாக வாழ்வதற்காக என்ற கொள்கை மீது அதிக பற்றுதல் கொண்டவர்தான் நீங்கள். மனிதன் தன்னிடம் மறைந்து கிடக்கின்ற மிருக குணத்தை நீக்கி உண்மையான மனிதனாக வாழ வேண்டும் என்ற கோட்பாட்டைப் பின்பற்றுகின்றவர்தான் நீங்கள். நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தைக் காண்பீர்கள்.

தொழில் முறையினைப் பொறுத்தவரையில் ஒரு நிலையான தொழிலில் அமர்ந்து படிப்படியாக முன்னேறுவீர்கள். செய்யும் தொழிலே தெய்வம் என்ற கருத்தினைப் போற்றியும் பின்பற்றியும் நீங்கள் நடப்பவராக இருப்பதனால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள். இதன் காரணமாக பெரிய பதவியில் அமரக்கூடிய வாய்ப்பும் வசதியும் உங்களுக்கு ஏற்படும்.

நேர்மை, அன்பு, உண்மை, நாணயம், தொழில்பக்தி போன்ற உயர்ந்த குணாம்சங்கள் உங்களிடம் அதிகம் காணப்படுவதன் காரணமாகப் பிறர் உங்களை மதித்துப் போற்றக்கூடிய சூழ்நிலை ஏற்படும். எப்பொழுதும் உங்களை மற்றவர்கள் மதிப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. இவ்வாறான உயர்ந்த அம்சங்கள் நிறைந்து காணப்படுபவராக நீங்கள் இருப்பதனால் வருமானத்திற்கு எந்தவிதமான குறைச்சலும் இருக்காது. இடையிடையே சிறு சிறு கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டாலும் அதனை இலகுவாக்ச் சமாளித்து முன்னேறக்கூடிய வல்லமை பெற்றவர்தான் நீங்கள்.

உங்களுடைய தேகநிலை சூடான தன்மை கொண்டதனால் சூட்டுத்தன்மை கொண்ட நோய்கள் உங்களுக்கு ஏற்படும். ஆகவே, குளிர்ச்சி பொருந்திய உணவு வகைகளை நீங்கள் அதிகம் சாப்பிட்டுவர வேண்டும். இதனால் உங்களுக்கு ஏற்படக்கூடிய வாய்ப்புண், மலச்சிக்கல், நெஞ்சு எரிவு, வயிற்று வலி போன்ற நோய்கள் வராமல் இருக்கும் அல்லது இலகுவாகக் குணமாகிவிடும். தயிர், மோர், இளநீர் போன்ற உணவு வகைகளை நீங்கள் அதிகம் சாப்பிட வேண்டும்.

மனிதனாகப் பிறந்த யாவருக்கும் அவ்வப்போது ஆபத்துக்கள் வருவது இயல்பானது. மேலே வானம் கீழே பூமி இதற்கிடையில் மனிதனுடைய வாழ்க்கை. ஆகவே கண்டம் ஏற்படுவதைத் தவிர்க்கவோ, தடுக்கவோ முடியாது. இதனால் 7ஆவது 21 வயதுகளில் உங்களுக்குக் கண்டம் ஏற்பட்டு விலகும். நீங்கள் பயப்படத் தேவையில்லை.


உங்களுக்கு வாழ்க்கையில் பல திருப்பு முனைகளையும், வெற்றிகளையும், புகழையும், சிறப்புக்களையும் ஏற்படுத்துக்கூடிய அதிர்ஷ்ட எண் எது தெரியுமா? எண் 7. ஆகவே ஒரு மாதத்தில் வரக்கூடிய 7, 16, 25 ஆகிய திகதிகளில் நல்ல காரியங்களை ஆரம்பியுங்கள். வெற்றியும் மகிழ்ச்சியும் உங்களுக்கு உண்டு. இந்தத் திக்திகள் நீங்கள் பிறந்த கிழமையாகிய ஞாயிற்றுக்கிழமையில் அமையுமாக இருந்தால் இதற்குரிய நற்பலன் மிக மிக விசேடமானதாக அமையும் என்பது உறுதி.

நீங்கள் சந்தன நிறத்தில் சாட்டு, வெள்ளை நிறத்தில் வேட்டியோ, சாரமோ அணிவது அதிர்ஷ்டத்தை உண்டாக்கும். நீங்கள் வசிக்கின்ற இல்லம் உங்கள் வாழ்க்கையில் பெரும் முக்கியத்துவத்தை வகிக்கின்றது. அதனால் இல்லம், நல்லவைகளை ஏற்படுத்த வேண்டும். ஒரு காரியத்தை முதன்முதலில் வீட்டிலிருந்துதான் ஆரம்பிக்கின்றீர்கள். அதனால் நீங்கள் வசிக்கின்ற வீடு உங்களுக்கு அதிர்ஷ்டத்தைத் தர வேண்டும். அதிர்ஷ்டமாக அமைய வேண்டும். ஆகவே, உங்கள் இல்லத்தின் இலக்கத்தை 7 அதாவது 7, 16, 25 இந்த ஒழுங்கில் வைத்துக்கொள்ளுங்கள். வீடும் உங்களுக்கு யோகமாக அமையும்.

ஆகவே, பிறப்பெண் 3ஐயும் ஞாயிற்றுக்கிழமையினையும் யோகமாகக் கொண்ட நீங்கள் வாழ்க்கையில் ஜெயம் பெற என் ஆசீர்வாதங்கள்.

மூன்று, ஞாயிறோடு சேர்ந்து கூட்டாக அமைந்து வந்தால் பட்டாடை சுக போகம் வரும். கட்டாயம் அதிசிறப்பு உண்டாகும்.

*(அடுத்து ஆதிக்கம் 4 திங்கட்கிழமை பிறந்தவர்களைப் பற்றி பார்ப்போம்)*



# மாஜிக் தந்திரங்கள்

"மாஜிக் தந்திரங்கள்" குறித்த பயிற்சியும் அதனோடு ஒட்டிய சுவைமிகு தகவல்களும் தொடர்ந்து வெளிவரும். மாஜிக் பிரியமுடைய நீங்களும் மாஜிக் நிபுணராகத் திகழ எமது வாழ்த்துக்கள்.

காட்சி நடத்துகிறவர் கையில் பூவை எடுத்துக்கொண்டு வந்து சபையோரிடம் பரிசோதனைக்குக் கொடுத்துபரிசீலனை செய்யப்பட்ட பின் அதை வாங்கி வந்து மேடையில் ஸ்ரூலின் மேல் உள்ள முக்காலியின் மேல் வைத்து விட்டு, பிறகு மேசை அருகே சென்று மைச் சிமிழை எடுத்து வந்து அதைத் திறந்து அதிலுள்ள மையை சபையோருக்குக் காண்பித்து, வலது கை ஆள் காட்டி விரலை சிமிழில் விட்டு சிறிதளவு மையை எடுத்து அதை காகிதப் பூவின் மேல் தடவுவது போல பாவனை செய்து பூவின் நடுவிலுள்ள வளையத்தில், மெழுகு உருண்டையைச் செலுத்தி மறுபக்கம் எடுத்துச் சுற்றி, பூ நூலை விட்டு கழன்று விடாதபடி கெட்டியாகப் பிடிக்கும்படிச் செய்து, ஸ்ரூலின் மேல் வைத்துவிட்டு சிறிது தூரம் தள்ளி நின்று மந்திரக் கோலை ஆட்டி ஒன்-டு த்ரி என்று உதவியாளருக்கு அறிவிப்புக் கொடுத்து "பூவே மெதுவாக மேலே கிளம்பு" என்று சொல்லும் பொழுது உதவியாள் நூலை மெது மெதுவாக மேலே தூக்க வேண்டும். சுமார் ஒரு மீற்றர் தூரம் மேலே தூக்கியபின் மந்திரக்கோலை மேடையைச் சுற்றி பறக்கச் சொல்வது போல சுழற்றி, "பூவே, மேடையைச் சுற்றிப் பற" என்று சொன்னவுடன் உதவியாள் பூ பறக்கும்படி நூலைச் சுழற்ற வேண்டும். இந்த விதமாக மூன்று முறை சுற்றியபின் சுற்றுவதை நிறுத்தி மையத்திற்கு வரும்படி செய்து அதை முக்காலியின் மேல்வந்து நிற்கும்படி செய்ய வேண்டும்.

பூ ஸ்ரூலின் மேல் அமர்ந்தவுடன் காட்சி நடத்துகிறவர் அதன் அருகே சென்று நூலிலிருந்து பூவைக் கழற்றிவிட வேண்டும். கழற்ற முடியவில்லையானால் நூலை அந்த இடத்தில் துண்டித்துவிட்டு பூவை எடுத்துவந்து சபையோரிடம் காண்பித்து விட்டு, மேஜை மேல் கொண்டு வைத்துவிட வேண்டும்.


***குறிப்பு :-*** நூலைப் பூவுடன் இணைக்கும்பொழுது அதைச் சபையோர் தெரிந்துகொள்ள முடியாத அளவில் மை தடவுவது போல நடித்துக்கொண்டே பூவில் நூலை இணைக்க வேண்டும்.

மேடையில் பூவைச் சுழலச் செய்யும் பொழுது ஒரே நிதானமாகச் சுழற்ற வேண்டும். அதிக அளவில் சுழன்று எதிலும் மோதாதபடி சுழற்ற வேண்டும்.

பூவிலிருந்து நூலை அகற்றும்பொழுது மிக எச்சரிக்கையாக அகற்ற வேண்டும். சபையோர் சந்தேகப்படாதபடி தந்திரமாக நடந்துகொள்ள வேண்டும்.

## சிறுமியை பெட்டியில் வைத்து கம்பிகளால் குத்துதல்

இது ஒரு பெரிய மாஜிக் வித்தை. இந்தக் காட்சியை நடத்துவதற்கு சுமார் ஐந்து வயதுள்ள விவரம் தெரிந்த சிறுமி தேவை. இந்தச் சிறுமிக்கு நல்ல பயிற்சியளித்து வைத்துக்கொள்ள வேண்டும். இதற்கு தனிப்பட்ட முறையில் ஒரு கறுப்புக் கோட் தைக்க வேண்டும். சிறுமியைத் தாங்கக் கூடிய அளவில் கீழ்க்கண்ட அளவு முறையில் ஒரு ஸ்டாண்டு தயாரிக்க வேண்டும். இந்த ஸ்டாண்டை இரண்டு கனத்த தகடுகளினால் தயாரிக்க வேண்டும். இதன் மேல் இரு தகடுகளிலும் இரண்டு வளைவுகள் செய்து, இந்த இரண்டு தகடுகளையும் விலகாமல் ஒரே அளவில் இணைத்து இருக்க மத்தியில் ஒரு ஓ போன்ற தகட்டை இணைக்க வேண்டும். இந்த



இரண்டு கீழ் நுனிகளையும் 'ட' போல வளைத்து அதன் குறுக்கே ஒரு சிறு பலகையை ஊஞ்சல் போல இணைத்து இதற்கு கறுப்பு வர்ணம் அடித்துவிட வேண்டும். இது எப்படி இருக்க வேண்டுமென்றால், இந்த ஸ்டாண்டை காட்சி நடத்துகிறவர் தன் இரு தோள்பட்டைகளிலும் முதுகுப் பக்கம் மாட்டித் தொங்கவிட்டுக் கொண்டால் அது சபையோருக்குத் தெரியாமலிருக்க வேண்டும். இப்படித் தொங்கும் ஸ்டாண்டில் கீழ்ப் பக்கமுள்ள சிறு பகுதியில் ஒரு சிறுமி, காட்சி நடத்துகிறவரின் முதுகோடு ஒட்டி நிற்க வசதியாக இருக்க வேண்டும். இந்தச் சிறுமி நிற்பது சபையோருக்குத் தெரியக் கூடாது. அதே நேரத்தில் தோள் பட்டையில் மாட்டியிருக்கும் வளைவுத் தகடும் சபையோருக்குத் தெரியக் கூடாது. இதற்கு அவர் அணியும் கறுப்புக் கோட்டின் தோள் பட்டைக்குக் கீழ் முதுகுப் பக்கமாக ஸ்டாண்டின் வளைவு உள்ளே போகும் அளவிற்கு இரண்டு துளைகள் செய்து வைத்திருக்க வேண்டும். இந்த வகைக் கோட்டை அணியும்முன் ஸ்டாண்டின் இரு வளைவுகளையும் கோட் துளையில் சொருகிய பின்பக்கம் ஸ்டாண்டு தொங்கும்படி பிடித்துக்கொண்டு கோட்டை அணிய வேண்டும்.

அதன்பின் காட்சிக்குப் பயன்படுத்தப் போகும் சிறுமியை நிற்க வைத்து அதன் உயரத்திற்கு மேல் 57 செ.மீ.ரைச் சேர்த்து மொத்த உயரத்தைக் கணக்கிட்டு வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு சிறுமியின் உடல் பருமனை அளந்து அந்த அளவிற்கு மேல் 8 செ.மீ. கூடுதலாக வைத்து அந்த அளவையும் குறித்துக்கொண்டு, நீண்ட உயரத்தில் சுமார் ஒரு செ.மீ. கனமுள்ள மரப்பலகையைக் கொண்டு ஒரு பெட்டி தயாரிக்க வேண்டும்.

இந்தப் பெட்டி எப்படி இருக்க வேண்டுமென்றால் நடுவில் உள்ள சதுரப் பலகையில் சிறுமியை நிற்க வைத்து, நான்கு பக்கமுள்ள பலகைகளை மேல் நோக்கித் தூக்கி மூடினால், அது ஒரு பெட்டி போலாக வேண்டும். உள்ளே சிறுமி இருக்க வேண்டும். இந்த நான்கு கதவுகளின் அடிப்பாகத்தையும், அடிப்பலகையாக உள்ள சதுரப் பலகையின் விளிம்பில் கீல் வைத்து மேலே தூக்கி மூடவும், இறக்கி திறக்கவும் கூடிய வகையில் இந்தக் கதவுகளை இணைக்க வேண்டும். ஒவ்வொரு கதவுக்கும், அதாவது இடம், வலமுள்ள இரண்டு கொக்கிகளுமாக மொத்தம் எட்டு கொக்கிகளும், இதற்கு எதிர்ப்புறமாக உள்ள இரண்டு கதவுகளிலும் மேலே இரண்டு கொக்கி மாட்டும் வளையங்களையும், கீழே இரண்டு கொக்கி மாட்டும் வளையங்களையும் திருகிவிட வேண்டும். இவற்றை இணைத்துவிட்டு பெட்டியை சரியாக மூட வருகிறதா? திறக்க வருகிறதா? என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

இந்த வேலை முடிந்தபின் ஒவ்வொரு கதவுப் பலகையிலும் 4 மி.மீட்டர் இடைவெளிக்கு ஒரு துளை வீதம் பலகையின் அளவை துளை போட வேண்டும். இந்தத் துளை சுமார் ஒரு செ.மீ. அகலமுள்ளதாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் ஒரு பலகையில் இருக்கும் துளையில் ஒரு கம்பியை விட்டுச் சொருகினால் அது எதிர் பலகையிலுள்ள துளையில் நேராகப் புகுந்து மறுபக்கம் வரக்கூடிய அளவில் இருக்க வேண்டும்.

இந்த விதமாக நான்கு பலகைகளிலும் துளையிட வேண்டும். ஒரு கம்பியை பலகையின் துளையில் சொருகினால் அது மறுபக்கத் துளை வழியே வருமல்லவா? அப்படி வெளியே வரும் கம்பியின் முனை சுமார் 4 செ.மீட்டர் அளவு பெட்டிக்கு வெளியே இரண்டு பக்கமும் நீண்டிருக்கும் வண்ணம் எல்லா கம்பிகளையும் வெட்டி வைத்துக்கொள்ள வேண்டும். இந்தக் கம்பி 8 செ.மீட்டர் கனம் இருக்க வேண்டும்.

தொடர்ந்து வரும்..........

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை.
*-காதில பூ கந்தசாமி-*

வணக்கம். வந்தனம்! வாசகப் பெருமக்களே! உங்களது வாசனைத் தாகத்துக்கு இப்பதான் ஒரு சோதனைக் காலம் வந்திருக்கிறதாத் தெரியுது. அதாவதுங்கோ, உங்களுக்கு என்ன விதத்தில விஷயங்கள வாசிக்கப் பழக வேணுமெண்டு எங்கட தமிழ்ப் பத்திரிகை உலகம் வலு பக்குவமாக விளங்கப்படுத்திக்கொண்டு வந்தது. ஆனால் பாருங்கோ, இப்ப திடுதிடுப்பெண்டு ஏதோ விதமான குழப்பங்களைச் செய்து எங்கட வாசகர்கள் வலு கூலாப் பாத்துக்கொண்டிருந்த பிலிமைக் கெடுக்கப் பாக்கினம். இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தை எடுத்துக்கொள்ளுங்கோ. சமாதானத்தைக் கெடுக்கப் பாக்கிறதாவெல்லோ காட்டப் பாக்கினம். எவ்வளவு கஷ்டப்பட்டு இதுக்கெல்லாம் நாங்கள் கதை சொல்ல வேண்டிக் கிடக்குது.

எங்கட ரவிராசண்ணை தன்ர லோயர் புத்தியக் கசக்கி வலு வடிவா விஷயத்தைச் சொல்லியிருந்தார். அந்த மாதிரியெல்லோ நாங்கள் திங்க் பண்ண வேணும். ஆனால் சில அரைகுறைகள் பேச வெளிக்கிட்டு "எங்கப்பன் குதிருக்குள்ள இல்லை" எண்ட கணக்காத் தாங்களே விஷயத்தப் போட்டு உடைச்சிடுவினம். அதால பாருங்கோ இவயளுக்கெல்லாம் எப்பிடிக் கதைக்க வேணுமெண்டு படிப்பிக்க வேண்டிக் கிடக்கு.

சரி இந்தக் குண்டுவெடிப்புப் பற்றி நாங்கள் எப்பிடிச் சொல்லலாமெண்டு கேப்பியள். சரியான கேள்வி. இதுக்குப் பல வழிகளில பதில் சொல்லலாம். சொல்லேக்க கவனிக்க வேண்டிய விசயம் என்னெண்டால், ஒண்டு, யாருக்குக் கதை சொல்லிறம் எண்டது. அதாவது உள்நாட்டுக்காறரா, வெளிநாட்டுக்காறரா, எங்கட சனமா, பிறத்தியா, டிப்ளோமட்டிக் தரப்பினரா, சாதாரண தரப்பினரா எண்டது. அதோட, எந்த மொழியில; தமிழிலயா, சிங்களத்திலயா, ஆங்கிலத்திலயா எண்டதுக்கும் தகுந்தாப் போல பதில் சொல்ல வேணும். ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொரு மாதிரிப் பதிலிருக்கு. எங்கட சனமெண்டு கண்டால் அவைக்கு அப்பிடியே ஒப்புவிக்கிற ஒரு வாய்பாடு இருக்கு. அதத் தவறாமல் சொல்லிக்கொண்டேயிருக்க வேணும். எந்த இடத்திலயும் மறந்திடக் கூடாது. வெளிநாடெண்டால், அவைக்கு எந்தளவு விசயம் தெரியுமெண்டு பாத்து, அதுக்குத் தக்கதாக் கதையளக்க வேணும். மோட்டுத்தனமாக் கதைச்சு மடப் பட்டம் கட்டுப்படக் கூடாது. டிப்ளோமட்டிக்காறரிட்ட வலு கவனமாய் இருக்க வேணும். பிரச்சினையான சந்தர்ப்பமெண்டால் மொக்குத் தனமாய் வலியப் போய் மாட்டுப்பட்டுக்கொள்ளக் கூடாது. எதுக்குச் சொல்லுறனெண்டால், எங்கட சம்பந்தனாரும் கஜேந்திரனாரும் இப்பிடித்தான் அமெரிக்காவுக்குப் போனவை, சும்மாயிராமல் கிரிஸ்டினா ரொக்காவை எட்டிப் பாக்கப் போய் குட்டு வாங்கிக்கொண்டு வந்திருக்கினம். இதில முட்டாளான முட்டாள்தனம் என்னவெண்டால், அமெரிக்கன் எம்பஸிக்கு முன்னால குண்டு வெடிக்குது, அடுத்த கணமே அமெரிக்காவுக்கு ரிப்போட் போயிருக்குமெண்டு தெரியாமல் வேற கதை சொல்லப்போய், எங்கட தரப்பினரே பச்சைப் பொய்யர் எண்ட அபிப்பிராயத்தையெல்லோ விதைச்சுப்போட்டு வந்து நிக்கினம். இனி என்னத்தைச் சொன்னாலும் எங்கள நம்புவினமே? விசுவாசம் இருக்கத்தான் வேணும். அதுக்காக வில்லங்கத்தை விலைக்கு வாங்குமாப் போல வெளிநாட்டில போயும் குலைக்க வேணுமே?

போகட்டும் விடுங்கோ. அதுசரி. இப்ப விஷயத்துக்கு வருவம். குண்டுவெடிப்பு பற்றி என்ன சொல்லுறதெண்டு கேட்டியள. எங்கட சனமெண்டால் நோ புறப்ளம். எடுத்தாப் போல சொல்லலாம், "உது துரோகிகளின்ர வேலைதான்." விஷயம் குளோஸ்! யாரந்தத் துரோகியெண்டெல்லாம் அவைக்குச் சொல்லத் தேவையில்லை. எங்கட சனத்துக்கு நாங்கள் யாரைச் சொல்லுவமெண்டு ரெடிமேடாவே தெரியும். விளப்பம் கொஞ்சம் குறைஞ்சவை எக்கணம் திருப்பிக் கேட்டால், கிழக்கால கையக் காட்டுங்கோ, ஆக்கள் 'ஓஹோ' எண்டு சொல்லித் தலையை ஆட்டுவினம். "அவையேன் செய்திச்சினம் எண்டு யாரும் கேட்டால் அதுக்கும் பதிலிருக்கு. அதாவது பாருங்கோ, "எங்கட போராட்டத்துக்கு மேல அபாண்டப் பழியச் சுமத்தத்தான்!"

இங்கிலிஷ் பேப்பர்காறரெண்டால், நீங்கள் ஒண்டுக்கும் நேரடியாப் பதில் சொல்லப் போகக் கூடாது. இடக்கு முடக்காய் ரெண்டு பதில் கேள்வியக் கேட்டுக் குழப்பியடிச்சுப் போடுறதுதான் கெட்டித்தனம். எப்பிடியெண்டு கேக்கிறியளோ? எங்கட ரவிராசண்ணை சொன்ன மாதிரி, "பொலிஸ் ஸ்டேஷனுக்க கொண்டு போகக்க வாசலில வைச்சே செக் பண்ணாமல் விட்டது ஏன்" எண்டு ஜம்பமா கேள்வி போடுங்கோ. கேட்டவர் அசந்தவராயிருந்தால், "ஏன் பொலிஸ் ஸ்டேஷனிலயே யாரும் குண்டை வெடிக்க வைச்சிருக்கலாம்தானே" எண்டு லொஜிக்காத் திருப்பியடியுங்கோ. 'போலிஸ்'க்கு என்ன வில்லங்கம் தற்கொலை செய்து சாக வேணும் எண்டு யாரும் யோசிக்க மாட்டானோ' எண்டு கவலைப்படாதேங்கோ. எங்களுக்கு வேணுமெண்டால் எவனும் சாவான். இந்தியாவில எத்தின பேர் காசை வாங்கிக்கொண்டு தீக் குளிக்கிறான். இங்க ஏன் நடக்காது? சரி, டிப்ளோமட்டிக்காறரிட்டதான் வலு கவனம். பிரச்சினையான நேரத்தில பேசப் போகாமலிருக்கிறதே நல்லது. இல்லாட்டால் எட்ட நிண்டு சொல்ல ஒரேயொரு வாக்கியம் இருக்கு. அதையே மந்திரம் போலத் திருப்பித் திருப்பிச் சொல்லலாம். "சமாதான முயற்சிகளை உடனடியாக மேற்கொள்ள வேணுமெண்ட அறிகுறிதான் இது" எண்டு ஒரு வேதாந்தி மாதிரிப் பேசிப்போட்டு இருங்கோ. "ஏன்ராப்பா அந்த அறிகுறிய இப்பிடிக் குண்டாவா வெடிக்க வைக்க வேணும்" எண்டு யாரும் கேக்கலாம். கேட்டால் கேளாதது போல இருங்கோ. வேற என்ன செய்யிறது. "யாரப்பா அந்த அறிகுறியை வெளிக்காட்டினது" எண்டு கேட்டால், ஒண்டுஞ் சொல்லப் போகாதேங்கோ. அறிகுறி தான் தானாவே 'தான்தான் அறிகுறி'யெண்டு எழும்பிக் காட்டிப்போட்டு இருந்திட்டுதெண்ட கணக்கா விட்டிடுங்கோ. இப்ப விளங்குதோ எப்பிடிப் பேசிறதெண்டது. புரிஞ்சால் சரி!

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(25.07.2004 தொடங்கி 31.07.2004 வரை)

**சோதிட மாமணி தில்லை**

## இந்த வாரக் கிரக நிலை

கர்க்கடகம் - சூரியன், புதன், செவ்வாய், சிங்கம் - வியாழன், துலாம் - கேது, மேடம் - இராகு
மிதுனம் - வெள்ளி, சனி
சந்திரன் துலாம், விருச்சிகம், தனு இராசிகளில் இந்த வாரம் சஞ்சரிப்பார்.

***மேடம் :*** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் நிலை நன்மை, பண வரவு, உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை, அன்னியர் உதவி, உத்தியோகம் சிரமம், வீண் அலைச்சல், மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04**

***இடபம் :*** (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் பலிதம், பண வரவு தடை, வீண் செலவு, மனக் கலக்கம், உத்தியோக மேன்மை, மனக்குறையதிகம், மாணவர் கல்வி மந்தம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02**

***மிதுனம் :*** (மிருக சீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) தொழில் சிறப்பு, உயர்ந்த எண்ணம், மன மகிழ்ச்சி, பிரயாண மிகுதி, உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07**

***கர்க்கடகம் :*** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் சிக்கல், அன்னியர் உதவி, மனக்குறையதிகம், பணக் கஷ்டம், உத்தியோகம் சிரமம், மேலதிகாரி கள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05**

***சிங்கம் :*** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் பலிதம், பண வரவு, வெளியிடப் பயணம், கௌரவம், செலவு மிகுதி, பிள்ளைகளால் தொல்லை, உத்தியோக முயற்சி, பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02**

***கன்னி :*** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் உயர்ச்சி, பணக் கஷ்டம், அன்னியரால் தொல்லை, பெரியோர் நட்பு, உத்தியோக நன்மை, பதவி மாற்றம், மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06**

***துலாம் :*** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் மாற்றம், செலவு மிகுதி, தேக சுகம் பாதிப்பு, வீண் மனஸ்தாபம், உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05**

***விருச்சிகம் :*** (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை ) தொழில் பலிதம், பண வரவு, காரியானுகூலம், குடும்ப நன்மை, உத்தியோக முயற்சி, பதவி மாற்றம், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 07**

***தனு :*** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் நன்மை, பெரியோர் உதவி, காரிய நட்டம், வீண் குறை கேட்டல், உத்தியோகம் பயம், மேலதிகாரிகள் கெடுபிடி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03**

***மகரம் :*** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் அலைச்சல், காரியக் கேடு, கௌரவக் குறைவு, துர்நடத்தை, உத்தியோக முயற்சி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02**

***கும்பம் :*** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) தொழில் நட்டம், பண விரயம், வெளியிடப் பயணம், மனக் கலக்கம், உத்தியோக நன்மை, பாராட்டு, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04**

***மீனம் :*** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் உயர்ச்சி, காரியானுகூலம், உறவினர் தொல்லை, பணக் கஷ்டம், உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01**

## மாணிக்கங்கள்



நேரில் வருபவர்களுக்கு மட்டுமே இந்தப் பாக்கியம்.
ஒவ்வொரு பிரச்சினைக்கும் அபூர்வமாகச்
செயற்படக்கூடிய அபூர்வ சக்தியுள்ள மாணிக்கக் கற்கள் உண்டு.
முதலில் ஜாதகக் கணிப்பைப் பார்வையிட்ட பின்னரே
தெய்வீக உரு செய்து கொடுக்கப்படும்.
தேவையானவர்கள் மட்டுமே நேரில் வரவும்.

பேராசிரியர். டாக்டர் பி.கே.சாமி J.D.G.A.N.JP
இல. 162 கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு — 13.
தொலைபேசி — 2342463, 2342464





## நிபுணத்துவ கைரேகை



கைரேகை என்பது ஒரு கடல் போன்றது. அப்படியே அதை ஆராய்ச்சி செய்வதென்றால் ஆதி பராசக்தியின் அருட்கடாட்சம் வேண்டும். இக் கூற்றுக்கமைய உலக நாடுகளுக்கு சென்று கைரேகைக் கலையை அக்குவேறு ஆணிவேறாக அலசி ஆராய்ந்து நிபுணத்துவம் பெற்ற என்னைச் சந்தியுங்கள். உங்கள் கைரேகையை பார்த்துப் பலா பலனை தெரிந்து கொள்ள முன்னறிவித்தலுடன் வந்தால் கைரேகை வாசிக்க காலநேரம் கொடுக்கப்படும்.



Tel: 2344832
கே.கங்காதரன் (M.A) J.P.
162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13.
Booking Time 4.00 p.m To 7.00 p.m Only



## வருக வருக

எயிட்ஸ் பற்றி போதிய அறிவு இன்னும் மக்கள் மத்தியில் ஏற்படவில்லை. இது குறித்து சில முடிவுகளை எடுக்க 11.07.2004ஆம் திகதி மகாநாடு தாய்லாந்தில் ஆரம்பமானது. மகாநாட்டுக்கு வருகை தந்த சர்வதேச பிரதிநிதிகளை வரவேற்பதற்காக யானைகள் சாகசம் செய்கின்றன.



2002ஆம் ஆண்டு கோடை காலத்தில் வெளியாகி உலகமெங்கிலும் 820 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் குவித்து, அமெரிக்கத் திரைப்பட வசூல் வரலாற்றிலே 5ஆவது இடத்தைப் பிடித்து, திரைப்பட உலக வரலாற்றிலேயே மிகப் பெரிய சாதனையை உருவாக்கிய படம் 'ஸ்பைடர் மேன்'. இதன் தொடர் இரண்டாம் பாகமாக கடந்த ஜூன் 30ஆம் திகதி உலகெங்கும் வெளியிடப்பட்டது. பிரமாண்டத்தைக் கொட்டியிருக்கும் 'ஸ்பைடர் மேன்' உங்களைக் கவரும்.

## ஸ்பைடர்மேன்-2



## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வன் அஜய்

**24.07.2004**



திருகோணமலை - ஒந்தாச்சிமடத்தைச் சேர்ந்த திரு-திருமதி ரமேஷ்குமார் சுரேஜினி- தம்பதிகளின் செல்வப் புதல்வன் அஜய் தனது முதலாவது பிறந்த தினத்தை 24.07.2004 அன்று London Croydon இல் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். அன்புச் செல்வம் அஜய் குட்டியை லண்டனில் உள்ள அன்பு அப்பா - அம்மா, சுரேஸ் மாமா, சத்தியமூர்த்தி மாமா, தாசன் மாமா, சித்ரா மாமி, ரஞ்சி மாமி, நந்தினி மாமி, ரீதன், இளங்கோ, கிருஷாந், சிவஷாந் அத்தான்மார், கவிதா மச்சாள் ஆகியோரும் இலங்கையில் திருகோணமலையில் வசிக்கும் அப்பப்பா - அப்பம்மா, மோகன் பெரியப்பா - ரதி பெரியம்மா, ஷோபனா, மேனகா, மேகலா அக்காமார் மற்றும் ஒந்தாச்சிமடத்தைச் சேர்ந்த அம்மப்பா - அம்மம்மா, சின்ன அம்மம்மா, விக்னேஸ் குடும்பம், இராஜேஸ் குடும்பம், இராஜன் குடும்பம் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் திருகோணமலை காளியம்மன் அருளும், ஒந்தாச்சிமடம் அரசடிப் பிள்ளையார் அருளும் பெற்று, பல்கலைகளும் கற்று, பல்லாண்டு காலம் வளமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல் - ந. ரமேஷ்குமார் (லண்டன்)

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்



பொன் விழாக் காணும்
திருமதி எட்வேட்

**26.07.2004**

அன்னை என்ற உறவிருந்தால் -
அகிலத்தில்
எந்த உயிர்தான் இன்னலுறும்.
அந்த உயிர் இருப்பதனால் -
இந்த
உலகு என்ன விலை பெறும்.
பொன்விழாக் காணும் எங்கள்
பவளமே
வெள்ளிவிழாக் காணும் மகன்
அமலனுடன்
நூறாண்டு வாழ
வாழ்த்துகின்றோம்.
எங்கள் சகோதரன் - அமலனே
அன்னை வேளாங்கன்னியின்
அருள் பெற்று
சகல செல்வங்களும் பெற்று
இருவரும்
நீடூழி வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.
- வாழ்த்துக்களுடன்
குடும்பத்தினர்,
நண்பர்கள்.

தொடர்பு,
ANPU 008@HOTMAIL.COM
ANBU 0008@YAHOO.COM



வெள்ளி விழாக் காணும்
திரு எட்வேட் அமலதாஸ்



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை நெல்சன் பிளேஸ், 16 A ஆம் இலக்கத்தில் டிடி என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் நாவலையில் உள்ள சமனல கிராபிக்ஸ் அச்சகத்தில் ஜூலை 31ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.